விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 தை 27 செவ்வாய்க்கிழமை (10.02.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 053

# எங்கள் உறவுகளை மீட்டுக் கொடு!

(கொழும்பு)

காணாமல் போன தம் உறவுகளை மீட்டுத் தரக்கோரியும், அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும், பாதிக்கப்பட்ட மக்கள் யாழில் ஒன்றுகூடி நேற்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். மேலும் சர்வதேச விசாரணைக்கு வலுச் சேர்க்கும் வகையிலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன் போது உரத்த கோஷம் எழுப்பியிருந்தனர். (24ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச விசாரணையே தேவை
## யாழில் நேற்று கவனயீர்ப்பு போர்






முன்னிலை சோசலிச கட்சியினர் நேற்று காலை கோட்டை புகையிரத நிலையத்தின் அருகில் அமைதி போராட்டத்தில் ஈடுபட்டனர். காணாமல் போனோர், கடத்தப்பட்டோர் மற்றும் அரசியல் கைதிகளுக்கு தற்போதைய அரசாங்கத்தில் நீதி கிடைக்கவில்லை எனத் தெரிவித்து அவர்கள் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

## சிறில் ராமபோசா இலங்கை விஜயம்

(கேப்ரவுண்)

தென்னாபிரிக்காவின் துணை ஜனாதிபதி சிறில் ராமபோசா இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இவர் எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் ஜெப் டயஸ் தெரிவித்துள்ளார்.

இவர் எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார என இலங் 23ஆம் பக்கம் பார்க்க....

## பொலிஸ் அதிகாரிக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போக்குவரத்து பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி சமிந்த டி சில்வா இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்றைய தினம் இடமாறம் செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் திணைக்களம் 23ஆம் பக்கம் பார்க்க....

## வெளி.இலங்கையருக்கு ஓய்வூதியத் திட்டம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இரண்டு வருடங்கள் வெளிநாடுகளில் தொழில்புரிந்துவிட்டு நாடு திரும்பியதன் பின்னர் ஓய்வூதியத்தை பெற 23ஆம் பக்கம் பார்க்க....

## அரசின் புதிய குற்றச்சாட்டுகளுக்கு முன்னாள் ஜனாதிபதி மறுப்பு!

(கொழும்பு)

அரசாங்கத்தினால் சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களை மறுப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ தெரிவித்துள்ளார். ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் அவர் இந்தக் குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ளார்.

மக்கள் மத்தியில் எனக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் நாளுக்கு நாள் அரசாங்கம் என் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றது.

அதி சொகுசு விமானம் ஒன்றை கொள்வனவு செய்து பயன்படுத்த திட்டமிட்டிருந்ததாக சுமத்தப்படும் குற்றச்சாட்டில் உண்மையில்லை.

விமான நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட விமானத்தில் சில ஆசனங்களை அகற்றி முககிய பிரபுக்கள் பயன்படுத்தக் கூடிய ஓர் தொகுதியை 24ஆம் பக்கம் பார்க்க....

## சவூதியில் மூவருக்கு மரண தண்டனை

(ரியாத்)

சவூதி அரேபியாவில் கொலை குற்றச்சாட்டு ஒன்றுடன் தொடர்புடைய மூன்று இலங்கையருக்கு மரணதண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது

இவர்கள் மூவரும் ராகம, மஹவ மற்றும் தெஹிவளையை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 23ஆம் பக்கம் பார்க்க....

## போர்க்குற்ற விசாரணை குறித்து புதிய அரசில் நம்பிக்கை இல்லை

## ஆசிய மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து புதிய அரசாங்கம் தீவிர விசாரணைகளை மேற்கொள்ளும் என்று தமக்கு நம்பிக்கையில்லை என மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய பசுபிக்கிற்கான இயக்குநர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

அவர் அண்மையில் சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். 23ஆம் பக்கம் பார்க்க....

## நிலத்தடி நீர் ஆய்வு ஆரம்பம்

(கொழும்பு)

வட மாகாண சபையின் நிபுணர் குழு மற்றும் தூய நீருக்கான செயலணிகளின் ஏற்பாட்டில் சுன்னாகம் அனல் மின் நிலையத்தில் இருந்து கழிவு எணணெய் நிலத்தடி நீரில் கலந்து கொண்டுள்ளமை சம்மந்தமாக விஞ்ஞான ரீதியில் ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்ட இவ்வாய்வு நடவடிக்கைகளில் கொழும்பு பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் யாழ்.பல்கலைக் கழகம் ஆகியனவும், சர்வதேச தரத்திலான நீர்மாதிரிகளை சேகரிக் கும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் ஆகியன இணைந்து ஆய்வு நடவடிக்கை 24ஆம் பக்கம் பார்க்க....

## படையினர் தடுப்பில் மகள்! மீட்க கோரி தந்தை உருக்கம்

(யாழ்ப்பாணம்)

என்னுடைய பிள்ளை சிறையில் இருக்கும் புகைப்படம் பத்திரிகைகளில் வெளியானது. என்னுடைய மகள் உயிருடன் தான் இருக்கின்றாள். அவளை மீட்டுக்கொடுங்கள். என்னுடைய உறவினர்கள் எனது மகளை நேரடியாகவே கண்டுள்ளனர். காணாமல்போன என்னுடைய பிள்ளையை படையினரே அழைத்துச் சென்றனர் என தந்தை ஒருவர் தெரிவித்துள்ளார்.

காணாமல்போனவர்களின் உறவினர்கள் யாழ். 24ஆம் பக்கம் பார்க்க....

## எனக்கு அழைப்பில்லை



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பிரதமர் வேட்பாளராக போட்டியிடுமாறு தனக்கு இதுவரையிலும் அழைப்பு விடுக்கப்படவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பியை பார்வையிட்டதன் பின்னர், அங்கு குழுமியிருந்த ஊடகவியலாளர்களிடமே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நான் திஸ்ஸ அத்தநாயக்க, பிரேமலால் ஜயசேகர ஆகியோரை பார்வையிடுவதற்கே வருகைதந்தேன். ஜயசேகரவை குருவிட்ட சிறைச்சாலைக்கு கொண்டு 24ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வலி வடக்கில் மீளக் குடியமர்த்தி தொழில் நடவடிக்கைகளுக்கு அனுமதியுங்கள்

## மயிலிட்டி கடற்றொழிலாளர்கள் அமைச்சர் ஜோசப்பிடம் கோரிக்கை

(கொழும்பு)

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள வலி வடக்கில் மக்களை மீளக்குடியமர்த்தி தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதியளிக்க வேண்டுமென மயிலிட்டி கடற்தொழிலாளர்கள் யாழ் வந்த மீன்பிடி அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேராவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ் பிரதேச செயலக கட்டடத் திறப்பு விழா நேற்று பிற்பகல் மேற்படி பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டிடத்தைத் அமைச்சர் திறந்து வைத்தார்.

இதன் பின்னர் யாழ் மாவட்ட கடற்தொழிலாளர்களைச் சந்தித்து தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடியிருந்தார். இதன் போது கடற்தொழிலாளர்கள் மேற்கண்டவாறு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதன் போது மேலும் தெரிவித்ததாவது,

யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இலங்கையின் மொத்த தேசிய மீன்பிடியில் வடக்கு மாகாணத்தின் பங்கு 49 சதவீதமாக காணப்பட்டது. போரின் பின்னர் அது 7 வீதமாக பாரியளவில் வீழ்ச்சி கண்டது. இதன் பின்னரும் 17 வீதமாக உயர்வடைந்த போதிலும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையின் காரணமாக மீண்டும் பாரியளவில் வீழ்ச்சி ஏற்பட்டது.

எமது சந்ததிக்கு எதுவுமே இல்லாத வகையில் இந்திய மீனவர்கள் எமது கடல் வளங்களைச் சூறையாடிச் செல்கின்றனர். எமது கடல் வளத்தில் நாம் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடாதிருக்க இந்தியாவைச் சேர்ந்த மீனவர்கள் ஈடுபட்டு கடல் வளத்தை முற்றாக அழிக்கின்றனர்.

இப் பிரச்சினைகள் தொடர்பில் இந்திய- இலங்கை அரசுகள் பல தடவைகள் பேச்சுக்களில் ஈடுபட்ட போதிலும் அதில் எந்தவித முன்னேற்றமும் இதுவரையில் ஏற்படுத்தப்படவில்லை. ஆனால் பேச்சுக்களின் போது பல்வேறு வாக்குறுதிகள் இணக்கப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

அதாவது இந்திய மற்றும் இலங்கை தரப்பினர்களுக்கு இடையில் பேச்சுக்கள் இடம்பெற்றன. இத்தகைய பேச்சுக்களில் இணக்கப்பாடுகளும் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் அத்தகைய இணக்கப்பாடுகளை இரண்டு நாடுகளினதும் அரசாங்கங்களும் உதாசீனம் செய்திருந்தன.

ஆகவே அனைத்து மீனவர்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் வெளிப்படையான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அத்தோடு எமது கடலில் நாம் எங்கும் தடையின்றி தொழில் செய்யும் நிலை ஏற்படுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக இலங்கையில் கடல் வளம் கொழிக்கும் துறைமுகங்களில் ஒன்றான மயிலிட்டி இறங்கு துறை தொழில் செய்ய முடியாத வகையில் தற்போது இராணுவக் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இதே போன்று விவசாய நிலங்களையும் படையினர் ஆக்கிரமித்து தாம் தொழில் செய்து வருகின்றனர். ஆகவே அவற்றையும் விடுவித்து மக்களை குடியமர்த்த வேண்டும்.

இவ் இறங்குதுறையை விடுவித்து தொழில் இன்றித் தவிக்கும் எம்மவர்களை தொழில் ஈடுபடுவதற்கு அனும திக்க வேண்டும். இங்கு மூன்று கிராம சேவகர் பிரிவுகளில் சுமார் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீன்பிடித் தொழிலையே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். தற்போது அவர்கள் கூலித் தொழிலை மேற்கொண்டே தமது வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

எனவே எமது பிரச்சினைளை கேட்டறிந்து கொண்டு செல்வது மட்டுமல்லாது உரிய நடவடிக்கையை விரைவாக மேற்கொண்டு எமது கடலில் நாம் தொழில் செய்து நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ்கின்ற நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் அமைச்சரிடம் மேலும் கோரிக்கை விடுத்தனர். (செ-4)

## மகிந்த கஹதகம பொலிஸாரால் கைது

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் சுயதொழில் சம்மேளன தலைவராக செயற்பட்ட மகிந்த கஹதகம நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுயதொழில் திட்டங்களுக்காக பெற்ற பணத்தை பிழையான வழியில் பயன்படுத்தியதாக சந்தேகத்திலே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுயதொழில் சம்மேளன தலைவர் கஹதகம, மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் பிரசித்தமாக கருதப்பட்டவர். அத்துடன் எதிர்க்கட்சிகளுக்கு எதிரான போராட்டங்களில் முன்னின்று செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## போலி விசா வைத்திருந்த குற்றம் சி.ஐ.டியினரால் இளைஞர் கைது

(கொழும்பு)

கட்டாரில் இருந்து இலங்கை வந்த யாழ் இளைஞன் ஒருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினால் கட்டுநாயக்கவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கடந்த 7-ம் திகதி கட்டார் விமான சேவைக்குச் சொந்தமான கியு.ஆர். 660 ரக விமானத்தின் மூலம் டோஹா கட்டார் ஊடாக இத்தாலிக்குச் செல்லும் நோக்கில் இலங்கையில் இருந்து புறப்பட்டிருந்தார்.

எனினும் குறித்த நபர் போலி ஆவணங்களை சமர்ப்பித்து இத்தாலிக்குச் செல்ல முற்பட்டதாக தெரிவித்து கட்டார் அதிகாரிகளால் நாடு கடத்தப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் நாடு திரும்பிய குறித்த நபரை ஸ்ரீ லங்கா குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இத்தாலியிலுள்ள நண்பர் ஒருவரால் குறித்த யாழ்ப்பாண இளைஞனுக்கு 6 மாத கால விசா வழங்கப்பட்டுள்ளாகவும், இதற்காக போலி ஆவணங்களும் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள நபரை நீர்கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதேவேளை கடந்த வாரத்தில் இதே போன்று மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் நாடு திரும்பிய நிலையில் கட்டுநாயக்க விமான நிலைய புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)



விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்கவை பார்வையிடுவதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்றார். நேற்று திங்கட்கிழமை அங்கு சென்ற மகிந்த, திஸ்ஸ அத்தநாயக்கவைச் சந்தித்து நலம் விசாரித்தார். (செ-11)


## பார்வையற்ற, பார்வைக்குறைபாடுடைய மாணவர்களுக்கான வாழ்வக அனுமதி-2015

2015-ம் ஆண்டுக்கான பார்வையற்ற, பார்வைக்குறைபாடுடைய மாணவர்களை வாழ்வகத்தில் இணைத்துக் கொள்ளவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. துங்குமிடம், உணவு, கல்வி வசதிகள், ஏனைய வசதிகள் யாவும் முற்றிலும் இலவசமாகவே வழங்கப்படும். பார்வையற்ற பிள்ளைகளும் ஏனைய பிள்ளைகளுக்குச் சமமாகக் கல்வியில் முன்னேறக்கூடிய வகையில் உரிய வாய்ப்பு வசதிகள், வழிகாட்டல்கள் வழங்கப்படும்.

பார்வையற்ற பார்வைக்குறைபாடுடைய பிள்ளைகளைக் கொண்டுள்ள பெற்றோர்கள் தமது பிள்ளை பற்றிய விபரங்களுடன் எதிர்வரும் 28.02.2015க்குப் பிந்தாமல் தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் முகவரியுடன் கடிதம் மூலமாகவோ அன்றி நேரிலோ தொடர்பு கொள்ளவும்.

தலைவர், வாழ்வகம்,
சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.
தொலைபேசி:-021 224 0146

(சி-072)



## சாவகச்சேரி பிரதேசசபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல்-2015

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01-ம் திகதிமுதல் சாவகச்சேரி பிரதேச சபைக்கு அனுமதிக்கப்பட்டஆளணி விபரங்களுக்கமையவும், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 21.01.2015-ம் திகதிய NP/05/01/US/Vf/AI/05-ம் இலக்க கடிதத்திற்கமைவாகவும், கீழ் குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும்

ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி இல | பதவிகள் | வெற்றிடம் | 2007.08.24-ம் திகதிய அரசாங்கநிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006(IV) இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் |
|---|---|---|---|
| 01 | சுகாதாரத் தொழிலாளி | 02 | PL-1-2006-A, (11730-10x120-10x130-10x145-12x160-17600) |
| 02 | காவலாளி | 01 | PL-1-2006-A, (11730-10x120-10x130-10x145 12x160-17600) |

**சேவை நிபந்தனைகள்:**

1.இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும்.
2.ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3.நியமனம் பெறுபவர்கள் மூன்று வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத்தகைமைகள்:**

1.விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2.விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர் வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.
3.நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4.விண்ணப்பதாரி சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தரவசிப்பிடத்தினை கொண்டவராக இருத்தல் வேண்டும். (வதிவிடச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும்.)

**கல்வித்தகைமை:**

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் 2 அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் 6 பாடங்களில்

சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**தெரிவுசெய்யப்படும் முறை:**

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவினால் நேர்முகப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

1.சாவகச்சேரி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா இருபதைச் செலுத்திவிண்ணப்பப் படிவத்தைப் பெற்று, பூரணப்படுத்தி தகைமைகளுக்காதாரமான சான்றிதழ்களின் பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
2.விண்ணப்பத்தில் உரியமுறையில் தேவையானதகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3.தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்பட்டு செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
4.ஆட்சேர்ப்புதிட்டவிதிமுறைகளின் படிவிண்ணப்பதாரிவிண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவரென நியமனத்திற்கு முன்னரோ, நியமனத்தின் பின்னராகவோநியமனத்தின் போதோஅல்லதுமுன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி 25.02.2015ம் திகதியன்றோ அல்லது அதற்குமுன்பாகவோ எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.**

திகதி:-10.02.2015

செல்வி தியாகராசா தர்சினி
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை,
கொடிகாமம்.

(சி-071)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் பிரதமருக்கு இல்லை

## எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா தெரிவிப்பு



(கொழும்பு)

**நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு மட்டுமே இருக்கின்றது என்று தெரிவித்துள்ள எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான ஜோன் செனவிரத்ன, பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின அச்சுறுத்தல் அர்த்தமில்லாதது என்றும் தெரிவித்துள்ளார்.**

பொது ஒழுங்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை, வெற்றிய டையுமாயின் நாடாளுமன்றத்தை கலைத்து விடுவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் நடைபெற்ற வைபவத்தின் போது பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்தார்.

பிரதமரின் அந்த அறிவிப்புக்கு பதிலளித்த, எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான ஜோன் செனவிரத்ன, நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் பிரதமருக்கு இல்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியினால் மட்டுமே நாடாளுமன்றத்தை கலைக்க முடியும் எனவும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதற்கு முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்தாலோசிக்கப்பட்டதா என்ற கேள்விக்கு பதிலளித்த ஜோன் செனவிரத்ன, இது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற குழு எடுத்த தீர்மானமாகும்.

இதுதொடர்பில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியிடம் கலந்தாலோசிக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## யூரியா தேநீர் அருந்திய மாணவர்கள் வைத்தியசாலையில்

நீர்கொழும்பு, தொன்பொஸ்கோ கைத் தொழில் பயிற்சி நிலையத்தில் தங்கியிருந்து பயிற்சி பெற்று வரும் மாணவர்கள் 27பேர் திடீர் சுகவீனமுற்ற நிலையில் நீர்கொழும்பு வைத்தியசாலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை அனுமதி க்கப்பட்டுள்ளனர்.

குறித்த பயிற்சி நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை வழங்கப்பட்ட தேநீரை அருந்திய பின்னரே இம்மாணவர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சீனி என்று எண்ணி யூரியா பசளையை தேநீரில் கலந்தமையினாலேயே அதனை அருந்திய மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ள னர் என்று விசாரணைகளிலிருந்து தெரிய வந்ததாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-5)


**வாழ்க்கையில் வெறுப்பா?**

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.

காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது

**கைகொடுக்கும் நண்பர்கள்**
104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
**021 222 8117, 0779008776**

(சி-9913)


# ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை அழிக்க சூழ்ச்சி
# ஜனாதிபதியின் நடிப்பு சில காலங்களுக்கே


**வேலையாட்கள் தேவை**

எமது ஸ்தாபனத்துக்கு நீர்கொழும்பில் தங்கியிருந்து வேலைசெய்வதற்கு வேலையாட்கள் தேவை

- மாதவேதனமாக ரூபாய் 24,000/= வழங்கப்படும்.
- இலவச தங்குமிட வசதி உண்டு.
- ஆண்கள் மட்டும். வயது 18 – 25 வரை

தொடர்பு: **கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்**
11A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். **T.P 021 222 3857**

(9447)


## விதுர எம்.பி.கூறுகிறார்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சுற்றிக்கொண்டிருப்பது மிகப்பெரிய ஒப்பந்தக்காரர்கள் மற்றும் கடத்தல்காரர்கள் எனவும் இந்த நல்லாட்சியின் நாடகம் இன்னும் சில காலங்களில் வெளியாகும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

சுதந்திர கட்சியினர் மீது சேறு பூசுகின்ற மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை விநி யோகம் செய்ய தற்பொழுது சூழ்ச்சி இடம் பெறுகின்றது.

இவர்கள் ஜனாதிபதியுடன் இருப்பது பாவங்களுக்கு மன்னிப்பு பெற்றுக்கொள்வதற்கே. ஜனாதிபதியை சுற்றியிருப்பது மிகப்பெரிய ஒப்பந்தக்காரர்களும் கடத்தல் காரர்களுமே. அதனால் சுதந்திர கட்சி மீது சேறு பூசுவதற்கு எதிராக ஜனாதிபதி நடவடிக்கை மேற்கொள்ளமாட்டார்.

இந்நாட்டு மக்களுக்கு இன்னும் சிறிது காலத்தில் புரியும், நல்லாட்சியின் மைத்திரி யுகத்தின் நாடகம் என்னவென்று அதனால் நாம் தொடர்ந்து செல்வோம் என்று தான் என்னால் சொல்ல முடியும் என விதுர விக்ரமநாயக்க இங்கிரியவில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு தெரிவித்துள்ளார். (இ-5)


**31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்**



கடந்த 12.01.2015 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் முருகேசு கணபதிப்பிள்ளை**
**(ஓவசியர்)**

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (11.02.2015) புதன்கிழமை காலை 5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் சபிண்டீகரண நிகழ்விலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலர் மடம்,
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

(சி-068)

இங்ஙனம்
குடும்பத்தினர்.


## இராசி பலன்

10.02.2015
(தை 27, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு,
சஷ்டி பிற்பகல் 4.09 மணிவரை
சித்திரை முற்பகல் 11.10 மணிவரை
இராகுகாலம் 3.34-5.04 மணிவரை
சுபநேரம் 11.04-12.34 மணிவரை

வளவன்

**மீனம்** – காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது, சேமிப்பில் சிறிது கரையலாம்.

**மேடம்** – உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், மறக்க முடியாத இனிய சம்பவங்கள் இடம் பெறலாம், பொதுவாழ்வில் மதிப்பும், மரியாதையும் உயரும் நாள்.

**இடபம்** – வியாபாரம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கொடுக்கல் -வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மிதுனம்** – நன்மைகள் நாடி வரும்நாள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த்தொடர்புகள் அதிகரிக்கும்,பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**கும்பம்** – முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்,பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம்.

**கடகம்** – தேவைகள் பூர்த்தியாகும் நாள், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**மகரம்** – செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்,சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்,வருமானம் போதுமானதாக இருக்கும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்,

**சிம்மம்** – உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** – நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள்,செல்வநிலை உயரும் வாய்ப்புண்டு, உறவினர்களின் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள்,பயணங்கள் கை கூடும்.

**விருச்சிகம்** – செலவுகள் தாராளம் காட்டுவீர்கள், குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், எடுத்த காரியங்களில் [illegible] வேண்டிய நாள்.

**துலாம்** – திட்டமிட்ட காரியங்களில் சில மாற்றங்களைச் செய்யமுற்படுவீர்கள்,புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது,சுப [illegible]கள் கூடும் நாள்,போசன சுகமுண்டு.

**கன்னி** – சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்,தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வீட்டுத்தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், வாக்குமேன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 142

## மனக்கோட்டைகளைத் தகர்த்தல்!

....உங்கள் கணவனோ அல்லது மனைவியோ கடவுளின் ஒரு படைப்பு. உங்கள் படைப்பு கடவுளின் படைப்புடன் போட்டியிட முடியர்து! அவரது படைப்பே வெல்லும்! மக்கள் அவர்களது கனவுகனை நிறைவேற்றிக் கொள்ள மற்ற கீழ்தரமான மாற்று வழிகளைத் தேடிச் செல்ல ஆரம்பித்து விட்டார்கள்.

இன்று சமூகத்தில் மிகவும் அதிகமான அளவில் ஆபாச படங்கள் கட்டுபாடற்ற கற்பனைகள் முறை தவறிய நடத்தை முதலியவை நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. மாறாக அது மேலும் கனவுகளையும் வழி தவறுதலையுமே உருவாக்கின்றது அவ்வளவே! ஆனால் கனவு காண்பதற்கான நிர்ப்பந்தம் மிகவும் அதிகமாக இருக்கிறது. ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் பலவீனமாகவும் அறிவு கூர்மையற்றும் இருந்தாலொழிய எதுவுமே ஒரு நிர்பந்தமாக ஆவதில்லை. நீங்கள் அறிவுக் கூர்மையானவராகி விட்டால் உங்களால் எதையும் விட்டு விட முடியும்.

(ஒரு பெண்மணி அவரது கருத்துக்களை பகிர்ந்து கொள்கிறார்) ஸ்வாமிஜி நீங்கள் எங்களை உள்ளவாறே இருக்கச் சொல்கிறீர்கள். ஆனால் அப்படியே எப்படி சமூகத்தில் வாழ முடியும்? நான் குடும்பம் சமூகம் ஆகியவற்றுக்கு ஏற்றபடி நாம் மாற வேண்டும் என்று நினைக்கிறேன்.

ஆம் அனைவருமே இந்தப் பிரச்சினைய நடை முறையில் எதிர் நோக்குகிறார்கள். நீங்கள் சொல்கிறீர்கள் ஸ்வாமிஜி நான் மற்றவருக்கு ஏற்றபடி நடந்து கொள்ள வேண்டும். நான் கேட்கிறேன் மற்றவர்கள் உங்களுக்கேற்றபடி நடந்து கொள்ளுமாறு நீங்கள் ஏன் உறுதி செய்யக்கூடாது? சமூகத்தில் நாம் ஒருவரையொருவர் சார்ந்திருக்க வேண்டும் என்பது உண்மைதான். வேறு வழியில்லை. ஆனால் உங்கள் எல்லைகளில் மிகவும் தெளிவாக இருங்கள்.

சுதந்திரமாகச் சார்ந்திருங்கள்!

எது உங்களுடைய எது மற்றவர்களுடையது என்பதில் தெளிவாக இருங்கள். மற்றவர்களைத் தொந்தரவு செய்யாமல் உங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ள உங்களாலான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளுங்கள்.

என்னால் குறைபாடுகளற்ற ஒரு முழுமையான தீர்வைத் தர முடியாதுதான். கணவன் மனைவிக்கிடையே உள்ள எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்கும் ஒரு மந்திரத்தை என்னால் கொடுக்க முடியுமானால் நான்தான் இந்த உலகத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற மனிதனாக இருப்பேன்!

(பலத்த சிரிப்பு மற்றும் கை தட்டல்)

ஸ்வாமிஜி மற்றவருடைய மூலாதார சக்கரத்தைத் திறக்க முடியுமானால் அவருடைய எதிர்பார்ப்புகளையெல்லாம் விட்டு விடுவார் இல்லையா?

(பரமஹம்ஸர் சிரிக்கிறார்)

அதை நீங்கள் எப்படிச் செய்வீர்கள்? உங்களுடைய எதிர்பார்ப்புக்களை விட்டு விடுவதை மட்டும் தான் உங்களால் உறுதிப்படுத்த முடியும். அதனால் நான்கு பேர ஒரு வீட்டைப் பகிர்ந்து கொள்வ தில் இருந்து அதை மூன்றாகக் குறைக்க முடியும்! மற்ற மனி தரை எவ்வாறு மாற்றுவது? இந்நாட்களில் திருமண ஆலோசகர்கள் மனோவசியத்தைக் கூட பகிர்ந்துரைக்கின்றனர். நான் அதை அடுத்தவரின் சுதந்திரத்தில் ஒரு உச்சபட்சத் தலையீடாகக் கருதுகிறேன். அது முற்றிலும் தவறானது. அன்றொரு நாள் ஒரு பெண் அவளது கணவருடைய கோபத்தின் அளவைக் குறைக்க விரும்பிய ஒரு சம்பவத்தை பற்றிப் படித்தேன். நீங்கள் படித்திருக்கலாம். சிகாகோ பகலைகழகத்தில் மூளையில் மின்கம்பிகளைப் பதிய வைப்பதன் மூலம் கோபத்தை முழுவதுமாகக் கட்டுப்படுத்துவதைப் பற்றிய சில ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. அவர்கள் இந்த ஆராய்ச்சியில் பங்கேற்க தன்னார்வ தொண்டர்களைக் கேட்ட பொழுது நூற்றுக்கணக்கான பெண்கள் வலு கட்டாயமாகத் தங்கள் கணவன்மார்களை அழைத்துக் கொண்டு வந்தாக அறிகிறோம்!

(சிரிப்பு)

பரிசோதனைக்குப் பிறகு 72 பெண்கள் (இது உண்மை) பல்கலைகழகத்திற்குத் திரும்பி வந்து தயவு செய்து இந்த மின் கம்பிகளை எடுத்து விடுங்கள்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி



# அதிசய உலகம்

**இல்லத்தரசிகளின் அனைத்து வேலைகளையும் அசறாமல் செய்யும் ஐந்தறிவு ஜீவன்....**



இங்கிலாந்தில் உள்ள Staffordshire பகுதியில் வசிக்கும் 56 வயதான Janet Burton> Rupert என்று பெயரிட்ட செல்ல நாய் ஒன்றை வளர்த்து வருகிறார். ஆறறிவு படைத்த மனிதன் தனது அன்றாட கடமைகளை செய்வதற்கு மற்றவர்களின் உதவியை எதிர்பார்க்கும் வேளையில் இந்த ஐந்தறிவு மிருகம் தனது வேலைகளை தானே கவனித்துக் கொண்டு, எஜமானியின் பல வேலை களுக்கும் உதவியாக இருந்து வருகிறது. போட்டோவுக்கு போஸ் கொடுப்பது என்பது Rupert-கு மிகவும் பிடித்தமான ஒன்று. 10 மாத குழந்தையாக இருந்த போதிலிருந்து போட்டோ என்றால் துள்ளிக்குதித்து ஓடிவருவான் Rupert. தற்போது 2.5 வயது நிரம்பியுள்ள ரூபர்ட், டாக்டர் டென்னிஸ் பிளேயர் என போஸ் தரும் பல் வேறு காட்சி கள் மனதை கவருகின்றன. அதே போல் அயர்ன்பண்ணுவது, கார் துடைப் பது, எஜமானரின் வீட்டு க்கு முன் படர்ந்திருக்கும் பனிக்குவியலை அகற்றுவது, காலை பத்திரிகை படிப்பது என பல வகைகளில் Rupert புத்திசாலியாக இருப்பது மிகுந்த ஆச்சர்யத்தை அளிக்கிறது. Rupert-ன் புத்திசாலித்தனம் குறித்து Janet கூறுகையில், நான் என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும், அதை பார்க்கும் Rupert, தனது இரு கால்களை மேலே தூக்கி வைத்து அதனை உற்று கவனிப்பான். அந்த அளவுக்கு புத்திக்கூர்மை உளளவன் Rupert என்றார். இதையடுத்து Rupert-காகவே பிரத்யேகமாக பேஸ்புக் வளைதள கணக்கை தொடங்கினோம். தங்களது அன்பை தெரிவிக்கும் விதமாக அவனது போட்டோவை கொண்டு தயாரிக்கப்பட்ட காலண்டர்களை வாங்கி சென்று தங்கள் வீடுகளில் மாட்டி வைத்துள்ளது இங்கே குறிப்பிடத்தக்கது.

# சமைப்போம் சுவைப்போம்

## பிரட்'' குலோப் ஜாமூன்



**தே.பொருட்கள்:-**

பிரட் ஸ்லைஸ் - 5 அல்லது 6

பால் - 1 கப்

சர்க்கரை - 1 கப்

தண்ணீர் - 1 கப்

வாசனைக்கு ஏலக்காய்

பிடித்தமான எஸன்ஸ், குங்குமப்பூ

**செய்முறை:-**

பிரட்டின் ஓரங்களை கட் பண்ணி எடுத்து விட்டு, கைகளினால் நன்றாக பிரட்டை பொடித்து, கொஞ்சம் கொஞ்சமாகப் பாலை விட்டுப் பிசைய வேண் டும். கைகளினால் உருட்டும் பதம் வந்ததும் பாலை நிறுத்தி விடவும். நன்கு பிசைந்த பிரட்டை சிறு சிறு உரு ண்டைகளாக உருட்டி வைக்கவும்.

அடுப்பில் சர்க்கரை தண்ணீர் இரண்டையும் ஒன்றாகக் கலந்து, ஒரு பாத்திரத்தில் போட்டு சர்க்கரை கரையும் வரை கொதிக்க விடவும். பின்பு இறக்கி வைத்து ஏலப்பொடி, எஸன்ஸ், குங்குமப்பூ போட வேண்டும். வாணலியில் எண்ணெய் ஊற்றி அடுப்பில் வைத்து மிதமான சூட்டில் உருட்டி வைத்த பிரட் உருண்டைகளை எண்ணெயில் போட்டு பொன் நிறமாக வறுத்து உடனே சர்க்கரைப் பாகில் போட வேண்டும். சிறிது நேரம் ஊறிய பிறகு மிகவும் சாஃப்டாக இருக்கும். இதை 10 நிமிடத்தில் தயாரித்து விடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவுகளுக்கு கட்டுப்படாவிடின் இராஜினாமா செய்வேன்!

## ஜனாதிபதி அறிவிப்பு



**(கொழும்பு)**
**கட்சியின் தலைமைக்கு கட்டுப்பட்டு உறுப்பினர்கள் நடக்காவிடின் கட்சித் தலைமைப் பதவியினை இராஜினாமா செய்துவிட்டு ஜனாதிபதியாக மட்டும் செயற்படும் நிலை ஏற்படும். அத்துடன் பாராளுமன்றத்தையும் கலைக்க வேண்டி வரும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது. புதிய அரசாங்கத்தின் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தினை ஆதரிப்பது தொடர்பில் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த பல உறுப்பினர்கள் வரவு செலவுத் திட்டம் தொடர்பில் சுயாதீனமாக முடிவினை எடுப்பதற்கு எமக்கு தலைமை அனுமதி வழங்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக மட்டும் நாம் செயற்படமுடியாது. இவ்விடயத்தில் எமது நிலைப்பாட்டுக்கு கட்சியின் தலைமை இணங்க வேண்டும் என்று சுட்டிக் காட்டியுள்ளனர்.

அத்துடன் பாராளுமன்றத்தை எதிர்வரும் ஏப்ரல் மாதம் கலைக்காது அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் வரை கொண்டுசெல்ல வேண்டும். தற்போது தேசிய அரசாங்கமே ஆட்சியில் உள்ளது. எனவே பாராளுமன்றத்தை கலைக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும் பல உறுப்பினர்களும் இந்தக் கூட்டத்தில் எடுத்துக்கூறியுள்ளனர்.

உறுப்பினர்களின் கருத்துக்களையடுத்து உரையாற்றிய ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன. இடைக்கால வரவு செலவுத் திட்டம் தொடர்பில் நீங்கள் விரும்பியவாறு கருத்துகளை. விமர்சனங்களை தெரிவித்திருக்கலாம். ஆனால் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும்என்று கட்சியின் தலைமை முடிவு செய்துள்ளது. எனவே இந்த முடிவுக்கு அனைவரும் கட்டுப்பட வேண்டும்.

அவ்வாறு கட்சியின் தலைமைக்கு நீங்கள் கட்டுப்படாவிடின் கட்சித் தலைமைப் பதவியிலிருந்து நான் இராஜினாமா செய்து ஜனாதிபதியாக மட்டும் செயற்படும் நிலை உருவாகும். அத்துடன் பாராளுமன்றத்தையும் கலைக்கவேண்டி வரும் என்று தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்திலேயே வரவு செலவுத் திட்டத்தினை ஆதரிப்பதற்கான முடிவு எடுக்கப்பட்டது. பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடைக்கால வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 163பேர் வாக்களித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மைத்திரி அரசின் நடவடிக்கைக்கு சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

படையினருக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்குவது தொடர்பான முன்னைய அரசாங்கத்தின் ஆணையை தற்போதைய அரசாங்கம் நீடித்துள்ளமையை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கண்டித்துள்ளது.

இதன்படி பொலிஸாரால் சில சந்தர்ப்பங்களில் கலவர நிலையை சமாளிக்க முடியாதபோது படையினரை வரவழைக்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த மாதம் இரண்டாம் திகதியன்று, கடந்த அரசாங்கம் பிறப்பித்திருந்த குறித்த கட்டளை முடிவடையவிருந்தது. எனினும் அதனை தற்போதைய அரசாங்கம் மீண்டும் ஒரு மாதகாலத்துக்கு நீடித்துள்ளது.

இந்தநிலையில் குறித்த கட்டளை அவசியமற்றது என்ற தமது நிலைப்பாட்டை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 70 | 40 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 150 | 180 | 230 | 130 |
| தக்காளி | 180 | 200 | 150 | 200 |
| மரவள்ளிக் கிழங்கு | 50 | 40 | 50 | 40 |
| கோவா | 100 | 100 | 90 | 120 |
| கரட் | 140 | 140 | 130 | 160 |
| பூசணி | 80 | 80 | 90 | 100 |
| புடோல் | 60 | 80 | 60 | 80 |
| வாழைக்காய் | 90 | 100 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 110 | 120 | 110 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 80 | 80 |
| பாகற்காய் | 60 | 140 | 100 | 140 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 50 | 120 |
| பயற்றங்காய் | 120 | 100 | 120 | 140 |
| லீக்ஸ் | 280 | 250 | 230 | 240 |
| பீற்றூட் | 100 | 150 | – | 100 |
| கறிமிளகாய் | – | 200 | 240 | 200 |
| முருங்கைக்காய் | – | 800 | – | – |
| போஞ்சி | 150 | 140 | – | 150 |
| கத்தரிதம்புள்ள | – | 40 | 70 | – |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 10 | 20 |
| தேசிக்காய் | 20 | 30 | 50 | 30 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40-45 | 40-50 |
| இராசவள்ளி | 100 | 120 | 90 | 120 |
| வெங்காயப்பூ | 80-120 | 120 | 90 | 140 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like

279

Search for people, places and things — Nagendram Home

சஜீவன் ஜெயச்சந்திரன்




அபி தெல்லிப்பழை




மோகன் தாஸ்




ரோஷி கந்தர்மடம்



கீர்த்தனா கருணாகரன்




சர்மி சர்மிளா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பத்துப் பவுண் தாலிக்கொடியை பட்டப்பகலில் பறித்த திருடர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் துணிகர தாலிக்கொடி அறுப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.


குடும்பப் பெண்ணொருவர் மரண வீடு ஒன்றுக்கு சென்று விட்டு பேருந்திலிருந்து இறங்கி ஒழுங்கை ஒன்றினூடாக நடந்து சென்று கொண்டிருந்த பொழுது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பெண்ணை முகத்தில் அறைந்து தாக்கி விட்டு தாலிக்கொடியை அறுத்துள்ளனர்.

பிரஸ்தாப பெண் கடும் போராட்டத்தின் மத்தியில் சத்தமிட்டு குளறியதால் அயலவர்கள் உதவிக்கு வந்த போதும் திருடர்கள் தாலிக் கொடியை அறுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளின் இலக்கத் தகட்டை மறைத்துக் கொண்டு வேகமாகத் தப்பிச் சென்றுள்ளனர்.

உதவிக்கு விரைந்தவர்கள் இலக்கத் தகட்டை அவதானிக்க முயன்ற போதும் முடியாமல் போயுள்ளது.

இதேவேளை கடும் போராட்டத்தின் மத்தியில் 10 பவுண் தாலிக்கொடியைப பறிகொடுத்துள்ள பெண்ணின் சங்கிலி அதிர்ஷ்டவசமாகத் தப்பியுள்ளது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-3)




# தமிழர்களை வழிநடத்த சரியான தலைமையில்லை

## கூட்டமைப்பு எம்.பி. ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

**தமிழர் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் மறைவிற்குப் பின்னர் தமிழர்களினை வழிநடத்த சரியான அடுத்த தலைமை இருக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்தார்.**

ஜி.ஜி.பொன்னம்பலத்தின் 38 ஆவது சிரார்த்த தின நிகழ்வு நேற்று முற்பகல் 9 மணியளவில் குருநகரில் நடைபெற்றது.

இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜி.ஜி., சேர்.பொன்னம்பலம் இராமநாதனின் மறைவிற்குப் பின் தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்ந்தார். இந்நாடு சிங்கள நாடு என்றும் இந்நாடு சிங்களவருக்கே சொந்தம் என்றும் சிங்களத் தலைவர்களிடையே ஒரு எண்ணம் வலுப்பெற்றநிலையில் சிங்களமகாசபையை பண்டாரநாயக்க தோற்றுவித்த போது சிறுபான்மையினரை ஒதுக்கும் திட்டமிட்ட சூழ்ச்சியை உணர்ந்த ஜி.ஜி.பொன்னம்பலம் தமிழரைப் பாதுகாக்கும் முறையிலும் தமிழரின் குரலாக இருக்கும் பொருட்டும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் 29.08. 1944 இல் நிறுவினார்.

அல்லலுற்றுக் கொண்டிருக்கும் இந்நிலையில் இலங்கைத் தமிழர்களின் இன்னல்களை உள்நாட்டில் இடித்துரைப்பதற்கும் அவர்களது குறைகளிற்கு நீதி பெற்றுக் கொடுப்பதற்கும் அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம் இப்போது இருந்திருந்தால் தகுந்த நடவடிக்கை எடுத்திருப்பார். அவரின் காலத்திற்குப் பின்பு அவருடைய தகைமைக்கேற்ற தகுந்த தலைமைத்துவத்தை வழங்கி தமிழர்களை வழிநடத்த சரியான அடுத்த தலைமை இருந்திருக்க வில்லை என்றே கூற வேண்டும்.

பெருமை மிக்க அம் மாபெரும் தலைவரது நினைவு தினத்தில் கலந்து கொண்ட உங்கள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# வாள்வெட்டு சந்தேக நபருக்கு பிணையனுமதி

(யாழ்ப்பாணம்)

வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை 25 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம், நேற்று திங்கட்கிழமை அனுமதியளித்தார்.

சாவகச்சேரி சங்கத்தானை பகுதியில் கடந்த சனிக்கிழமை வீட்டிலிருந்தவரை வெளியில் அழைத்த அறுவர் கொண்ட குழுவினர் வாள் வெட்டை மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் வாள்வெட்டுக்கு இலக்கான செல்வராசா உதயராசா (வயது 34) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், வாள்வெட்டுக்கு இலக்கான நபரின் வீட்டில் தங்கியிருந்த ஒருவரை கைது செய்து நீதிமன்றத்தில் திங்கட்கிழமை ஆஜர்ப்படுத்தினார்கள்.

சந்தேகநபர் சட்டத்தரணியூடாக பிணை வழங்குமாறு கோரியதை யடுத்து நீதவான் பிணை வழங்கினார். (இ)

# இடமாற்றம் வழங்கக் கோரி ஆசிரியர்கள் மகஜர் கையளிப்பு

-இடமாற்றம் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள 250 ஆசிரியர்கள் வடமாகாண கல்வியமைச்சருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வலயங்களால் விடுவிக்கப்பட்டும் யாழ்.மாவட்டத்துக்கு ஆசிரியர் இடமாற்றம் கிடைக்கப்பெறாத ஆசிரியர்கள் 08.02.2015 இல் ஒன்றுகூடி எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக இம்மனு தயாரிக்கப்பட்டு தங்களிடம் கையளிக்கப்படுகின்றது.

மேற்படி பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் ஆசிரியர்களான நாம் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக நியமிக்கப்பட்ட கஷ்ட, அதிகஷ்ட பிரதேசங்களில் மிகவும் அர்ப்பணிப்புடன் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியிலும் கடமையாற்றி எமது தனிப் பட்ட குடும்பநிலைமைகளையும் கருத்திற் கொள்ளாது அப்பிரதேசத்திலுள்ள மாணவர்களின் நலன் கருதி எமது கடமையினை மேற்கொண்டோம்.

எனினும்2014ஆம்ஆண்டுவருடாந்த இடமாற்றம் கோரப்பட்டு அதற்கு தகுதி பெற்று வலயங்களால் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் 2015 ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் காரணமாக 01.01.2015 இல் கிடைக்கவேண்டிய இடமாற்றம் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டது.

ஆனால் தேர்தல் நிறைவடைந்து ஒரு மாத காலமாகியும் எமது வருடாந்த இடமாற்றம் தொடர்பாக தங்களால் எவ்விதமான பதில்களும் கிடைக்கப் பெறாத நிலையில் எம்முடன் எமது குடும்பத்தினரும் உடல் மற்றும் மனதளவில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். இந்நிலையில் நாம் மிகுந்த மன உளைச்சலுக்கு மத்தியில் ஒன்று கூடி பின்வரும் தீர்மானங்களைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

01.01.2015 இல் வழங்கப்பட வேண்டிய வருடாந்த இடமாற்றம் இதுவரைஎமக்குவழங்கப்படவில்லை.

13.02.2015 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் எமக்கு சாதகமான பதில் வழங்கப்பட வேண்டும். நாம் கோரிய வலயத்தில் எமக்குரிய இடமாற்றம் வழங்கப்பட வேண்டும்.

20.02.2015 இற்குள் எமக்குரிய வருடாந்த இடமாற்றம் வழங்கப்படல் வேண்டும்.

நாம் கோரிய காலத்தில் சாதகமான பதில் கிடைக்கப்பெறாவிட்டால் 16.02.2015 இல் இருந்து தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம் என்று இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இம் மகஜரின் பிரதிகள் வடமாகாண ஆளுநர், முதலமைச்சர், மகளிர் விவகார பிரதியமைச்சர், வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர்,வடமாகாண கல்விப்பணிப்பாளர், மாகாணப் பொதுச் சேவைகள் ஆணைக்குழு, இலங்கை ஆசிரியர் சங்கம், தமிழர் ஆசிரியர் சங்கம் என்பவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ-5)




## பயிற்றப்பட்ட ஆசிரியர்-சான்றிதழ் வழங்கும் வைபவம்



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 2012 - 2014 கல்வியாண்டில் கற்கை நெறிகளை மேற்கொண்டு இறுதிப்பரீட்சையில் சித்தியெய்தியோருக்கான பயிற்றப்பட்ட ஆசிரியர் - சான்றிதழ் வழங்கும் வைபவம் கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

முன்னாள் அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளை, வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் உதவிச் செயலாளர் சுகந்தி செபஸ்ரியன் ஆகியோர் சித்தி பெற்ற மாணவர்களுக்குப் பதக்கம் அணிவித்துச் சான்றிதழ்களை வழங்கினர்.

நிகழ்வில் 458 ஆசிரிய பயிலுநர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இலங்கை முழுவதிலிருந்தும் பரீட்சைக்குத் தோற்றியோருள் கோப்பாய் ஆசிரிய கலாசாலையைச் சேர்ந்த சந்தனம் மோகன்ராஜ் என்ற ஆசிரிய பயிலுநர் அதிகூடிய பெறுபேறாகப் 14 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றிருந்தார்.

இவ்வாசிரிய பயிலுநர்கள் தமது சான்றிதழ்களை வலயக் கல்வி அலுவலகங்களில் சமர்ப்பித்து அவற்றின ஊடாக பரீட்சைத் திணைக்களத்திடம் கோரி உறுதிப்படுத்துவதைத் தொடர்ந்து இலங்கை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# திருட்டு மணலுடன் வசமாக மாட்டினர்

(கரணவாய்)

திருட்டுத்தனமாக மணல் ஏற்றிக்கொண்டு சென்றபொழுது நெல்லியடிப் பொலிஸாரிடம் வசமாக மாட்டினர் மணல் திருடர்கள்.

நேற்றுமுன்தினமிரவு 8 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அனுமதிப்பத்திரம் இன்றி கரவெட்டி யாக்கரு வீதியூடாக மணல் ஏற்றிக்கொண்டு சென்றபொழுது பொலிஸாரின் திடீர்ச்சோதனையில் அவர்கள் மாட்டிக்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் ஒருசில வாகனங்கள்மணலுடன்தப்பிச் சென்றுவிட்டதாகவும் கூறப்படுகிறது.

நெல்லியடிப் பொலிஸார் வாகன சாரதியையும் மணலையும் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை அனுமதியின்றி இரவு நேரங்களில் இவ்வாறு மணல் அகழ்வது தொடர்வதனால் தமது பிரதேச நிலவளம் அழிக்கப்படுவதாகவும் இதற்கு முற்றுப்புள்ளி வைக்குமாறும் பொதுமக்கள் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளனர். (இ-3-60)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சு.கவினர் குழப்பம் செய்தால் கன்னத்தில் அறையுங்கள்

## பொது மக்களுக்கு சந்திரிகா அறிவுரை

(கொழும்பு)

சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எந்தவொரு மக்கள் பிரதிநிதியாவது குழப்பங்களை விளைவித்தால் அல்லது முரண்பாடுகளை தோற்றுவித்தால், பொதுமக்களாகிய நீங்கள் அவர்களுடைய கன்னத்தில் அறையுங்கள் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நிட்டம்புவ பொது விளையாட்டு மைதானத்தில் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் இந்தக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான எமது பயணத்தை ஆரம்பிக்கும்போது எம்மோடு பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்திருக்கவில்லை. ஆனால் மக்களாகிய நீங்கள் எமக்கு ஆதரவாக இருந்தீர்கள். அதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சியும் இந்தப் பயணத்தில் பாரிய பங்களிப்பினைச் செய்திருந்தது.

மக்கள் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் கறைபடியாதவர்களாக இருப்பது மிக அவசியமாகும்.

அந்த வகையில் இந்த புதிய ஆட்சிப் பயணத்தில் இணைத்துக் கொள்வோமானால் நல்ல முறையில் பண்பானதும் ஒழுக்கமுள்ளதுமான நாட்டை கட்டியெழுப்ப முடியும்.

ஆகவே பண்பான நாட்டை கட்டியெழுப்பும் பயணத்தின்போது சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எந்தவொரு மக்கள் பிரதிநிதியும் குழப்பங்களை விளைவித்தால் அல்லது குழப்பகரமான சூழலை தோற்றுவித்தால் எந்தவிதத்திலும் தயங்காது பொதுமக்கள் அவர்களது கன்னத்தில் அறையுங்கள்.

மோசடிக்காரர்கள், குற்றமிழைத்தவர்கள் எவரும் மக்கள் பிரதிநிதிகளாக செயற்பட அருகதையற்றவர்கள், இந்த விடயத்தில் நான் உங்களோடு இருப்பேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# பேசும் படம் - 22




தெரிவிப்பது நாங்கள்!
தீர்மானிப்பது நீங்கள்!

குறிப்பு : அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.1
தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

அனுப்பியவர்:
அன்புஜன்

# இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு போட்டிப்பரீட்சை

(கொழும்பு)

இலங்கை பரீட்சை திணைக்களத்தால் கல்வி நிர்வாக சேவையின் தரம்-III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2013 (2015) நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 14, 15 ஆம் திகதிகளில் கொழும்பில் மட்டும் நடைபெறவுள்ள மேற்படி பரீட்சைக்கான அனுமதி அட்டைகளும் நேர அட்டவணைகளும் தகைமை பெற்ற சகல விண்ணப்பதாரிகளுக்கும் அவர்களின் முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் மேலதிக விபரங்கள் தேவைப்படுவோரும் முழுப்பெயர், முகவரிகளுடன் 0112785230, 0112177075 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு பரீட்சை ஆணையாளர் கேட்டுள்ளார். (அ)

# பொதுத்தேர்தலில் பிரதமர் ரணிலை தோற்கடிப்போம்

## எதிர்க்கட்சித் தலைவர் சூளுரை

**(கொழும்பு)— எதிர்வரும் பொதுத்தேர்தலின் போது பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை தோற்கடித்து புதிய அரசாங்கத்தை நிறுவப் போவதாக எதிர்க்கட்சி தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். எதிர்வரும் பொதுத்தேர்தல் தொடர்பில் பெப்ரவரி 14 ஆம் திகதியன்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.**



மைத்திரிபால சிறிசேன தொடர்ந்தும் ஜனாதிபதியாக நீடிக்கும் நிலையில், எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் அவர் வெற்றி பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரையே பிரதமராக நியமிப்பார் என்று சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஊவா மாகாண சபையில் முதலமைச்சர் ஹரின் பெர்னாண்டோவுக்கு ஆதரவளித்த கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக கட்சியின் தலைமை ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் ஊழல்களில் [illegible] புடையவர்கள் கட்சியில் இருந்து நீக்கப்படுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தில் எனக்கும் கூட சரியான அந்தஸ்து தரப்படவில்லை.

ஆனாலும் நான் கட்சியை விட்டு ஓடிவிடவில்லை. எந்தப் பதவி என்றாலும் கட்சிக்காக தொடர்ந்து போராடுவதே சிறந்தது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# மகிந்தவை விரட்டியது எரிக்சொல்ஹெய்மா?

## விமல் கேள்வி

சம்பந்தன், சம்பிக்க, அநுர குமார திஸாநாயக்க போன்றோர் எரிக் சொல்ஹெய்ம்க்கு தேவைப்பட்டதை செய்துள்ளார்கள் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

நாங்கள் வெற்றியடைந்துள்ளோம என்றும், மகிந்த ராஜபக்சவை நாங்கள் துரத்தி விட்டோம் என்றும் எரிக் சொல்ஹெய்ம் கூறுகிறார். அப்படி என்றால் ராஜபக்சவை விரட்டியது எரிக் சொல்ஹெய்மா?.

சொல்ஹெய்ம்க்கு தேவைப்பட்டுள்ளதே அநுரகுமார திஸா நாயக்கவுக்கும், சம்பந்தனுக்கும், சம்பிக்கவுக்கும் தேவைப்பட்டுள்ளது.

அப்படி என்றால் உண்மையில் அவ்வாறான ஒப்பந்தத்தை இவர்களே செய்துள்ளார்கள் என விமல் வீரவன்ச கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு தெரிவித்துள்ளார். (இ-5)

# கூற்பந்தாட்ட வீரர்களுடன் 50 ஆண்டுகளுக்கு முன்னர் காணாமற்போன சிலி விமானத்தின் பாகம் கண்டுபிடிப்பு

நீண்ட மலைத்தொடரான சிலியின் “ஆண்டஸ்“ மலையில் காற்பந்து வீரர்கள் குழுவுடன் 50 ஆண்டுகளுக்கு முன் காணாமற் போன விமானம் மலை ஏறுபவர்களால் கண்டுபிடிக்கபட்டது.

லேன் சிலி டக்ளஸ் டிசி-3 என்ற அந்த விமானம் ஏப்ரல் 3, 1961 அன்று காணாமற்போனது. அதன பின் அந்த விமானத்தை பற்றிய தகவல்கள் ஏதும் தெரியவில்லை. இந்த நிலையில் அந்த விமானத்தின் சிதைந்த பாகங்கள் தென் சான்டியாகோவிலில் இருந்து 300 கி.மீ தொலைவில் உள்ள மால் என்ற இடத்தில் மலை ஏறும் வீரர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

மலை ஏறும் குழுவினர் அளித்த விமானத்தின் புகைப்படங்களை நேற்று முன்தினம் சிலி நாட்டு தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

விமானத்தின் பாகத்தை கண்டறிந்த லியோனர்டோ அல்போர்னோஸ் என்பவர் கூறுகையில், தரை மட்டத்திலிருந்து 10 ஆயிரம் அடி உயரத்தில் விமானத்தின் பாகங்கள் கிடந்தன. அதேபோல் மனித எலும்புகளும் அங்கு காணப்பட்டது என கூறினார்.

விமானம் விபத்துக்குள்ளான போது அதில் 34 பயணிகள் பயணம் செய்திருந்தனர். அதில் கிரீன் கிராஸ் காற்பந்து அணியை சேர்ந்த பயிற்சியாளர் அர்னல்டோ வேஸகுவெஸ், எட்டு விளையாட்டு வீரர்கள், இதர அணி நிர்வாகிகள் மற்றும் நண்பர்கள் பயணம் செய்தனர். விமானம் காணாமற போனதற்கு பின் ஏறததாழ 50 ஆண்டுகள் கழித்து அது பற்றிய விபரம் தெரிந்துள்ளதால் அதற்கான உண்மை விடை கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தியசாலையில் இன்று சிரமதானம்

(மல்லாவி)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் துணுக்காய் பிரதேச இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பிரிவின் ஏற்பாட்டில் மல்லாவியிலுள்ள இலவச ஆயுள்வேத வைத்தியசாலை வளாகப் பகுதியில் சிரமதானப் பணியொன்று இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளதாக இலங்கைச் செஞ்சிலுவை சங்கத்தின் துணுக்காய் பிரிவுத் தலைவர் ஜீவகாருண்யம் அரவிந்தன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மல்லாவியில் உள்ள இலவச அரச ஆயுள்வேத வைத்திய சாலை வளாகத்தில் பொது மக்கள் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் துணுக்காயப் பிரிவு தொண்டர்கள் உட்பட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்தியர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட பலர் சிரமதானப் பணியை முன்னெடுக்கவுள்ளனர். இச்சிரமதானப் பணியில் இணைய விரும்பும் அனைவரையும் அன்றையதினம் வைத்திய சாலை வளாகத்திற்கு வருகை தருமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2-15)

## மெய்வல்லுநர் போட்டி

கிளி/தருமபுரம் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் எஸ். குருகுலராசா தலைமையில் தருமபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி அபிவிருத்தி உதவிப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (அ-2-282)

# 22.90 மில்லியன் ரூபா செலவில் கொம்புவைத்த குளம் புனரமைப்பு

முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான அவசரகால கருத்திட்டம் (CARE Project) எனும் நிதி மூலத்தில் 22.90 மில்லியன் ரூபா செலவில் வவுனியா மாவட்டத்தில் கொம்புவைத்தகுளம் புனரமைக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இக் குளம் புனரமைப்பினால் குளக்கட்டு பலப்படுத்தப்பட்டு துருசும் புதிதாக அமைக்கப்பட்டதுடன் வானும் சீரமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2 ஆயிரம் மீற்றர் கொங்கிறீற்று வாய்க்கால் சீரமைக்கப்பட்டதுடன் வயல் வீதிகளும் புனரமைக்கப்பட்டன.

இதன் மூலம் குளக்கட்டு உடைப்பெடுக்கும் அபாயத்திலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளதுடன் 220 ஏக்கர் விஸ்தீரணத்திற்கான விரயமற்ற நீர் விநியோகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் 40 விவசாய குடும்பங்கள் பயன்பெற்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)


# 32.30 மில்லியன் ரூபாவில் மாளிகைக்குளம் புனரமைப்பு

வவுனியா மாவட்டத்தில் உள்ள மாளிகைக்குளம் 32.30 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

இக் குளத்தின் குளக்கட்டு மற்றும் வாய்க்கால்கள் புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான அவசர கால கருத்திட்டம் மூலம் இவை புனரமைக்கப்பட்டுள்ளன.

இக்குளத்தின் குளக்கட்டு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் 900 மீற்றர் கொங்கிறீற்று வாய்க்கால் அமைக்கப்பட்டுள் ளது. அத்துடன் வாய்க்கால் கட்டுமானங்களும் மேற்கொள்ளப்பட்டு வயல் வீதிகளும் புனரமைக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் கட்டு உடைப்பெடுக்கும் அபாயத்திலிருந்து பாதுகாப்பு மற்றும் 300 ஏக்கர் விஸ்தீரணத்திற்கான விரயமற்ற நீர் விநியோகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் 68 விவசாய குடும்பங்கள் பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)





நோர்வே மாணவர்களின் கைகொடுப்பில் சாதிக்கும் சந்ததி செயற்றிட்டத்தின் எட்டாம் கட்டம் விசுவமடு பாரதி வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. 130 மாணவர்களை உள்ளடக்கிய இக் கட்டடத்தில் 119 மாணவர்களுக்கு பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதோடு 11 மாணவர்களுக்கு மிதிவண்டிகளும் வழங்கப்பட்டிருந்தன.




# சிறுபான்மையின சமூகத்தினர் ஒற்றுமையாக இருக்க வேண்டும்

## அமைச்சர் றிசாத் அட்வைஸ்

இன்றைய சூழ்நிலையில் தமிழ். முஸ்லிம் மக்களிடையே சிலர் பிரிவினையை ஏற்படுத்த பார்கிறார்கள். அண்ணன் சம்பந்தனும் சகோதரர் ஹக்கீமும் மலையகத் தலைவர்களும் இனங்களுக்கிடை யில் பிரிவினை ஏற்படாது பார்க்க வேண்டும் என வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற அமைச்சருக்கான வரவேற்பு விழாவின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்.

கட்சியில் இருந்து விலகி. பதவியில் இருந்து விலகி வந்தால் அது பற்றி பரிசீலிப்போம். இன்னொரு கட்சியில் இருந்து விட்டு எமது கட்சியில் வந்து இணைந்தால் நாம் அவர்களை சேர்ப்பதில்லை.

அடுத்த தேர்தலில் இந்த வன்னி தேர்தலில் எமது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இரண்டு ஆசனங்களை பெறும். இன்று சிலர் எம்மை வீழ்த்தலாம் என கனவு காண்கிறார்கள். அடுத்து வருகின்ற பாராளுமன்ற தேர்தலில் எமது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி 10 ஆசனங்களைப்பெற்று அடுத்த பாராளுமன்றத்தில் மூன்றாவது பெரும் சக்தியாக உருவெடுத்து. சிறுபான்மை மக்களின் உரிமைக் குரலாக வருகின்ற அரசோடு பேரம் பேசுவோம்.

ஆனால் அந்த வெற்றி பெற்று ஒரு மாதம் கடந்து விடவில்லை. சிலர் இனங்களுக்கிடையில் குழப்பத்தை ஏற்படுத்துகிறார்கள். அண்ணன் சம்பந்தனுக்கு சொல்கிறேன். சகோதரர் ஹக்கீமுக்கும் சொல்கின்றேன். மலையகத் தலைவர்களுக்கும் சொல்கின்றேன். நீங்கள் இனங்களுக்கிடையில் பிரிவினை ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நாங்கள் சிறுபான்மை சமூகங்கள் ஒற்றுமையாக வாழவேண்டும்.

கடந்த முப்பதாண்டு போர் பிரிவினையை ஏற்படுத்தி சென்றுள்ளது. நாம் முஸ்லிம். நாம் தமிழர் என்று எதனையும் சாதித்து விடமுடியாது. நாம் எங்களுக்குள் உள்ள சின்ன சின்ன பிரச்சினைகளை நாமே பேசி தீர்க்க வேண்டும். இனங்களுக்கிடையில் நல்லுறவை பேண வேண்டும். இதன் மூலமே இந்த அரசாங்கத்தோடு பேரம் பேசி சிறுபான்மை மக்களுக்கு தேவையானவற்றை பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார். (அ-2-250)

# உருத்திரபுரம் மகா வித்தி வயல் அமோக விளைச்சல்



கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலய வளாகத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை அமோக விளைச்சலைப் பெற்றுள்ள நிலையில். வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் அண்மையில் அறுவடை விழா நடைபெற்றுள்ளது.

மத்திய கல்வி அமைச்சால் விவசாய வளாகப் பாடசாலை என அங்கீகாரம் பெற்ற உருத்திரபுரம் மகா வித்தியாலயம் 20 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இதில் 3 ஏக்கர் பரப்பளவில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

அதிபர். ஆசிரியர். பெற்றோர்கள். மாணவர்கள் எனப் பாடசாலையின் சகல தரப்பினரும் கூட்டிணைந்து மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் கிடைக்கும் வருமானம் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் ஊடாகப் பாடசாலையின் அபிவிருத்திக்குச் செலவிடப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் பாடசாலை அதிபர் திருமதி.மீனலோஜினி சிவதாஸ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம். விவசாய ஆசிரிய ஆலோசகர் சி.இளங்குமார். கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.ஜெனார்த்தனன் ஆகியோருடன் ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோர் பங்கேற்று இருந்தார்கள். (அ-2)

# காப்புறுதி செய்த விவசாயிகளுக்கு

மத்திய அரசின் நிதியமைச்சின் கீழ் இயங்கும் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையின் ஊடாக 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் காப்புறுதி செய்திருந்த விவசாயிகள், அருகாமையிலுள்ள கமநல சேவை நிலையங்களில் விண்ணப்பங்களைப் பெற்று பூரணப்படுத்தி விரைவாக ஒப்படைக்குமாறு மேற்படி சபையின் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களின் பிரதிப் பணிப்பாளர் பி.பூரணச்சந்திரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

விவசாயிகள் ஓய்வூதியக் காப்புறுதி தொடர்பாக அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள புதிய நடைமுறைகள் நடப்பாண்டில் ஜனவரி மாதம் 14 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

எனவே இக்காலப் பகுதிக்கு முன்னர் விவசாயிகள் ஓய்வூதியக் காப்புறுதித் திட்டத்தில் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையினூடாக இணைந்துள்ளவர்கள் தமக்கு அருகாமையிலுள்ள கமநல சேவை நிலையத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி விரைவாக ஒப்படைக்க வேண்டும்.

அத்துடன் விண்ணப்பப்படிவத்துடன் தேசிய ஆள் அடையாள அட்டையின் நிழற்பிரதி அல்லது முதியோர் ஆள் அடையாள அட்டையின் நிழற்பிரதி மற்றும் காப்புறுதி பணம் செலுத்திய வங்கிப் புத்தகத்தின் முகப்புப்பிரதி உட்பட தொலைபேசி இலக்கம் என்பவற்றையும் ஒப்படைக்க வேண்டும்.

மேலதிக தகவல் தேவைப்படுவோர் அருகாமையிலுள்ள கமநல நேவை நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லை சந்தைப்படுத்துவதில் நெருக்கடி- விவசாயிகள் கவலை

(கண்டாவளை)


கண்டாவளை பிரதேசத்திற்குட்பட்ட பகுதிகளில் காலபோக நெற்செய்கை அறுவடை இடம்பெற்று முடிவடையும் நிலையில் அறுவடை செய்த நெல்லை சந்தைப்படுத்துவதில் விவசாயிகள் பல்வேறு இடர்பாடுகளை சந்திப்பதாகவும் இதனால் குறைந்த விலைக்கே நட்டத்துடன் விற்பனை செய்யவேண்டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக விவசாயிகள் தமது நெல்லை பராமரிப்பதற்கு இடவசதி இன்றியுள்ளதாகவும் சீரற்ற காலநிலை நிலவுவதால் அறுவடை செய்த நெல்லை உடனடியாக விற்பனை செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு நெல்லின் கொள்வனவு விலை 50 ரூபா என அரசு அறிவித்துள்ள நிலையில் நெல்லை கொள்வனவு செய்வதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களங்களோ அல்லது கூட்டுறவு நிலையங்களோ முன்வராத நிலையிலும் அதனை கொள்வனவு செய்வதற்கான உத்தரவாதத்தை அவை வழங்காத நிலையிலும் விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை களஞ்சியப்படுத்தி வைப்பதா? அல்லது குறைந்த் விலைக்கு விற்பனை செய்வதா? என்ற தீர்மானத்தை எடுக்க முடியாத நிலையில் உள்ளனர். இவ்வாறான நிலையில் நெற் செய்கை மேற்கொள்வ தற்கும் அறுவடை செய்வதற்கும் உரிய செலவீனத்தை நிவர்த்தி செய்வதற்காக விவசாயிகள்நெல்லைவிற்பனை செய்ய முற்படும் வேளையில் 70 தொடக் கம் 72 கிலோ வரையிலான நெல் ஒரு மூடையென நிர்ணயிக்கப்பட்டுள்ள போதிலும் கொள்வனவாளர்கள் 75 கிலோ வரையிலான நெல்லையே ஒரு மூடையென தீர்மானித்து கொள்வனவு செய்கின்றனர். இதனால் ஒவ்வொரு மூடைக்கும் மேலதிகமாக 3 கிலோ நெல்லை வழங்க வேண்டியுள்ளதாக விவசாயிகள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர். எனவே சம்பந்தப்பட்ட கமக்கார அமைப்புக்களும் நெல்சந்தைப்படுத்தும் சபையினரும். நெல்கொள்வனவு செய்வதற்கான விலையையும் அதற்கான நிறையையும் (ஒரு மூடை) உடனடியாகத் தீர்மானித்து விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை விற்பனை செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (அ-2-263)

# அக்கராயன் பிரதேசத்தில் மேம்பாலம் அமைக்கப்படும்

## நீர்ப்பாசன பிரதிப் பணிப்பாளர் சுதாகரன்



கிளிநொச்சி, அக்கராயன் பகுதியில் மேம்பாலம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன பிரதி பணிப்பாளர் என்.சுதாக ரன் தெரிவித்துள்ளார். அக்கராயன் குளத்திலிருந்து வான் பாயும் போது, திருமுறிகண் டியிலிருந்து வன்னேரிக்குளம் செல்லும் வீதியை ஊடறுத்து வெள்ளநீர் பாய்வதால், அக்கராயன் மத்திய பகுதிக்கும் அக்கராயன் கிழக்குப் பகுதிக்குமான போக்குவரத்து துண்டிக்கப்படுவதுடன், அக்கராயன் பிரதேச வைத்தியசாலையின் வாகனத்தின் மூலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாதநிலையுள்ளது. அக்கராயன் குளத்திலிருந்து குறைந்தது ஒரு வாரத்துக்கு வான் பாய்வதால் மக்களின் போக்குவரத்து முற்றாக இல்லாமல் போகின்றது. இதனால் இதற்கு நடவடிக்கை எடுத்து வான் வெள்ளம் பாய்கின்ற இடத்தில் மேம்பாலம் ஒன்றினை அமைத்துத்தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பில் கருத்து தெரிவித்த நீர்ப்பாசன பொறியிலாளர், "அக்கராயன் குளத்தின் வான்வெள்ளம் 600 அடி நீள வான் வழியாகவே வெளியேறுகின்றது. 25 அடி நீளமான தாழ்வான வீதியில் அமைந்துள்ள இந்த பாலத்தின் ஊடாக விரைவாக நீர் வெளியேற முடியாததன் காரணமாக வீதியை மூடி வெள்ளம் பாய்கின்றது. அந்த இடத்தில் மேம் பாலம் அமைப்பதன் மூலம் போக்குவரத்து தடைநீங்கும். வீதி அபிவிருத்தித் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து பாலம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.(அ-2)

### திருவையாறு பிரதேசத்தில்

# மணல் அகழ்வை தடுத்து நிறுத்துக!

(மல்லாவி)

**இரணைமடுக்குளத்திலிருந்து திருவையாறு கிராமத்தை ஊடறுத்துச் செல்லும் பிரதான நீர்ப்பாசனக் கால்வாயிலும் அதனை அண்மித்த பகுதிகளில் இருந்து கழிவுநீர் வெளியேறும் வடிகால்கள் உட்பட ஆள்நடமாட்டமற்ற பொதுமக்களின் காணிகளிலும் சட்டவிரோதமான மண், மணல் அகழ்வு தினமும் பலதடவைகள் உழவு இயந்திரங்கள்மூலம் கொண்டு செல்வதாகவும் இதனைத் தடுப்பதற்கு எவரும் முன்வரவில்லையெனவும் பாதிக்கப்பட்டுள்ள இப்பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.**

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

மேற்படி மண் மற்றும் மணல் கொள்ளையானது இரணைமடுக் குளத்திலிருந்து திருவையாறு கிராமம் ஊடாக உருத்திரபுரம் வரை செல்லும் பிரதான நீர்ப்பாசனக் கால்வாயிலும் இக்கால்வாய் செல்லுகின்ற வின்சன்வீதியை அண்மித்த பகுதி கிளைவடிகால்கள் உட்பட கழிவுநீர் கால்வாய்களிலும் இடம் பெற்று வருகின்றது.

இதேபோல் ஆட்களற்ற தனியார் காணிகளிலும் மண் கொள்ளையும் நடைபெறுகின்றது.

இரவு, பகல் என்று பாராது தினசரி உழவு இயந்திரங்கள் மூலம் பல தடவைகள் மண் கடத்தல் இடம் பெறுவதால் இப்பிரதேசங்களில் கனிய வளங்கள் சுரண்டப்படுவதுடன் பாரிய குழிகளும் ஏற்படுடுகின்றது.

அத்தோடு நிலத்தடி நீரும் பாதிக்கப்படுவதால் இப்பிரதேசம் வறட் சிக்கு உட்படுகின்றநிலைகாணப்படுகின்றது.

இது தொடர்பில் பல தரப்பினரிடமும் முறையிட்டும் பலன் கிடைக்கவில்லை எனப் பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே இவ்விடயத்தை வடக்கு மாகாணசபையின்விவசாயஅமைச்சர் பொ.ஐங்கரநேசன் கவனத்திலெடுத்து மண், மணல்கொள்ளையைத்தடுத்து நிறுத்தி எமது கிராம த்தை பாதுகாத்து தரவேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-15)

# அரச நாடகப்பிரதிகளை அனுப்பி வைக்கலாம்

(கிளிநொச்சி)

கலை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கைக் கலைக்கழகத்தின் நாடகக்குழு ஆகியன ஒன்றிணைந்து ஏற்பாடுசெய்யும் 2015 ஆம் ஆண்டிற்கான அரச சிறுவர் நாடக விழாவுக்கும் மற்றும் 2016ஆம் ஆண்டிற்கான அரச குறு நாடக விழாவிற்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கமைய அரச சிறுவர் நாடகப்பிரதிகள் மும்மொழி களிலும் ஏற்றுக்கொள்ளப்படு மென வும் பூரணப்படுத்தப்பட்ட மூன்று நாடகப்பிரதிகளை அனுப்பி வைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டு ள்ளது.

அத்துடன் அரசகுறு நாடகம் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் தயாரிக்கப்படுவதுடன் இதன் மூன்று பிரதிகளுடன்மூன்று சாரா ம்சப் பிரதிகளையும் அனுப்பி வைக்க வேண்டும்.

மேற்படி பிரதிகளை எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக செயலாளர், அரச நாடகக்குழு, கலாசார அலுவல்கள் திணைக் களம், செத்சிறிபாய, பத்தரமுல்லை கொழும்பு என்ற முகவரிக்கு அனு ப்பி வைக்குமாறு கலாசார அலுவ ல்கள் திணைக்களம் அறிவித்துள் ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை அந்தந்த மாவட்ட செயலகங்களில் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.(அ-2-272)




# கத்திக்குத்துக்கு இலக்கானவர் வைத்தியசாலையில்

(கனகபுரம்)

கத்திக்குத்துக்கு இலக்காகி படுகாயமடைந்த நபர் வயிற்றில் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் கிளிநொச்சி கோணாவில் மத்தியில் இடம்பெற்றுள்ளது.

இதில் மேற்படி இடத்தைச் சேர்ந்த சிங்கராசா யுவராசா வயது (27) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, தனது குடும்ப உறவினர் மீது நடத்தப்பட்ட கத்திக்குத்து தாக்குதல் தொடர்பில் எதிரணியிடம் விளக்கம் கேட்கச் சென்றவேளை அவரது வயிற்றில் கத்திக்குத்து வீழ்ந்துள்ளது.

இதனையடுத்து வயிற்றில் ஏற்றிய கத்தியுடன் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்ட அவருக்கு அறுவைச்சிகிச்சைமூலம்கத்திவெளியே எடுக் கப்பட்டது.நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (அ-2-259)

# கைவேலியில் உருளைக்கிழங்கு அறுவடை விழா





2014/2015 கால போகத்தில் புதுக்குடியிருப்பு விவசாயப போதனாசிரியர் பிரிவிலுள்ள 15 விவசாயிகளுக்கு 0.25 ஏக்கரிற்கான விதை உருளைக்கிழங்குகள் கடந்த டிசெம்பர் மாதம் வழங்கப்பட்ட நிலையில் அதற்கான அறுவடை விழா நேற்றைய தினம் புதுக்குடியிரு ப்பு விவசாயப் போதனா சிரியர் பிரிவிலுள்ள கைவேலியில் உள்ள விவசாயி ஒருவரின் வீட்டில் நடைபெற்றது.

இந்நிகழ்வு விவசாயப் போத னாசிரியர் ச.இலட்சுமிதரன் தலைமையில் நடைபெற்றதாக முல்லைத்தீவு விவசாயத்திணைக்களத்தின் பாடவிதானஉத்தியோகத்தர் மறுவயற்பயிர்கள் கு.கஜரூபன் தெரிவித்துள்ளார்.இதுதொடர்பில் அவர் தெரிவிக்கையில் புதுக்குடியிருப்பு விவசாயப் போதனாசிரியர் பிரிவில் 15 விவசாயிகளுக்கு விதை உருளைக்கிழங்குவழங்கப்பட்டு உருளைக்கிழங்கு செய்கை தொடர்பான பயிற்சிகளும் வழங்க ப்பட்டது.

இதன் போது Red lasoda இன உருளைக்கிழங்கு அறுவடை செய்யப்பட்டது.இவ்வினமானது நடுகை செய்து 75-80 நாட்களில் அறுவடையினை மேற்கொள்ள முடியும். இதன போது வயல்விழா நடை பெற்ற துண்டத்தில் விவசாயிகளால் எழுந்த மானமாக 10 செடிகள் தெரிவு செய்யப பட்டு அறுவடை செய்யப்பட்டதுடன் அவற்றின் விளைச்சல், வடிவம், பருமன், ஒரு செடியிலுள்ள கிழங்குகளின் எண்ணிக்கை, மேற்றோலின் நிறம் என்பன அவ்விவசாயிகளால் அக் களத்திலேயே ஒப்பிடப்பட்டது.இதன்போது செடியிலிருந்து 700-750 கிராம் ஆகவும்,10-11கிழங்குகளும் பெறப்பட டன.

அத்துடன் இப்பகுதி சந்தையில் இவ்வினக்கிழங்குகள் விற்பனைக்கு வருவது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்போது கருத்து தெரிவித்த பாடவிதான உத்தியோகத்தர் (ம.வ.ப) கு.கஜரூபன், புதுக்குடியிருப்பு கைவேலி கிராமத்தின் மண் மணல் கலந்த இருவாட்டி மண்ணாக உள்ளதால் போதியளவு காற்றூட்டம், உயர்வான நீர் வடியும் தன்மை, அதிகளவான சேதனப்பொருட்களின் சேர்க்கை என்பவற்றை கொண்டிருப்பதால் இவ் Red lasoda இனமானது கவர்ச்சியான தோற்றத்தையும், சிறந்த விளைச்சலையும் காட்டுவதால் இப்பகுதிக்கு இவ்வினம் பொருத்த மான தாக உள்ளது என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1065

## தேடி வந்த சியாங்!

முன்னொரு காலத்தில் வியட்நாமில் "சேதுங்' என்பவன் இருந்தான். அவன் ஒரு கூலி வேலைக்காரன். ஒரு சிறிய கீற்றுக் கொட்டகையில் குடும்பத்துடன் வசித்தான்.

சேதுங் தினமும் வேலைக் குச் சென்று, அன்றன்று கிடைக்கும் பணத்தில்தான் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தான். ஒருநாள் வேலை இல்லை என்றாலும் அன்று பட்டினிதான். எவ்வளவுதான் சிரமங்கள் ஏற்பட்டாலும், தன் கஷ்டங்களை வெளியே சொல்லமாட்டான்.

ஒருநாள், அவனுக்கு வேலை எதுவும் கிடைக்காமல் வீட்டில் இருந்தான். அப்போது, வீட்டு வாசலில் யாரோ முனகும் சத்தம் கேட்டது. சேதுங் ஓடிச் சென்று பார்த்தான்.

வயதான ஒருவர் மயங்கிக் கிடந்தார். சேதுங் அவரைத் தூக்கிக் கொண்டு குடிசைக்குள் வந்தான். முகத்தில் தண்ணீர் தெளித்ததும் அவர் விழித்தார். "நீங்கள் யார் அய்யா?" என்று சேதுங் கேட்டான்."என் பெயர் சியாங். நான் ஒரு பிச்சைக்காரன். மூன்று நாட்களாக எதுவுமே சாப்பிடவில்லை" என்றார் அவர். உடனே சமையல் அறைக்குச் சென்றான் சேதுங்.

ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் கஞ்சியுடன் திரும்பி வந்தான். "இதைக் குடியுங்கள் அய்யா. உங்களுக்குத் தருவதற்கு இது மட்டும் தான் இருக்கிறது" என்றவாறு கஞ்சிப் பாத்திரத்தைப் பெரியவரின் முன்னால் வைத்தான். பெரியவர் கஞ்சி முழுவதையும் ஆவலுடன் குடித்தார்.

பிறகு, கண்ணீர் மல்க சேதுங் கைப் பார்த்தார். "இளைஞனே... எத்தனையோ பணக்காரர்களின் மாளிகைகளில் ஏறி இறங்கினேன். பசைத் தண்ணீர்கூட தரவிலலை. ஆனால், இருந்த கொஞ்சக் கஞ்சியையும் நீ எனக்குத் தந்து விட்டாய். நாளையும் உணவு கொடு. அதற்கு அடுத்தநாள் நான் போய்விடுவேன்!" என்றார்.அப்படி இரண்டு நாட்கள் கடந்தன. மூன்றாவது நாள், முதியவர் புறப்பட்டார். போவதற்கு முன்பு சேதுங் கையும், அவன் மனைவி, மக்களையும் அருகே அழைத்தார். "வெகுகால தவத்தின் பயனால் எனக்கு ஒரு சக்தி கிடைத்து இருக்கிறது. எதிர்காலத்தில் நடக்கும் விடயங்களை என்னால் முன்கூட் டியே அறிந்துகொள்ள முடியும். சில தினங்களுக்குள் இங்கே ஒரு பெரிய வெள்ளப்பெருக்கு ஏற்படும்.


சுயநலக்காரர்கள் இறப்பார்கள். ஆனால், நல்லவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. அத னால், நான் உங்களுக்கு இந்த விதையைத் தருகிறேன். இதை நட்டு, நன்கு பராமரித்து வா!" என்றவர், ஒரு தர்ப் பூசணி விதையை சேதுங்கிடம் கொடுத்துவிட்டு, விடைபெற்றுச் சென்றார்.சேதுங், அன்றே அந்த விதையை மண்ணில் ஊன்றினான். நான்கு நாட்களுக்குள் அந்த விதை முளைத்து, வளர்ந்தது. யானை அளவுக்கு பெரிய தர்ப் பூசணியும் காய்த்தது.மறுநாளே அந்த ஊரில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. எல்லோரும் அந்த வெள்ளத்தில் மூழ்கினார்கள். ஆனால், சேதுங்கிற்கும் அவன் குடும்பத்திற்கும் எந்தத் தீங்கும் ஏற்படவில்லை. அவர்கள், அந்த தர்ப்பூசணியை வெட்டி, ஒரு படகு செய்தார்கள். அதில் ஏறி, தண்ணீரின் மீது பயணம் செய்தார்கள். வெள்ளம் ஏறாத ஒரு குன்றின் உச்சியை அடைந்தார்கள். சேதுங் தன் குடும்பத்துடன் அங்கேயே தங்கத் தொடங்கினான். சில நாட்கள் கழித்து முதியவர் சியாங், மீண்டும் அங்கே வந்தார். அவரைப் பார்த்ததும் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தான் சேதுங். சேதுங் பெரியவருக்கு அருமையான விருந்துக்கு ஏற்பாடு செய்தான்.



விருந்து முடிந்ததும் குடிலுக்கு வெளியே சென்றார் சியாங். திடீரென்று அந்தச் சம்பவம் நடந்தது. சியாங் நின்று இருந்த இடத்தில் ஒரு புனித உருவம். அவர்... புத்தர்! வணங்கி நிற்கின்ற சேதுங் கையும் அவன் குடும்பத்தையும் ஆசிர்வதித்தபடி புத்தர் சொன்னார். "நான் தான் பிச்சைக்காரனாக வந்தேன். பூமியில் இப்போதும் நல்லவர்கள் இருக்கிறார்களா என்பதை அறிவதற்காக வந்தேன். உங்களின் நல்ல மனதைக் கணடு மகிழ்கிறேன். உங்களுக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார்."இறைவா! ஊர் என்று இருந்தால் நல்லவர்களுடன் சுயநலக்காரர்களும் கலந்தே இருப்பார்கள். அவர்கள், தவறை உணர்ந்து மனம் மாறு வதற்கு சந்தர்ப்பம் தரவேண்டும். இப்போது இந்த ஊரில் எங்களைத் தவிரயாருமே இல்லை.

உலகம் எல்லோருக்குமா னது. இவ்வளவு பெரிய ஊரில்... நாங்கள் மட்டும் இருப்பது உறு த்தலாக இருக்கிறது. வெள்ளத்தில் சிக்கி இறந்தவர்களுக்கு உயிர் கொடுத்து, அவர்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் தர வேிண்டும" என்றான் சேதுங். கருணையுடன் புன்னகைத்த புத்தர். "உன் நல்ல மனதை நினைத்து மகிழ்கிறேன். அப்படியே ஆகட்டும். நீங்கள் இந்த ஊருக்கு சிறந்த வழிகாட்டிகளாக இருந்து, புகழுடனும் வளமுடனும் நீண்ட காலம் வாழ்வீர்கள்" என்று சொல்லிவிட்டு மறைந்தார். புத்தரின் ஆசி பெற்ற சேதுங்கும் அவன் குடும்பமும், மக்களுக்கு வழிகாட்டிகளாக இருந்து நீண்டகாலம் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள்.

## ஜோசப் லிஸ்டர்



ஜோசப் லிஸ்டர் இங்கிலாந்தில் உள்ள அப்டன் என்னும் ஊரில் 1827 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி பிறந்தார். தந்தை ஜோசப் ஜாக்சன் லிஸ்டர். இவர் நவீன உருப்பெருக்கியை உருவாக்கியவர். ஜோசப் லிஸ்டர் லண்டனிலுள்ள பல்கலைக் கழகக் கல்லூரியில் கல்வி பயின்றார். மிகச் சிறந்த மாணவராகத் திகழ்ந்த இவர் 1852 ஆம் ஆண்டில் மருத்து வத்தில் பட்டம் பெற்றார். இவர் அறுவை சிகிச்சையில் நோய நுண்மத்தடை (Antiseptic) முறைகளைப் பயன்படுத்துவதைக் கண்டுபிடித்த பிரித்தானிய அறுவை சிகிச்சை வல்லுநர் ஆவார். விக்டோரியா அரசியாரின் சொந்த மருத்துவராகப் பணிபுரிந்தவர். அறுவை சிகிச்சைக்காக பயன்படுத்தும் மருத்துவக் கருவிகளை கொதிக்க வைப்பதன் மூலம் நோய் நுண்மங்களை ஒழி க்க முடியும் எனக் கண்டறிந்தவர். அறுவை சிகிச்சை பிரிவுக்கு பொறுப்பாளராக இருந்த இவர் அறுவை சிகிச்சைக்குப் பிறகு ஏராளமான நோயாளிகள் இறந்து போவது கண்டு வருந்தினார். அறுவை சிகிச்சைக்குப் பிறகு இழைய அழுகல் போன்ற கொடிய நோய்கள் பெரும்பாலும் பீடிப்பதை இவர் கண்டார். 1865 ஆம் ஆண்டில் லூயி பாஸ்டர் எழுதிய ஆய்வுக் கட்டுரையொன்றை லிஸ்டர் படித்தார். பின்னர். நோய் நுண்மங்களினால் தொற்று நோய்கள் உண்டாகின்றன. எனில், திறந்த புண்களினால் நோய் நுண்மங்கள் நுழைவதற்கு முன்பாக அவற்றை அழித்துவிடுவதுதான் அறுவை சிகிச்சைக்குப் பின்னர் ஏற்படும் மரணங்க ளைத் தடுப்பதற்கு சிறந்த வழி என லிஸ்டர் கருதினார்.

லிஸ்டரின் கண்டுபிடிப்புகள் அறுவை சிகிச்சைத் துறையில் புரட்சிகர மான மாறுதல்களை ஏற்படுத்தின. லிஸ்டர் தமது தலைசிறந்த பணிக்காக ஏராளமான விருதுகளைப் பெற்றார். இவர் வேந்திய அறிவியல் கழகத்தின் (Royal society) தலைவராக 5 ஆண்டுகள் பணியாற்றினார். இவர தனது 85ஆவது வயதில் 1912 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதி இங்கிலாந்திலுள்ள வால்மர் நகரில் காலமானார்.

## 02.2015 10 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1763 - பிரான்ஸ் கியூபெக் மாநிலத்தை ஐக்கிய இராச்சியத்திற்கு அளித்தது.
- 1798 - லூயி அலெக்சாண்டர் பேர்த்தியர் ரோமைக் கைப்பற்றி அதனை பெப்ரவரி 15 இல் ரோமன குடியரசாக அறிவித்தான்.
- 1815 - கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றும் நோக்கில் பிரித்தானியர் கண்டியினுள் நுழைந்தனர்.
- 1846 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனிக்கும் பஞ்சாபின் சீக்கியருக்குமிடையில் இடம் பெற்ற போரில் பிரித்தானியர் வெற்றி பெற்றனர்.
- 1863 - அலன்சன் கிரேன் தீயணைக்கும் கருவியின் காப்புரிமம் பெற்றார்.
- 1870 - கிறிஸ்தவப் பெண்கள் இளையோர் அமைப்பு அமைக்கப்பட்டது (நியூயோர்க் நகரம்).
- 1897 - மடகஸ்காரில் மதச் சுதந்திரம் அறிவிக்கப்பட் டது.
- 1914 - யாழ்ப்பாணத்தின் அரச அதிபராக சார்ள்ஸ் கம்பர்லாண்ட் நியமிக்கப்பட்டார்.
- 1931 - புதுடில்லி இந்தியாவின் தலைநகராக்கப்பட் டது.
- 1954 - வியட்நாம் போர்: அமெரிக்க ஜனாதிபதி டுவைட் ஐசன்ஹோவர் வியட்நாம் மீது ஐக்கிய அமெரிக்கா தாக்குதல் நடத்தும் என எச்சரித்தார்.
- 1969 - தமிழ் நாட்டின் முதலமைச்சராக மு. கருணாநிதி தெரிவு செய்யப்பட்டார்.
- 1996 - சதுரங்கக் கணினி "டீப் புளூ" உலக முதற் தரவீரர் காரி காஸ்பரோவை வென்றது.
- 2009 - தகவல் தொடர்பு செயற்கைக்கோள்கள் இரிடியம் 33, காசுமசு-2251 ஆகியன விண்வெளியில் மோதி அழிந்தன.

### பிறப்புகள்

- 1887 - ஜோன் என்டேர்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1985)
- 1890 - போரிஸ் பாஸ்டர்நாக், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1960)
- 1902 - வால்ட்டர் பிராட்டன், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1987)
- 1910 - ஜோர்ஜஸ் பயர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1969)

### இறப்புகள்

- 1837 - அலெக்சான்டர் புஷ்கின், ரஷ்ய எழுத்தாளர், கவிஞர் (பி. 1799)
- **1912 - ஜோசப் லிஸ்டர், பிரித்தானிய அறிவியலாளர் (பி. 1827)**
- 1918 - ஏர்னெஸ்டோ மொனெட்டா, நோபல் பரிசு பெற்ற இத்தாலியர் (பி. 1833)
- 1923 - வில்ஹெம் ரொண்ட்ஜென், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (பி. 1845)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு...

..ரஜினி வாழ்க்கையில், **"தில்லு முல்லு"** முக்கியமான படம். இந்தப் படத்தின் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தபோதுதான், கல்லூரி மாணவியான லதா ரஜினியை பேட்டி காண வந்தார். காதல் அரும்பி, கல்யாணத்தில் முடிந்தது. இந்தப் படம், **"கோல்மால்"** என்ற இந்திப் படத்தைத் தழுவி தயாரிக்கப்பட்டதாகும். ரஜினிக்கு ஜோடியாக மாதவி நடித்தார். மற்றும் தேங்காய் சீனிவாசன், பூர்ணம் விஸ்வநாதன், நாகேஷ், சவுகார்ஜானகி ஆகியோர் நடித்தனர். கமலஹாசனும், லட்சுமியும் கவுரவ வேடத்தில் தோன்றினர்.

**நகைச்சுவை**

படம் முழுக்க முழுக்க நகைச்சுவை காட்சிகள் நிறைந்திருந்தன. ரஜினிக்கு இரட்டை வேடம் இல்லாவிட்டாலும், சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக ரஜினி மீசையோடும், மீசை இல்லாமலும் இரண்டு வித தோற்றங்களில் வருவார். இரண்டு தோற்றங்களிலும் வருவது ஒருவரே என்றாலும், "இருவர்" என்று கூறி தில்லுமுல்லு செய்வார்.

1-5-1981இல் வெளியான இப்படம் வெற்றிகரமாக ஓடியது. ரஜினிகாந்த் இரட்டை வேடங்களில் நடித்த **"நெற்றிக்கண்"**, ரசிகர்களிடம் பெரிய வரவேற்பை பெற்றது. **"கவிதாலயா"** பேனரில் டைரக்டர் கே.பாலசந்தர் தயாரித்த படம் இது. பொதுவாக, பாலசந்தர் கதை எழுதும் படங்களை அவரே இயக்குவதுதான் வழக்கம். ஆனால், நெற்றிக்கண்ணை அவர் டைரக்ட் செய்யவில்லை. ஏற்கனவே, ரஜினியை வைத்து **"புவனா ஒரு கேள்விக்குறி"**, **"முரட்டுக்காளை"** முதலிய வித்தியாசமான படங்களை இயக்கிய எஸ்.பி.முத்து ராமனிடம் ஒப்படைத்தார்.

**வியப்பு-திகைப்பு**

நெற்றிக்கண்ணை இயக்குவதற்கு பாலசந்தர் அழைப்பு அனுப்பியபோது, முத்துராமன் வியப்பும், திகைப்பும் அடைந்தார். அவரே பெரிய டைரக்டர். அவர் படத்தை நாம் எப்படி டைரக்ட் செய்வது? என்ற கேள்வி, அவரை பயமுறுத்தியது.



51

நெற்றிக்கண்ணில் ரஜினியின் மாறுபட்ட தோற்றம்

## அப்பா-மகனாக ரஜினி நடித்த "நெற்றிக்கண்"

பாலசந்தரை சந்தித்துப் பேசியபின், அவருடைய பயம் மறைந்தது.

பாலசந்தர் சொன்னார்:-

"நான் வித்தியாசமான கதைகளை, என் பாணியில் டைரக்ட் செய்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறேன். என்னிடம் ரசிகர்கள் அதைத்தான் எதிர்பார்க்கிறார்கள். நெற்றிக்கண், ரஜினிக்கு முற்றிலும் மாறுபட்ட கதை. இரட்டை வேடம். இதை கமர்ஷியல் படமாக எடுத்தால்தான் நன்றாக இருக்கும். நீங்கள் ரஜினியை வைத்து, சிறப்பான படங்களை எடுத்திருக்கிறீர்கள். ரஜினி ஓர் நடிப்புச்சுரங்கம். அவரிடம் புதைந்துள்ள நடிப்பை, நீங்கள் இப்படத்தில் சிறப்பாக வெளிப்படுத்த முடியும்.

**முழு சுதந்திரம்**

திரைக்கதை, எழுதுவதுடன் என் வேலை முடிந்து விட்டது. படத்தை உங்கள் விருப்பப்படி எடுக்கலாம். எந்த ஒரு கட்டத்திலும் என் தலையீடு இருக்காது. உங்களுக்கு முழு சுதந்திரம் உண்டு. படத்தை சிக்கனமாக எடுக்க வேண்டும் என்று நினைக்காதீர்கள். ஏவி.எம். படங்களை எப்படி நிறைய செலவு செய்து எடுக்கிறீர்களோ, அதுபோல் எடுங்கள். இவ்வாறு பாலசந்தர் கூறினார். இதனால் உற்சாகம் அடைந்த எஸ்.பி.முத்துராமன், நெற்றிக்கண்ணை சிறந்த முறையில் உருவாக்கினார்.

**அப்பா-மகன்**

இதில் அப்பாவாகவும், மகனாகவும் ரஜினி நடித்தார். அப்பா ரஜினி உல்லாச பேர்வழி. வேலை கேட்டு வரும் ஒரு பெண்ணை (சரிதா) கெடுத்து விடுவார். இது மகன் ரஜினிக்கு தெரிகிறது. அப்பாவை திருத்துவதற்கும், உண்மையை அவர் வாயினாலேயே ஒப்புக் கொள்ளச் செய்யவும், புதிய உத்தியை கையாளுவார். சரிதாவை திருமணம் செய்து கொள்ளப் போவதாக அறிவிப்பார். இதனால் அப்பா ரஜினிக்கு இக்கட்டான நிலைமை ஏற்படும்.

(தொடரும்)





# கருவாச்சி காவியம்

**வைரமுத்து- 73**

..ஆமா தாயி! ஆமாங்குது சொட சொட சொடன்னு எந்திரிச்சு எரியிற சுடுகாட்டு நெருப்பு.

சாவுன்னு வந்துட்டா.

அய்யோ பாவமே குய்யோ முறையேன்னு அழுக ஆரம்பிச்சிருது ஊரு.

ஊரு ஒலகம் பாக்குறது சாவோட ஒரு மூஞ்சிய மட்டும் தான் ஆனா அஞ்சாறு மூஞ்சி இருக்கு சாவுக்கு.

சில சாவுகள்ல குடும்பமே ஓஞ்சு உக்காந்து போகும்.

சில சாவுகள்ல உக்காந்த குடும்பம் எந்திரிச்சிரும்.

சில வீடுகள்ல சாவுங்கிறது பிரச்சினைய உண்டு பண்ணிட்டு ஓடிப் போயிரும்.

சில வீடுகள்ல சாவு பிரச்சினைகளையெல்லாம் ஒச்சிட்டு சுபம்னு சொல்லிட்டுப் போயிரும்.

சில விடுகள்ல சாவுங்கிறது நிர்க்கதி; சில வீடுகள்ல சாவுங்கிறது நிம்மதி.

சில வீடுகள்ல சாவுங்கிறது செலவு. சில வீடுகள்ல வரவு.

வாழ்க்கையில திருப்பம்ங்கற சக்கரங்களச் சுத்திவிட்டுட்டுப் போறது சாவுதான்.

பெரியமூக்கி சாவு கருவாச்சியோட பொழப்பு-மனசு ரெண்டையும் பொரட்டிப் போட்டுட்டுப் போயிருச்சு.

ஆத்தாளோட சேந்து செத்துப் போனா என்னன்னு மருகினது மொதநாளு.

ஆத்தா இம்புட்டுச் சீக்கிரம் செத்திருக்க வேணாமின்னு உருகுனது ரெண்டாம் நாளு.

ஆத்தாளுக்கும் சேத்துப் பொழைக்கணுமேன்னு வைராக்கியப்பட்டது மூணாம் நாளு.

கண்ணீரு வருத்தமா ஒறைஞ்சு வருத்தம் வைராக்கியமா முத்துனாத்தான் இத்துப் போன மனசு எந்திரிச்சு உக்காரும்.

எந்திரிச்சு உக்காந்துட்டா கருவாச்சி.

மாசம் அஞ்சு [illegible]

அரைப்பிள்ளை இருக்கு வகுத்துல; முழுவாழ்க்கை இருக்கு முன்னுக்க.



முதுகச் சுவத்துல போட்டு ஒரு காலத்தரையில நீட்டி ஒரு கால ஊண்டி மடக்கி உக்கார்ந்திருக்கா கருவாச்சி.

மொதலக்கம்பட்டிச் சொந்தங்களெல்லாம் கோழிக்கு அள்ளியெறிஞ்ச சோளம் மாதிரி அங்கங்க உக்காந்திருக்காக.

வெத்தல எச்சியத் துப்பிட்டு துண்ட எடுத்து வாயத்தொடச்சுக்கிட்டு உருமாப்பெருமாத்தேவரு ஆரம்பிக்கிறாரு தொண்டையச் செருமிக்கிட்டு. யம்மா கருவாச்சி! நீயும் எம் மகதான் தாயி.

கண்ணுக்கு எட்ன மட்டுக்கும் ஆதரவு இல்லையேன்னு அல பாஞ்சு நிக்காத.

என் வீட்ல வந்து இரு.

என் கண்ணுள்ள காலம் வரைக்கும் கஞ்சி ஊத்துறேன். ஒரு காலத்துல ஒங்கப்பன் ஓடி வந்து செஞ்ச உதவிக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

கனமழை பேஞ்சு போச்சு ஒரு ஆடி மாசத்துல.

பொட்டப் பிள்ளைகளாப் பெத்துக்குடுத்த எம் பொம்பளை ஆளு வேற செத்துப் போனா ஊரே ஓடி ஓடி உழுது வெதைக்குது நான் கால்ல வந்து காய்ச்சலோட படுத்திருக்கிதேன்.

அன்னைக்கித் தன் காட்டை விட்டுட்டு என் காட்டை உழுது குடுத்தவனம்மா ஒந் தகப்பன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல்நலன் காக்கும் உணவு முறை!



நம்முடைய உணவு சத்தான தாக இல்லை என்பது சாப்பிட உட்காரும் ஒவ்வொரு முறையும் புரிகிறது. ஆனால் பழக்கத்தை மாற்றிக்கொள்ள முடியவில்லை. சலட், பழங்கள் மட்டும் எடுத்துப் பார்க்கலாம் என்றால், இரண்டு நாட்களுக்கு மேல் தொடர முடிவ தில்லை. மரபு சார்ந்த, மண் சார்ந்த உணவுகள் உடலுக்கு நல்லது என்பது புரிந்தாலும், துரித உணவுக் குப் பழக்கப்பட்டு விட்ட நாக்கை யும மனதையும் எப்படி மாற்றுவது?

தினசரி உணவில் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றத்தை ஏற்படு த்துவதன்மூலம், நம் உணவுப்பழக் கத்தை ஆரோக்கியமாக மாற்றி - விடலாம்.

கோப்பி தேநீருக்குப்பதிலாககாலை எழுந்ததும் ஏதேனும் சூடாகக் குடிக் கும் பழக்கம் இருந்தால், அது தேநீர், கோப்பியாக மட்டுமே இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. சுக்கு கோப்பி, பானகம், மூலிகை தேநீர் மற்றும கஞ்சியாகவும் இருக்க லாம். இனிப்புக்குக் கருப்பட்டியைச் சேர்க் கலாம். மூலிகை தேநீர் குடிக்க விரும்புவோர், சுக்கு, மிளகு, பட்டை, ஏலக்காய், தனியா, ஆவாரம பூ, லெமன் க்ராஸ், கொய்யாத் தழை, முருங்கைத் தழை, துளசி ஆகிய வற்றை சேர்த்துக் காய்ச்சிக் குடிக்க லாம். சுக்கு, ஏலக்காய், கொத்த மல்லி போன்றவற்றைச் சேர்த்து, சுக்கு, மல்லி, கோப்பி குடிக்கலாம். வெந்நீரில் வெல்லம் சேர்த்து, ஏலக்காய் தட்டிப் போட்டு பானக மாகக் குடிக்கலாம்

**குழந்தைகளுக்கு**

குழந்தைகளுக்கு, பிறந்த ஆறு மாதத்திலிருந்தே, ராகி மாவு, சுக்கு, ஏலக்காய்த்தூள் ஆகியவற் றைக் கலந்து கஞ்சியாகக் கொடுக்க லாம். ஊறவைத்த கேழ்வரகை, முளைக்க வைத்து, நிழலில் உலர் த்திப் பொடித்து, வெல்லம், கருப்பட்டி, பனங்கற்கண்டு கலந்து, கஞ்சி அல் லது கூழாகக் கொடுக்கலாம்.

100 கிராம் கேழ்வரகில் 344 மி.கி கல்சியம் உள்ளது. இது எலும்பு மற் றும் எலும்பு மச்சையின் ஆரோக்கி யத்துக்கு உதவும். சீரான இரத்த ஓட்டத்துக்கு உதவுவதால், உறுப்பு களும் நன்றாக செயற்படும் இதனால் நோயும் நெருங்காது.

**காலை உணவு**

காலையில் நாம் சாப்பிடும் இட்லி, தோசை ஆகியவை வெள்ளை யாக மட்டுமே இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. சிறு தானியங்களில் இட்லி, தோசை, இடியப்பம், பொங்கல், உப்புமா, கஞ்சி, புட்டு ஆகியவற்றைச் செய்து சாப்பிடலாம். நிறம் மாறியிருக்குமே தவிர, உடலுக்கு அவ்வளவு நல்லது.

முந்தைய நாள் ஊறிய பழைய சோறை, மறுநாள் சாப்பிடும்போது அதில் உருவாகியிருக்கும் ப்ரோப யாடிக் (Probiotic) உடலில் எதிர்ப் பாற்றலை உருவாக்கும். இதனுடன் சிறு வெங்காயம், காய்கறிக்கூட்டு சேர்த்துச் சாப்பிடுகையில், அன்றைய நாளுக்குத் தேவையான ஆற்றலை யும், புத்துணர்வையும் தந்துவிடும்.

முந்தைய நாள் களியை மறு நாள் கூழாக, கீரை மற்றும் காய்கறிக் கூட்டோடு சேர்த்துச் சாப்பிடும் நம் மரபான உணவு முறையே சரியான உணவுமுறை.

**மதிய உணவு**

வெள்ளை மணி போல், தனித் தனிப் பருக்கைகளாகத் தட்டை அலங்கரிக்கும் அரிசி உணவுப் பழக்கத்திலிருந்து மீள்வது ஒன்றே ஆரோக்கியத்தின் முதற்படி. மதிய உணவு திடமான உணவாக இருக் கலாம். ரொட்டி, பாலிஷ் செய்த அரி சியைத் தவிர்த்து, சாம்பார் சாதம், மல்லி சாதம், கறிவேப்பிலை சாதம, குழம்பு சாதம், பிரியாணி ஆகிய உணவு வகைகளும் ஏற்றது.

எலுமிச்சை சாதத்துக்குத் தினை அரிசி, பிரியாணிக்கு வரகு, தயிர் சாதத்துக்குக் குதிரை வாலி, மல்லி மற்றும் கறிவேப்பிலை சாதத்துக்கு சாமை, சாம்பார் சாதத்துக்கு வரகு, குழம்பு ஊற்றிச் சாப்பிட சாமை, அப் பத் துக்கு மாப்பிளை சம்பா, தோசை க்குக் கருங்குருவை என ஒவ் வொரு அரிசி வகைக்கும் கலவை உணவு அற்புத சுவையை யும், ஆரோக்கியத்தையும் கொடுக் கும். அப்பம் பிறவுன் நிறத்திலும், தோசை கருநீல நிறத்திலும் வரு வதால் நிறத்திற்கு ஏற்ற ஊட்டச் சத்துக்கள் இதில் அதிகமாக இரு க்கும். அலுவலகம் செல்வோர், சிறுதானியத்தில் செய்த, கலவை சாதங்களை எடுத்துச் செல்லலாம்

சோறுடன் தயிர், ரசம் சேர்த் துச் சாப்பிடுவது நல்லது. வேப்பம் பூ, துத்திக் கீரை, தூதுவளை, கோவைத் தழை, நுணாத்தழை, அறுகம்புல், மூக்கரட்டை, கீழா நெல்லி இவற்றில் ஏதாவது ஒன்றை வதக்கி, சீரகம், மிளகு, பூண்டு, காய்ந்த மிளகாய், புளிக் கரைசல் சேர்த்து, வைக்கும் ரசம் மதிய உணவுக்கு அருமையாக இருக் கும். தீட்டப்படாத சிறுதானியங் களை உண்பதே நல்லது. மேலும், எல்லோரும் சிறுதானியங்களை உண்ணும்போது, அதன் விலை யும் குறைய வாய்ப்புள்ளது.

**இரவு உணவு**

இரவில் சிறுதானியக் களி போன்ற உணவுகளைச் சாப்பிடும பழக்கம் இருந்தது. ஆனால், இன்று வாழ்வியல் பழக்கம் மாறிள்ளதால், இரவிலும் டிபன் உணவுக ளைச் சாப்பிடுவதே சரி. ஆனால், அவை எளிதில் செரிக்கக்கூடிய இட்லி, தோசை, இடியப்பம், அப்பம் போன்ற உணவாக இருப்பது நல்லது.

நொறுக்குத் தீனி பொட்டுக் கடலை, வேர்க் கடலை, எள்ளு உருண்டை, பொரிவிளாங்காய் உருண்டை, கார அரிசி புட்டு, அவல் பாயசம், அவல் உப்புமா, பனங்கிழங்கை வேக வைத்து, பொடியாக்கி செய்யும் சத்து உரு ண்டை, நவதானியங்களால் ஆன சத்து மாவு உருண்டை, தேங் காய் பர்ப்பி போன்றவை ஊட்டச் சத்துக்கள் நிறைந்த உணவாக இருக்கின்றன.

## மருத்துவ உலகம்

Health Care

உங்கள் நலம் உங்கள் கைகளில்






## புதன்கிழமைகளில் பஜகோவிந்தம்

(யாழ்ப்பாணம்)

சின்மயா மிஷன் ஞானவேல் ஆச் சிரமத்தில் பிரதி புதன்கிழமை தோறும் பிற்பகல் 4 மணி தொடக்கம் பிற்ப கல் 5 மணிவரை பஜகோவிந்தம் விளக்கவுரை வகுப்பும் பிற்பகல் 5.15 முதல் 6.15 மணிவரை மந்திர உச்சாடன வகுப்பும் வதிவிட ஆச்சா ரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகளினால் நடத்தப்படவுள்ளது. ஆர்வலர்களை கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு 021 222 3447 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (இ-3)



யாழ்.கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற இல்லத்திற்கு விருந்தினர்களால் வெற்றிக்கிண்ணம் வழங்கப்பட்ட போது...

## மகிந்த ராஜபக்ஷ இல்லையேல் எங்களுக்கு வேலையேயில்லை

### காலி உறுப்பினர்கள் கோயிலில் வேண்டுதல்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் பிர தம வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷ போட்டியிடவில்லை எனில், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் வெற்றி பெறுவது குறித்தும் பிரச்சினை இல்லையென காலி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உள்ளூராட்சி பிரதி நிதிகள் தெரிவித்துள்ளார்கள்.

குறித்த பிரதிநிதிகள் நேற்று முன்தினம் சீனுகம் பிரதேச கோயில் ஒன்றில் இவ்வாறு வேண் டுதல் ஒன்றை முன்வைத்ததோடு வத்தளை பிரதேச சபை தலை வரை தாக்கியமைக்காக தேங்காய் உடைத்தும் வேண்டுதலில் ஈடுபட் டுள்ளனர்.


இதேவேளை மகிந்த ராஜபக்ஷ வை மேற்குறித்த உறுப்பினர்கள் நேரில் சென்று பேசுவதற்கு தீர்மா னித்தனர். (இ-5)






கரவெட்டி கிழக்கு,கூழாங்கேணி வன்னியப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக பெருவிழா அண்மையில் இடம்பெற்ற போது சிவாச்சாரியார் உபசாரம், பிரதான கும்பங்கள் எடுத்துவரப்படுவதையும் ஆலயத்தின் ஆன்மீக இசைப் பேழையை வெளியிட்டு வைத்து தமிழருவி த.சிவகுமாரன் அருளுரையாற்றுவதையும் செல்வி ஷியானி சோதிலிங்கம் இசைப் பேழையிலடங்கிய பாடல்களைப் பாடுவதையும் அடியார்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கருத்து: க.குமாரகுரு, மயிலாடுதுறை.

# குஜராத்தில் பன்றிக்காய்ச்சல் இதுவரை 81 பேர் உயிரிழப்பு

குஜராத் மாநிலத்தில் பன்றிக்காய்ச்சல் அதிவேகமாக பரவி வருகிறது. இக்காய்ச்சலால் பலியானோர் எண்ணிக்கை தற்போது 81 ஆக உயர்ந்துள்ளது.

குஜராத் மாநிலத்தில் உள்ள கட்ச், அகமதாபாத், சூரத் மாவட்டங்களில் தலா இரண்டு பேரும், வதோதரா, தாடி, நர்மதா, சுரேந்திர மாவட்டங்களில் தலா ஒருவரும் என ஒரே நாளில் பத்து பேர் உயிரிழந்துள்ளதாக நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் நேற்று முன்தினம் மட்டும் புதிதாக 117 பேருக்கு பன்றிக்காய்ச்சல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஜனவரி மாதம் தொடங்கி இதுவரை 744 பேர் பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருப்பது, பலி எண்ணிக்கை இன்னும் உயரும் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

அகமதாபாத்தில் நேற்று மட்டும் 46 பேர் பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த 151 பேரில் 15 பேர் உயிரிழந்துள்ளனர். இதே போல் கட்ச் மாவட்டத்தில புதிதாக 16 பேருக்கு பன்றிக்காய்ச்சல் பாதிப்பு இருப்பது பரிசோதனையில் தெரிய வந்துள்ளது. அங்கு சிகிச்சை பெறறு வந்த 215 பேரில் 27 பேர் உயிரிழந்துள்ளனர். பன்றிக் காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தினாலேயே குஜராத் தில் ஏராளமானோர் பலியாகி வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-5)

# கறுப்புப்பண விவகாரத்தில் ஒத்துழைத்து வருகிறோம்!

கறுப்பு பண விவகாரத்தில் இந்தியாவுக்கு முழு ஒத்துழைப்பு அளித்து வருவதாக சுவிட்சர்லாந்து தெரிவித்துள்ளது.

சர்வதேச நிதி மற்றும் வரி விவகாரங்கள் தொடர்பான அண்மையில் ஆண்டறிக்கையை சுவிட்சர்லாந்து வெளியிட்டுள்ளது. இதில் "வங்கிக் கணக்கு விபரங்கள் பரிமாற்றம தொடர்பாக இந்தியா சுவிட்சர்லாந்து இடையே கடினமான சூழ்நிலையும், கருத்து வேறுபாடுகளும் இருந்தபோதும், பேச்சுவாரத்தைக்கான கதவு எப்போதும் திறந்தே உள்ளது.

கடந்த 2014-ஆம் ஆண்டில் வரி விவகாரங்களில் முழு ஒத்துழைப்பு வழங்கப்பட்ட 4 முக்கிய நாடுகளில் இந்தியாவும் ஒன்று (அமெரிக்கா, பிரான்ஸ், இத்தாலி ஆகியவை மற்ற 3 நாடுகள்). இதில் இந்தியாவுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டது" என்று கூறப்பட்டுள்ளது.

சட்டவிரோத பணப் புழக்கத்தை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என சுவிட்சர்லாந்துக்கு இந்தியா உட்பட பல் வேறு நாடுகள் நெருக்குதல் கொடுத்து வருகின்றன.

சுவிட்சர்லாந்து வங்கிகளில் ரகசிய கணக்கு வைத்துள்ள இந்தியர்கள் தொடர்பான விபரங்களை அளிக்க வேண்டும் என அந்நாட்டிடம் இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வந்தது.


ஆனால் திருடி வெளியிடப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இந்த விபரங்களை இந்தியா கோருவதாக கூறி சுவிட் சர்லாந்து அவற்றை அளிக்க மறுத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் தனிப்பட்ட முறையில் திரட்டிய ஆதாரங்களின் அடிப்படையில் இந்த விபரங்களை கேட்க இந்தியா முடிவு செய்தது. உலக பொருளாதார மன்றத்தின் வருடாந்த கூட்டம் சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் கடந்த மாதம் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் பங்கேற்ற நிதியமைச்சர் அருண் ஜேட்லி, மாநாட்டு நிகழ்ச்சிகளுக்கு இடையே சுவிட்சர்லாந்து நிதியமைச்சரை சந்தித்து கறுப்பு பண விவகாரம் தொடர்பாக விவாதித்தார். (இ-5)

# நல்லது, கெட்டது என்று பயங்கரவாதத்திலில்லை

**ஜனாதிபதி தெரிவிப்பு**



**(சென்னை)— பயங்கரவாதத்தில் நல்லது கெட்டது என்று எதுவும் கிடையாது. பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்ற முறையில், பயங்கரவாதத்திற்கு எதிராக உறுதியான, அதேசமயம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என சர்வதேச அமைப்புக்களை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி கேட்டுக் கொண்டுள்ளார்.**

வெளிநாடுகளுக்கான இந்திய தூதர்கள் மற்றும் தூதரக உயரதிகாரிகளை நேற்று சந்தித்து உரையாற்றிய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாதம் என்பது தீய சக்திகளின் உற்பத்தி இடம். அது உலக நாடுகளின் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் மட்டும் அச்சுறுத்தலாக இல்லை. மனிதகுலத்திற்கு எதிரான தாக்குதலையும் மேற்கொண்டு வருகிறது. இதனை ஒட்டு மொத்த மனித இனமும் உணர்ந்து கொண்டுள்ளது.

இதன் பயங்கரத்தை சர்வதேச அமைப்புக்களும் கருத்தில் கொண்டு கடுமையான நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும். உலக நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து மனித குலத்திற்கு எதிரான சவாலை முறியடிக்க வேண்டும்.

சமீப காலமாக பல கொடூரமான படுகொலைகள் இந்த பயங்கரவாதத்தால் அரங்கேற்றப்பட்டு வருவதை நாம் பார்க்கிறோம். சிரியா பிணைக்கைதிகள் கொலை, பாரீஸ் பத்திரிகை அலுவலகத்தின் மீது தாக்குதல், பெஷாவரில் பாடசாலை குழந்தைகள், ஆசிரியர்கள் மீதான தாக்குதல் போன்றவைகள் அனைவரின் உள்ளங்களையும் உறைய வைத்தவைகள்.

பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட பழைமையான நாடுகளில் இந்தியாவும் ஒன்று. பயங்கரவாதத்தில் நல்ல பயங்கரவாதம் என்றோ அல்லது கெட்ட பயங்கரவாதம் என்றோ எதுவும் கிடையாது. பயங்கரவாதத்திற்கு மதமோ, கொள்கையோ அல்லது தேசமோ கிடையாது. இனியும் இந்த பயங்கர சமபவங்களை தொடர விடக்கூடாது.

சர்வதேச அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து, பயங்கரவாதத்திற்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுத்து, அதனை வேரறுக்க வேண்டும். பயங்கரவதத்தை எவ்வாறு ஒடுக்குவது, இந்த சவாலை எப்படி எதிர்கொண்டு முறியடிப்பது என்பதற்கான யுக்திகளை உலக நாடுகளுக்கு கொண்டு செல்ல வேண்டும். அனைத்து நாடுகளின் துணையுடன் இந்த பயங்கரங்களை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என பிரணாப் முகர்ஜி மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## பாரதச் செய்தி

# தலைநகரில் மீண்டும் பெரும் பரபரப்பு
## பேருந்தில் பெண் மீது பாலியல் பலாத்காரம்
### சாரதி, நடத்துநர் தலைமறைவு

தலைநகரான டில்லியில் பயணித்துக் கொண்டிருந்த பேருந்தில் பெண் ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளார். பலாத்காரத்தில் ஈடுபட்ட பேருந்து சாரதி மற்றும் நடத்துநரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

சம்பவம் குறித்து டில்லி பொலிஸார் கூறும்போது, "கடந்த சனிக் கிழமை இரவு, உத்தரப்பிரதேச அரசுப் போக்குவரத்துக் கழகத்துக்கு சொந்தமான பேருந்தில் திருமணமான பெண் ஒருவர் ஏறியுள்ளார்.

கனோஜ் பகுதியில் ஏறிய அவர் தாத்ரி செல்ல பயணச்சீட்டு வாங்கியுள்ளார். ஆனால், அவர் இறங்கும் இடத்தை கவனிக்காமல் விட்டுவிட்டார். இதனால், வேறுவழியின்றி அவர் டில்லி வந்தடைந்தார்.

அப்போது பேருந்தின் சாரதியும் நடத்துநரும் அந்தப் பெண்ணை மீண்டும் தாத்ரியில் இறக்கிவிடுவதாக கூறியுள்ளனர். இதனை நம்பி அந்தப் பெண் மீண்டும் பேருந்தில் பயணித்துள்ளார். ஆனால், அவரை சாரதியும் நடத்துநரும் சேர்ந்து பலாத்காரம் செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெண் அளித்த புகாரின்படி, இந்த சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. தலைமறைவான சாரதி, நடத்துநரை தேடி வருகிறோம். பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு மருத்துவ பரிசோதனையும் செய்யப்பட்டுள்ளது" என தெரிவித்துள்ளனர்.

டில்லியில், கடந்த 2012இல் பயணித்துக் கொண்டிருந்த பேருந்தில் மருத்துவ மாணவி ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார். அந்த சம்பவம் பெரிய எதிர்ப்பலைகளை ஏற்படுத்தியது.

இந்நிலையில், டில்லியில் மீண்டும் பேருந்தில் பெண் ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மாறன் சகோதரர்களின் கோரிக்கையை உயர் நீதிமன்றம் முற்றாக நிராகரித்தது

ஏர்செல்-மேக்சிஸ் வழக்கில் சிபிஐ சிறப்பு நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளதை எதிர்த்து டில்லி உயர் நீதிமன்றத்தை அணுக அனுமதி கோரி மாறன் சகோதரர்கள் தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கு விசாரணைக்காக அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றம், ஏர்செல்-மேக்சிஸ் வழக்கில் தங்களுக்கு அழைப்பாணை அனுப்பியதை எதிர்த்து கலாநிதி மாறன் மற்றும் மத்திய தொலைத்தொடர்புத் துறை முன்னாள் அமைச்சர் தயாநிதி மாறன் ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

அந்த மனுவில், 2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேடு தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்காக மட்டுமே சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டது. ஏர்செல்-மேக்சிஸ் வழக்கு ஸ்பெக்ட்ரம் முறைகேட்டுடன் தொடர்புடையதல்ல. எனவே, இவ்வழக்கில் தங்களுக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது சிறப்பு நீதிமன்றத்தின் அதிகார வரம்பு குறித்து கேள்வியெழுப்பும் வகையில் உள்ளது என தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த 7ஆம் திகதி மனு விசாரணைக்கு ஏற்கப்பட்டது. தலைமை நீதிபதி எச்.எல்.தத்து தலைமையிலான அமர்வு முன்பு வரும் 9ஆம் திகதி மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் தரப்பில், ஏர்செல் - மேக்சிஸ் வழக்கில் தங்களுக்கு சிபிஐ சிறப்பு நீதிமன்றம் அனுப்பியுள்ள அழைப்பாணை எதிர்த்து டில்லி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய அனுமதி கோரப்பட்டது.

இதற்கு மறுப்பு தெரிவித்த நீதிபதிகள், இவ்விவகாரத்தில் அழைப்பாணை அனுப்பிய சிறப்பு நீதிமன்றத்தை மட்டுமே மனுதாரர்கள் அணுக முடியும் என்றனர்.

மேலும், "ஏர்செல்-மேக்சிஸ் வழக்கு ஸ்பெக்ட்ரம் முறைகேட்டுடன் தொடர்புடையதல்ல" என மனுதாரர்கள் ஏற்கனவே உச்ச நீதிமன்றத்தில் முன் வைத்த வாதத்தை மேற்கோள் காட்டியே சிறப்பு நீதிமன்றத்தை அணுகலாம் எனவும் யோசனை தெரிவித்தனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டு விசாரணையை நம்ப முடியுமா?



உள்நாட்டுப் போர்க்குற்ற விசாரணை பற்றிய விவாதங்கள் இப்போது சூடுபிடித்துள்ளன. இந்த வாரம் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அமெரிக்காவுக்கு மேற்கொள்ளவுள்ள பயணத்தை அடுத்து, இன்னமும், முனைப்படையும் வாய்ப்புகள் உள்ளன.

உள்நாட்டுப் போர்க்குற்ற விசாரணையை முன்னெடுப்பதில், கூடுதலான அக்கறை செலுத்தி வருபவர்களில் முக்கியமானவர் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரதான். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக்கட்டத்தில், படையினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் குறித்த ஐ.நாவின் சர்வதேச விசாரணையைத் தவிர்க்க வேண்டுமானால், உள்நாட்டு விசாரணையை உடனடியாகத் தொடங்குவது மட்டும் தான் இப்போதுள்ள ஒரே வழி என்று அவர் தெளிவாகவே கூறியிருக்கிறார்.

ஏற்கனவே மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் வெளிவிவகார அமைச்சராக இருந்தவர் என்ற வகையிலும், லக்ஷ்மன் கதிர்காமரின் வழியில், சென்று சர்வதேச சமூகத்தை கைக்குள் போட்டுக் கொள்ளும் உத்தியைக் கையாள்பவர் என்ற வகையிலும், மங்கள சமரவீரவின் இந்த திட்டத்தை குறைத்து மதிப்பிட்டு விட முடியாது.

வெளிவிவகார அமைச்சை எல்லா வகையிலும் லக் ஷ்மன் கதிர்காமர் காலத்து நிலைமைக்கு கொண்டு வருவதே மங்கள சமரவீரவின் கனவு. லக்ஷ்மன் கதிர்காமர் தான் விடுதலைப் புலிகளுக்கு எதிரான சர்வதேச சூழலை உருவாக்கியவர்.

சர்வதேச அளவில் விடுதலைப் புலிகளை தடை செய்வதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டவர். அவரது அணுகுமுறைகள், சந்திரிகா அரசாங்கத்துக்குப் பெரிதும் கைகொடுத்திருந்தன.

ஆனால், போர் அரங்கில் விடுதலைப் புலிகள் பெற்றிருந்த மேலாதிக்கம் தான், அப்போது சந்திரிகா அரசாங்கத்துக்கு கிடைத்திருந்த சர்வதேச ஆதரவை வைத்துக் கொண்டு போரில் வெற்றியைப் பெறுவதற்குத் தடையாக இருந்தது.

இப்போது, லக்ஷ்மன் கதிர்காமர் எதிர்கொண்டளவுக்கு நெருக்கடியை மங்கள சமரவீர எதிர்கொள்ள வேண்டிய நிலை இல்லாவிட்டாலும், போர்க்குற்ற விசாரணை விவகாரத்தில், மங்கள சமரவீரவுக்கு முக்கியமான சவால் காத்திருக்கிறது என்பதில் ஐயமில்லை.

இருந்தாலும், இலங்கையின் புதிய அரசாங்கத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கமும், இலங்கையில் அமெரிக்க நலனைப் பாதுகாக்கும் அரசாங்கத்தை தக்கவைக்க வேண்டும் என்ற நோக்கமும் அமெரிக்காவிடம் இருப்பது. இலங்கைக்குக் கிடைத்துள்ள அரிய சந்தர்ப்பமாகும்.

முன்னைய மஹிந்த ராஜபக் ஷ அரசாங்கத்தை சர்வதேச அரங்கில் பாதுகாப்பதற்கு சீனா எந்தளவுக்கு ஈடுபாடு காட்டியதோ, அதே அளவுக்கு இப்போதைய அரசாங்கத்தைப் பாதுகாப்பதில் அமெரிக்கா ஈடுபாடு காட்டும் சூழல் உருவாகியிருக்கிறது.

இதுபோன்றதொரு வாய்ப்பான சூழல் லக்ஷ்மன் கதிர்காமருக்கு கிடைத்திருக்கவில்லை. முன்னைய வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ"க்கும் கிடைத்திருக்கவில்லை. எனவே, மங்கள சமரவீரவுக்கு இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையை லக்ஷ்மன் கதிர்காமரின் காலத்துக்கு கொண்டு செல்வதில் அவ்வளவு சிக்கல்கள் எழாது.

ஆனாலும், சர்வதேச போர்க்குற்ற விசாரணை விவகாரத்தில் மங்கள சமரவீர அமெரிக்காவே எல்லாவற்றையும் கையாளும் என்று அமைதியாக இருந்து விட முடியாது. ஏனென்றால் அதற்கான கால கட்டம் கடந்து விட்டது.

இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை நடத்துவதற்கு கொடுக்கப்பட்ட காலஅவகாசத்தை முன்னைய மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

இதனால், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்திடம் இதற்கான விசாரணையை நடத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு, அந்த விசாரணைகள் முடிவுக் கட்டத்தை எட்டியும் விட்டன.

எனவே, இலங்கையில் நடந்த போர்க்குற்ற விசாரணைகளைக் கண்டும் காணாதது போன்று அமெரிக்காவினால் திடீரெனக் கைவிட்டு விடமுடியாது.

ஏனென்றால், அமெரிக்கா தான் இந்த விசாரணைகளை நடத்த வேண்டும், போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறப்பட வேண்டும், நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்திய முதல் நாடு. ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதில் முக்கியமாகவும் முதன்மையாகவும் பணியாற்றியது அமெரிக்கா தான்.

எனவே, இலங்கையில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டு விட்டது என்ற காரணத்தை முன்வைத்து, திடீரென போர்க்குற்ற விசாரணை விவகாரத்தை அமெரிக்கா தொப்பென்று கைவிட்டு விட முடியாது.

ஒரு காலஅவகாசத்தைக் கொடுக்கலாம், இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை கொஞ்சம் பின்தள்ளிவைக்க உதவலாம். அதையே தான் இப்போது அமெரிக்கா செய்யத் தயாராகியிருக்கிறது. அதே வேளை, சர்வதேச விசாரணை நடத்தப்பட்டால், இலங்கையின் படை அதிகாரிகளும், அரசியல் [illegible] சர்வதேச நீதிமன்ற விசாரணையை எதிர்நோக்க நேரிடும் என்று கூறியிருக்கும், மங்கள சமரவீர அதனைத் தடுப்பதற்கே, உள்நாட்டு விசாரணையை ஆரம்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார்.

வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் தொடங்கவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடருக்கு முன்னதாக, உள்நாட்டு விசாரணை ஒன்றை ஆரம்பிப்பதன் மூலம், சர்வதேச விசாரணையின் அடுத்த கட்டத்துக்கு முட்டுக்கட்டை போடலாம் என்று மங்கள சமரவீர எதிர்பார்க்கிறார்.

அமெரிக்காவின் தற்போதைய நிலைப்பாடு மற்றும், உள்நாட்டு விசாரணை குறித்த இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு என்பனவற்றை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் போது, ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான நகர்வுகள் திடீர் முடக்க நிலையை அடையும் சாத்தியங்களை அதிகப்படுத்தியிருக்கிறது.

சர்வதேச விசாரணை என்பது தமிழர்களின் நீண்டநாள் வலியுறுத்தலாக இருந்து வந்தது. ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் விசாரணை, முழு அளவில் இல்லாவிடினும், ஓரளவுக்கேனும் தமக்கு நியாயத்தைப் பெற்றுத் தரும் என்ற எதிர்பார்ப்பை தமிழர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தது. ஆனால், ஜனவரி 8இற்குப் பிந்திய அரசியல் சூழல் இந்த எதிர பார்ப்புகள் நம்பிக்கைகள் அனைத்தையுமே பொடிப்பொடியாய் நொறுக்கி விடுமோ என்ற அச்சத்தை தமிழ்மக்கள் மத்தியில் இப்போது ஏற்படுத்தியிருக்கிறது.

உள்நாட்டு விசாரணைகளின் மூலம் நீதி கிடைக்காது என்ற நிலையில் தான் தமிழ் மக்கள் சர்வதேச விசாரணையின் மீது நம்பிக்கை வைத்திருந்தனர். கடந்த காலங்களில் தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நியாயம் பெற்றுக் கொடுப்பதாக உள்நாட்டில் நடத்தப்பட்ட விசாரணைகள் எதுவுமே, அவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கத் தவறியிருந்தன. அதனால்தான் உள்நாட்டு விசாரணைகளின் மூலம் தமக்கு நீதி கிடைக்காது என்று தமிழ்மக்கள் உறுதியாக நம்பினர்.

அதுபோலவே மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் உள்நாட்டு விசாரணை என்று மேற்கொள்ளப்பட்ட அனைத்து விசாரணைகளுமே, தமிழ்மக்களின் அந்த அவநம்பிக்கை சரியானது என் பதை நிரூபிக்கும் வகையிலேயே அமைந்திருந்தன. இதனால், ஐ.நா. நடத்தும் சர்வதேச விசாரணை மீது தமிழ மக்கள் அதிகளவு நம்பிக்கையைக் கொண்டிருந்தனர்.

திடீரென அந்த செயல்முறைகள் முடக்கப்பட்டு உள்நாட்டு விசாரணைகள் மீண்டும் தொடங்கப்படுவது தமிழ்மக்களை மேலும் அவநம்பிக்கைக்கு உள்ளாக்கும் நிலையையே ஏற்படுத்தும். உள்நாட்டு விசாரணையாலும், சர்வதேச விசாரணையாலும் எந்தப் பயனுமில்லை என்ற கருத்து தமிழ் மக்களிடம் மேலோங்கும் நிலை உருவாகலாம். ஏற்கனவே புதிய உள்நாட்டு விசாரணை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிருப்தியும் ஏமாற்றமும் வெளியிட்டுள்ளது. உள்நாட்டு விசாரணைகள் குறித்து தமிழ்மக்கள் கொள்ளும் சந்தேகத்துக்கு இன்னொரு காரணமும் உள்ளது.

உள்நாட்டு விசாரணை மூலம் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்களா? அத்தகைய தண்டனைகள் எந்தளவுக்கு உறுதியாக நடைமுறைப்படுத்தப்படும் என்ற கேள்வி உள்ளது. ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்ட - விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரைத் தலைமை தாங்கி நடத்தியவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

போர்க்குற்றங்கள் தொடர்பாக அவரே பதிலளிக்க வேண்டியவர். இப்போது அவர் அதிகாரத்தில் இல்லாது போனாலும், இதுகுறித்து அவரிடம் எந்த விசாரணையும் நடத்தவோ, வழக்குத் தாக்கல் செய்யவோ முடியாது. ஏனென்றால், இலங்கையின் அரசியலமைப்புச் சட்டப்படி, ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக, ஓய்வுபெற்ற பின்னர் விசாரணைகளை நடத்தவோ தண்டிக்கவோ முடியாது.

இதனை அடிப்படையாக வைத்து தான், ஜனாதிபதி தேர்தலுக்கு மறுநாள், அதிகாலையில் அலரி மாளிகையில், ஆட்சியைத் தக்க வைக்கும் இராணுவச் சதித்திட்டம் குறித்து மஹிந்த ராஜபக்ஷவிடம் விசாரணை நடத்த முடியாது என்று அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறியிருந்தார்.

இப்படியான நிலையில், உள்நாட்டு விசாரணையில், போருக்குப் பொறுப்பாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவிடம் எவ்வாறு விசாரணை நடத்தப்படும், அதில் அவர் குற்றவாளியாக காணப்பட்டால் எவ்வாறு தண்டிக்கப்படுவார்? என்ற கேள்வி இருக்கிறது. அதைவிட, உள்நாட்டு போர்க்குற்ற விசாரணை நடத்தி, குற்றவாளியாக காணப்படுவோருக்குத் தண்டனை விதிக்கலாம் என்றும், பின்னர் சில ஆண்டுகளிலேயே அவர்களுக்கு பொதுமன்னிப்பு அளித்து விடுவிக்கலாம் என்றும் யோசனை கூறியிருக்கிறார் முன்னாள் பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா.

இது மோசமானதொரு ஆலோசனை என்பதில் சந்தேகமில்லை. அதைவிட உலகத்தையும் தமிழ மக்களையும் ஏமாற்றும் வகையிலானது. பெயருக்கு ஒரு விசாரணையை நடத்தி, குற்றவாளிகளை தண்டித்து விட்டு பொதுமன்னிப்பு அளித்து விடுவிக்கலாம் என்பது, நீதியை வழங்கும் முறையாக எப்படிக் கருத முடியும்.

இதுபோன்ற குறுக்குவழித் திட்டங்களின் மூலம், உள்நாட்டு விசாரணைகளை இப்போதைய அரசாங்கம் நடத்தாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இவ்வாறான நீதிக்கு அப்பாற்பட்ட செயல்களை அரசாங்கம் முன்னெடுப்பதற்கு சர்வதேசம் அனுமதிக்குமேயானால், அது தமிழ்மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது. இன்னும் இன்னும் குரோத மனப்பான்மையும், அவநம்பிக்கையையும், தான் ஏற்படுத்தும். அதற்குத்தான் உள்நாட்டு விசாரணை இடமளிக்கப் போகிறது என்றால், அது நிலையான அமைதிக்கான வழிமுறையாக இருக்காது.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோகக் குற்றவாளிகளுக்கு ஆயுள்தண்டனை விதிப்பதற்கு நடவடிக்கை

## சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவர்களுக்கு ஆயுள்தண்டனை வழங்கும் வகையில் சட்டங்களை கடுமையாக்கவுள்ளதாக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோசி சேனாநாயக்க எச்சரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் நீதி அமைச்சர் மற்றும் பிரதி நீதியமைச்சர் ஆகியோருடன் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.



சிறுவர்களை முறையாக பராமரித்து அவர்களது உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு பதிலாக இன்று நாட்டில் காணப்படும் நிலைமை கவலையளிப்பதாகவும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் பிணையில் விடுவிக்கப்படுவதை தடுக்கும் வகையில் சட்டத் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் ரோசி சேனாநாயக்க தெரிவித்தார்.

யுத்தத்திற்குப் பின்னரான காலப் பகுதியில் வடக்கில் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகளவில் இடம்பெற்றுள்ளது குறிப்பாக யாழ். மாவட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

வடக்கில் யுத்தம் காரணமாக அதிகளவான சிறுவர்கள் அநாதரவாகவுள்ளதும் இதற்கு முக்கிய காரணம் எனவும் சிறுவர்களைப் பாதுகாக்க விசேட நடவடிக்கைகளை புதிய அரசாங்கம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# நினைக்கும் அளவிற்கு பேய் கறுப்பு கிடையாது

## ஜோன் அமரதுங்க கூறுகிறார்



நினைக்கும் அளவிற்கு பேய் கறுப்பு நிறமில்லை என சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பில் சிங்கள ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்ன நடக்கின்றது என? இவ்வாறான பல்வேறு சவால்களை ஏற்கனவே எனது அரசியல் வாழ்க்கையில் சந்தித்திருக்கின்றேன்.

விமர்சனங்களையும் கருத்துக்களையும் வெளியிட எதிர்க்கட்சியினருக்கு அவகாசம் உண்டு. அதில் எவ்வித தலையீடுகளையும் செய்யப் போவதில்லை.

நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பில் கருத்து வெளியிடப் போவதில்லை என ஜோன் அமரதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# ஐ.தே.க. ஊழல்கள் பற்றி விரைவில் முறைப்பாடு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியால் மேற்கொள்ளப்பட்ட மோசடி மற்றும் ஊழல்கள் தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அது குறித்த ஆவணங்களுடன் விரைவில் முறைப்பாட்டை வழங்க நடவடிக்கை எடுப்பதாக அவர் கூறியுள்ளார்.

அஸ்கிரியபீட மஹாநாயக்கர் உடுகம ஸ்ரீ புத்தரக்கித தேரரை சந்தித்து விட்டு ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட போதே மஹிந்தானந்த அளுத்கமகே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-5)

# சரத்துடன் கைதான புலனாய்வுப்பிரிவினருக்கு இதுவரை நியாயம் கிடைக்கவேயில்லையாம்

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் கைது செய்யப்பட்ட இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு இதுவரையில் நியாயம் கிடைக்கவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கைது செய்யப்பட்ட போது அவருடன் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் சிலரும் கைது செய்யப்பட்டனர்.


பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ராஜதுரோக செயற்பாடுகளில் ஈடுபட்டதாக விசாரணை நடத்தப்பட்டது.

புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி தவிர்ந்த ஏனைய உத்தியோகத்தர்கள் நீண்ட நாட்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பின்னர் கடற்படை முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டு அவர்களின் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு அதன் பின்னர் குறிப்பிட்ட படையணிகளுக்கு புலனாய்வு உத்தியோகத்தர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

சில மாதங்களின் பின்னர் அப்போதைய அரசாங்கம் இவர்களை புலனாய்வுப் பிரிவிலிருந்து நீக்கி, சாதாரண படையணிப் பணிகளில் ஈடுபடுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரையில் இந்த அதிகாரி மற்றும் உத்தியோகத்தர்களுக்கு எவ்வித பதவி உயர்வும் வழங்கப்படவில்லை.



இந்தப் புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கு எதிராக உச்ச நீதிமன்றில் வழக்கு ஒன்றும் விசாரணை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, சரத் பொன்சேகாவிற்கு வழங்கப்பட்ட பூரண சுதந்திரம் தமக்கும் வழங்கப்பட வேண்டுமென இந்தப் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5)

## இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டி

அல்வாய் வடக்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. பாடசாலை அதிபர் ந.இராசலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஓய்வுநிலைப் பொறியியலாளரும் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான வே.சிவயோகன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

# இன்று ஒரு தகவல்

## கொட்டாவி

நீங்கள் சிரித்தால் இந்த உலகமும் சிரிக்கும்! என்று சொல்வதுண்டு. அதே மாதிரி இன்னொன்றும் சொல்லலாம்.

"நீங்கள் கொட்டாவி விட்டால் இந்த உலகமும் கொட்டாவி விடும்!" என்று. ஆமாம்! இது உண்மை தான்!

இது ஒரு தொற்று வியாதி மாதிரி...

ஒருவர் வாயைத் திறப்பதைப் பார்த்தால் நமக்கும் ஒரு உந்துதல் வந்து கொட்டாவி விடுகிறோம்.

"இந்தக் கொட்டாவியைப் பற்றி நினைத்தாலே கொட்டாவி வந்து விடுகிறது" என்கிறார் Dr. Provine என்ற ஆராய்ச்சியாளர்.

ஒரு சுவடத்தில் பலரிடம் கொட்டாவி சம்பந்தமான விடயத்தைக் கொடுத்து படிக்கச் சொல்லியிருக்கிறார்.

அப்படி படிக்கும் போதே 75 சதவீதமானோர் கொட்டாவி விட்டார்களாம். மற்ற விடயத்தைப் படிக்கும் போது 20 சதவீதமானோர் தான் கொட்டாவி விட்டார்களாம்!

இந்த தகவலை கேட்கும் போது எத்தனை பேர் கொட்டாவி விடுகிறார்களோ? யாருக்குத் தெரியும்.

கொட்டாவியைப் பற்றி பொதுவாக அனைவரும் நம்பிக் கொண்டிருப்பது என்ன தெரியுமா? இரத்தத்தில் இருக்கும் ஒட்சிசனை அதிகரிப்பதற்கோ அல்லது இரத்தத்திலிருந்து மேலதிக காபனீரொட்சைட்டை வெளியேற்றவோ உண்டான சுவாசப் பயிற்சிதான் கொட்டாவி என்று எல்லோரும் நினைக்கிறார்கள்.

ஆனால் Dr. Provine உம் இன்னொருவரும் இதைப் பற்றி செய்த ஆராய்ச்சியில் இந்தக் கருத்துஅவ்வளவு பொருத்தமானதாக இல்லை என்கிறார்கள்.

ஏனெனில் சுத்தமான ஒட்சிசனை சிலபேர் சுவாசிக்கிற மாதிரி செய்து பார்த்ததில் அவர்களெல்லாம் அதிகமாக கொட்டாவி விடுகிறார்களாம்.

அப்படியானால் ஒட்சிசன் தேவைக்காக அவர்கள் கொட்டாவி விடுகிறார்கள் என்று நினைப்பது தவறுதானே!

மனிதன் பிறந்து 5 நிமிடத்திலிருந்து இதை ஆரம்பித்து விடுகிறான்.

அதுமட்டுமல்ல மிருகம்–பறவை–மீன்களெல்லாம் சுட கொட்டாவி விடுகிறது.

மனிதன் தூண்டுதல் உணர்வு (stimulation) குறைவாக இருக்கும் போது கொட்டாவி விடுகிறான்.

முக்கியமான ஒன்று நடக்கப் போகிறது என்ற எதிர்பார்ப்பில் மிருகங்கள் கொட்டாவி விடுகிறது!

மிருகங்களை பொறுத்தவரை, கொட்டாவி விடும்போது இதயத் துடிப்பு, இரத்த அழுத்தம் என்பன அதிகமாவதால் இது அந்த மிருகத்தை செயற்பட தயார் நிலைக்கு கொண்டு வருகிறது!

மனிதன்–சாவகாசமான நிலையில் கொட்டாவி விடுகிறான். சிங்கம்–சாப்பாட்டு நேரம் நெருங்கும் போது கொட்டாவி விடும்.

slamese fighting fish சுவட்டமாக இருக்கும் போது கொட்டாவி விடும். முழித்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற சூழ்நிலையில் ஒரு உந்துதலை கொடுப்பதற்காக உடம்பு செய்யும் உதவி கொட்டாவி!

சில பிள்ளைகளுக்கு பரீட்சை எழுத உட்கார்ந்தால் முதலில் கொட்டாவிதான் வருகிறது. அதன்பின்னர் தான் Answer வருகிறது.

கொட்டாவியைப் பற்றி இதுதான் உண்மை என்று உடல் ரீதியான விளக்கத்தை இன்னமும் கொடுக்க முடியவில்லை! ஏனெனில் அது எந்த நேரத்தில் வரும் என்று உறுதியாக சொல்ல முடியவில்லை.

அடிக்கடி கொட்டாவி வருகிறது என்று ஒருவர் டாக்டரிடம் போனார்.


டாக்டரும் சோதித்து விட்டு வாயைத் திறக்கச் சொல்லி மருந்தை வாயில் போட்டு மூடிக் கொள்ளுங்கள் என்றார். அதற்குள் டாக்டர் வெளியே போய்விட்டு வந்தார்.

மருந்தை விழுங்க வாயைத் திறந்தவர் மூடவேயில்லை! "ஏன் சேர்... பெரிய கொட்டாவியாக வருகிறதா?" என்று கேட்டார் டாக்டர். "அதற்கு இவர் கொட்டாவி எப்பொழுதோ போய்விட்டது... இப்ப நான் வாயைத் திறந்தது உங்கள் கையிலுள்ள பில்லைப் பார்த்து விட்டு!" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்குவாரா ஜெ...!



பரபரக்கும் பெங்களூர்

ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் மேல் முறையீட்டு விசாரணை கர்நாடக உயர்நீதிமன்றத்தில் பரபுரப்பாக நடந்து வருகிறது. இந்தச் சூழலில் பவானி சிங் அரசு வழக்கறிஞராக ஆஜராகலாமா, கூடாதா என்ற விவாதம் சூடுபிடித்துள்ளது.

**"கர்நாடக வழக்கில் மணிப்பூர் வழக்கறிஞர் ஆஜராக முடியுமா?"**

பவானி சிங்கை நீக்க வேணடும் என்று அன்பழகன் 28ஆம் திகதி மீண் டும் ஒரு ரிட் மனுத் தாக்கல் செய்து அது கடந்த 2ஆம் திகதி கர்நாடகஉயர்நீதிமன்றதலைமை நீதிபதி வகேலா மற்றும் நீதிபதி அசோக் பி.ஹிஞ்சிகேரி என 2 நீதிபதிகள் அடங்கிய பெஞ்ச் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அன்பழகன் தரப்பில் நாகேஷ், தமிழக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம் சார்பில் ராவ், பவானி சிங் சார்பில் செபஸ்டின், கர்நாடக அரசு சார்பில் அரசுத் தலைமை வழக்கறிஞர் ரவிவர்மகுமார் ஆகியோர் ஆஜரானார்கள்.

செபஸ்டின்: இந்த வழக்கில் அரசு வழக்கறிஞராக பவானி சிங் ஆஜராவ தற்கு உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. கீழ் நீதிமன்றத்தில் அவர் தான் அரசு வழக்கறிஞராக இருந்து வழக்கை திறம்பட நடத்தி குற்ற வாளிகளுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்திருக்கிறார். இந்த மனு மீது பதிலளிக்க கால அவகாசம் வேண்டும்.



வகேலா: (தமிழ்நாடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரக வழக்கறிஞர் ராவ்வை பார்த்து) இந்த வழக்கின் அப்பீல் விசாரணையில் எந்த ஆதாரத்தின் அடிப்படையில் அரசு வழக்கறிஞரை நீங்கள் நியமித்து வழக்கை நடத்தி வருகிறீர்கள்?

ராவ்: சி.ஆர்.பி.சி 24(8)இன் அடிப்படையில் பவானி சிங்கை நியமிக்கும் அதிகாரம் உள்ளது. இந்த வழக்கின் புகார்தாரர்கள் நாங்கள் தான். எங்கள் சார்பில் வாதிட யார் ஆஜராக வேண்டும் என்பதை தீர்மானிக்கும் உரிமை எங்களுக்குத்தான் இருக்கிறது.

வகேலா: சி.ஆர்.பி.சி 24(1) இன்படி கிரிமினல் வழக்கு ஒரு மாநிலத்திலிருந்து இன்னோர் மாநிலத்துக்கு மாற்றம் செய்யும் போது எந்த மாநிலத்துக்கு மாற்றப்படுகிறதோ அந்த மாநில அரசுதான் அரசு வழக்கறிஞரை நியமிக்க வேண்டும் எனக் கூறப்பட்டு இருக்கிறது.

நாகேஷ்: இந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் தெளிவாகச் சொல்லி இருக்கிறது. இந்த வழக்கின் அரசு வழக்கறிஞரை நியமிக்க கர்நாடக அரசு, கர்நாடக உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியிடம் ஆலோசனை செய்துதான் நியமிக்க வேண்டும். அரசு வழக்கறிஞரை தமிழக அரசு நியமிக்க உரிமை இல்லை.

ராவ்: ஒருவேளை இந்த வழக்கில் கீழ் நீதிமன்றம் குற்றவாளிகளை விடுதலை செய்திருந்தால், அதை எதிர்த்து நாங்கள் தான் அப்பீலுக்கு சென்றிருப்போமே தவிர, கர்நாடக அரசு அப்பீலுக்குப்போகாது. அதனால எங்கள் தரப்பு வழக்கறிஞரை நியமிக்கும் உரிமை எங்களுக்கு உள்ளது.

நாகேஷ்: தமிழ்நாட்டில் சங்கராச்சாரியார் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு புதுச்சேரிக்கு மாற்றலாகியது. அதில் சங்கராச்சாரியார் விடுதலை ஆனார். அதை எதிர்த்து புதுச்சேரி மாநில அரசு அப்பீல் செய்யவில்லை.

வகேலா: மணிப்பூரில் ஒரு கிரிமினல் வழக்குப் பதிவு செய்யப்பட்டு கர்நாடக மாநிலத்துக்கு மாற்றப்பட்டால், அந்த வழக்கின் அரசு வழக்கறிஞராக மணிப்பூர் வழக்கறிஞரை நியமிக்க முடியுமா?

நாகேஷ்: 2004இல் இந்த வழக்கு பெங்களூருக்கு மாற்றப்பட்டபோதும், தற்போது அப்பீல் நடைபெற்றுக்கொண்டு இருக்கும்போதும் தமிழ்நாட்டில் அ.தி.மு.கதான் ஆட்சியில் இருக்கிறது. அதனால் இந்த வழக்கில் அரசியல் தலையீடு இருக்கிறது.

வகேலா: இங்கு அரசியலை தொடர்புபடுத்த வேண்டாம். (கர்நாடக உயர் நீதிமன்ற தலைமை வழக்கறிஞர் ரவிவர்ம குமாரை பார்த்து): இதற்கு என்ன சொல்கிறீர்கள்?


ரவிவர்ம குமார்: நீதிமன்ற உத்தரவை செயற்படுத்தத் தயாராக உள்ளோம்.

ராவ்: இந்த வழக்கு 19 நாட்களாக நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. இதில் ஏ1ன் வாதமும் முடிந்துவிட்டது. ஏ2வின் வாதம் நிறைவு பெறும் நிலையில் இருக்கிறது. உச்ச நீதிமன்றமும் 3 மாதத்தில் முடிக்க உத்தரவிட்டுள்ளது. இந்த நிலையில் இப்படி ஒரு பிரச்னை எழுப்புவது சரியில்லை.

வகேலா: அதற்காக சட்ட விதிமுறைகளை மீறிச் செயல்பட அனுமதிக்கலாமா?

**தமிழக அரசுக்கு அதிகாரம் இல்லை!**

செபஸ்டின்: இந்த வழக்கு நடுநிலையாகவும், நியாயமாகவும் நடைபெற வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழகத்திலிருந்து 2004இல் கர்நாடகத்துக்கு மாற்றப்பட்டது. அப்போது ஆச்சார்யா நியமிக்கப்பட்டார். அவர் இந்த வழக்கிலிருந்து ராஜினாமா செய்ததை அடுத்து அரசு வழக்கறிஞராக பவானி சிங்கை கர்நாடக அரசு நியமித்தது. கீழ் நீதிமன்றத்தில் பவானி சிங் அரசு வழக்கறிஞராக இருந்து குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தார். அதையடுத்து தற்போது உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு விசாரணையிலும் ஆஜராகி இருக்கிறார்.



**பவானி சிங்குக்கு பதில் நாராயண ரெட்டி இருக்கிறார்...**

செபஸ்டின்: பவானி சிங்கை நீக்கக் கோரி அவர்கள் உச்ச நீதிமன்றத்துக்குச் சென்றபோது நீதிபதிகள் கண்டித்து ள்ளதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நீதிபதி: உச்ச நீதிமன்றம் பவானி சிங்கை நியமனம் செய்து பிறப்பித்த உத்தரவு கீழ் நீதிமன்றத்துக்கு மட்டும் தான். அந்த உத்தரவு நகலைப் படித்துப் பாருங்கள்.

ராவ்: சி.ஆர்.பி.சி 24(8) இன்படி அரசு வழக்கறிஞர் பவானிசிங் கீழ் நீதிமன் றத்தில் ஆஜராகி வாதம் செய் தார். அதைத் தொடர்ந்து குற்ற வாளிகள் தண்டிக்கப்பட்டு கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் மேல் முறையீட்டு மனுவுடன் ஜாமீனில் விடுதலை செய்யக் கோரி மனுத்தாக்கல் செய்தனர். அப்போது தமிழக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம் சார்பில் ஆஜராகி வாதிட 29.9.2014 அன்று அனுமதிக் கடிதம் கொடுக்கப்பட்டது. அதை ஆதாரமாக வைத்து வாதிட்டு வருகிறார். இந்த வழக்கில் நாங்கள் புகார்தாரர் என்ற அடிப்படையில் அரசு வழக்கறிஞரை நியமிக்கும் அதிகாரம் எங்களுக்கு உள்ளது. இந்த வழக்கில் தமிழக அரசின் அரசாணை எண் 865இன்படி, அரசு வழக்கறிஞராக கடைசிவரை பவானி சிங் ஆஜராக முடியும். ஆச்சார்யா இருந்தபோது எதிர்தரப்பு சார்பில் பல் வேறு மனுக்கள் உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன் றத்தில் தாக்கல் செய்த போது தமிழக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்கு நரகம் சார்பாக ஆஜராகி வாதிட்டிருக்கிறார். அதே போல பவானி சிங்கும் மேல்முறையீட்டில் ஆஜராகி இருக்கிறார். நாங்கள் சட்ட விரோதமாக இந்த வழக்குக்கு சம்பந்தம் இல்லாத ஒருவரை நியமிக்கவில்லை. கீழ் நீதிமன்றத்தில் கையாண்ட வழக்கறிஞரைத்தான் நியமித்து இருக்கிறோம்.

வகேலா: கர்நாடகாவில் நடைபெறும்போது அரசு வழக்கறிஞரை தமிழக அரசு நியமனம செய்வது தவறு இல்லையா அரசு வழக்கறிஞரை நியமனம் செய்ய என்ன விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன, உச்ச நீதிமன்றத்தில் முன் உதாரணமான வழக்குகள் இருக்கின்றனவா?

ராவ்: (சற்று மௌனத்துக்குப் பிறகு) இந்த வழக்கு மேல்முறையீட்டு விசாரணையில் ஏ1 வாதம் நிறைவுபெற்றது. அடுத்து ஏ2 வழக்கறிஞர் வாதிட்டு வருகிறார். இன்று வரை 20 நாட்கள் விசாரணை நடந்து முடிந்துவிட்டது. இந்தச் சூழ்நிலையில் பவானி சிங்கை நீக்கினால் வழக்குப் பாதிக்கப்படும்.

வகேலா: (கர்நாடக அரசின் தலைமை வழக்கறிஞரைப் பார்த்து) நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

ரவிவர்ம குமார்: முழுக்க முழுக்க உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி நடைபெறுகிறது. இதில் கர்நாடக அரசுக்கு எந்தப் பங்களிப்பும் இல்லை. ஆனால், சி.ஆர்.பி.சி 24(1) இன்படி ஒரு வழக்கு எந்த மாநிலத்தில் நடைபெறுகிறதோ அது சம்பந்தப்பட்ட மாநில அரசுதான் அந்த வழக்கின் அரசு வழக்கறி ஞரை நியமிக்கும் அதிகாரம் உள்ளது என்று சட்டத்தில் குறிப்பிட்டு இருக்கிறது. அதன்படி பார்க்கும்போது தமிழக அரசின் அனுமதியுடன் பவானி சிங் ஆஜராகி வருவது சட்டத்துக்குப் புறம்பானது.

வகேலா: கர்நாடக அரசு இந்த வழக்கில் அரசு வழக்கறிஞரை நியமிக்காதபோது அரசு வழக்கறிஞர் ஆஜராகி இருப்பது சட்டத்துக்குப் புறம்பானது. அவரை மாற்றிவிட்டு வேறு யாரையாவது நியமனம் செய்யும் யோசனை அரசிடம் உள்ளதா?

ரவிவர்ம குமார்: பவானி சிங் இல்லாத பட்சத்தில் அரசு மூத்த சிறப்பு வழக்கறிஞர் நாராயண ரெட்டியைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அதை அரசு தன்னிச்சையாக செய்யத் தயாராக இல்லை.

வகேலா: பவானி சிங்கை நீக்கினால் ஏற்படும் சாதக, பாதகங்கள் குறித்து 3 தரப்பினரும் தங்களது கருத்துகளை உணவு இடைவேளைக்குப் பிறகு தாருங்கள்.

தலைமை நீதிபதி சாதகமான தீர்ப்பை வழங்கமாட்டார் உணவு இடைவேளை விடப்பட்டது. பவானி சிங் பதவி காலியாகி விடும் என 99 சதவிகிதம் அனைவரும் நம்பிக் கொண்டிருந்த வேளையில்... (உணவு இடைவேளைக்குப் பிறகு)

செபஸ்டின்: பவானி சிங் நியமனம் சட்டப்படி சரியில்லை என்று அன்பழகன் தரப்பு புகார் கொடுத்ததை அடுத்து 23-9-2013இல் பவானி சிங்கை நீங்கள்தான் நீக்குவதற்கு உத்தரவு பிறப்பித்தீர்கள். அதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து மீண்டும் இந்த வழக்கின் அரசு வழக்கறிஞராக ஆஜரானார். அதனால் மீண்டும் இதே வழக்கை நீங்கள் விசாரித்தால் ஒருதலை பட்சமாக இருக்கும் என்பதால், வேறு பெஞ்சுக்கு மாற்ற வேண்டும்.

வகேலா: என் மீது சந்தேகம் எழுப்பி மெமோ கொடுத்துள்ளதால், நான் தொடர்ந்து விசாரிப்பது சரியில்லை. அதனால் வேறு அமர்வுக்கு பரிந்துரை செய்கிறேன். பவானிசிங ஆஜராகலாமா, வேண்டாமா என்பதே பெரிய வாத மாக பெங்களூரில் போய்க் கொண்டு இருக்கிறது.

-ஜூனியர் விகடன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்காக தங்கம்,விலையுயர்ந்த பொருட்களால் வடிவமைக்கப்பட்ட படகு



உலகசந்தையில் முதல் முறையாக பெண்களுக்கான ஆடம்பர சொகுசு படகு விற்பனைக்கு வரவுள்ளது.

பெண்களுக்கே என பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட இந்த சொகுசு படகில் மிகவும் விலை உயர்ந்த தங்க மொசைக் தரை ஸ்வரோவ்ஸ்கி கற்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

மிகவும் ரம்யமான வெள்ளை மற்றும் தங்க வண்ணங்களில் முழுமையாக வடிவமைக்கப்பட்ட இந்தசொகுசு படகில் படிகக்கற்கள், மென்மையான ஃபேர்கள், பூக் கள், முத்துக்கள், மதிப்புமிக்க இரத்தினக் கற்கள் என மிகவும் ஆடம்பரமான உள்ளமைப்புகளுடன் வடிவமைக் கப்பட்டுள்ளது. ஐந்து மாடிகள் கொண்ட இந்த ஆடம்பர சொகுசுப் படகில் உயர் தர மரங்களால் ஆன கட்டில்கள், நாற்காலிகள், மேசைகள், அலுமாரிகள் என அனைத்தும் விலை உயர்ந்த பொருட்களாலேயே அமைக்கப்பட்டுள்ளது.

இந்த படகில் 12 நபர்கள் தங் கும் வசதி செய்யப்பட்டுள்ளது. பட கில் மேல் சென்று சுற்றியுள்ள அழகினை ரசிக்கும் வகையில் திறந்த மேல்தளம் மற்றும் இரண்டாம் தளத்தில் ஒரு வட்டவடி விலான கிங்சைஸ் மாஸ்டர் அறை இருவர் தங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 5 தனிஅறைகள், உணவருந்தும் இடம், ஒரு சிறு இசை நிகழ்ச்சி நடத்தும் வசதி, நீச்சல் குளம், சாவ்னாவசதி, திரையரங்கு மற்றும் ஹெலிபேட் என இதன்ஆடம்ரங்கள்நீண்டுகொண்டே போகின்றன. சிறந்த வடிவ மைப்பாளரான பெர்சானி யால் வடிவமைக்கப்பட்ட இந்த ஆடம்ர சொகுசு படிற்கு "லாபெல்லே" என பெரிய்ட்டுள்ளது. "லாபெல்லே" என்றால் அழகு என்று அர்த்தம். இந்த சொகுசு படகின் விலை இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஜனாதிபதித் தேர்தல் திடீரென ஒத்திவைப்பு

ஆபிரிக்காவின் பொருளாதார வலிமைமிக்க நாடான நைஜீரியாவில் குட்லக் ஜொனாதன் தற்போது ஜனாதிபதியாகவுள்ளார். அங்கு புதிய ஜனாதிபதியையும், பாராளு மன்ற உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்க எதிர்வரும் 14ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும் என தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது.

தேர்தலில் மக்கள் ஜனநாயக கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி குட்லக் ஜொனாதனும், அனைத்து முற்போக்கு காங்கிரஸ் (ஏ.பி.சி) சார்பில் முன்னாள் சர்வாதிகாரி முகமது புகாரியும் போட்டியிடுகிறார்கள். தேர்தல் பிரசாரத்தில் இரு கட்சியினரும் மும்முரமாக ஈடுபட்டு வந்தனர்.


இந்த நிலையில் ஜனாதிபதி தேர்தலையும், பாராளுமன்ற தேர்தலையும் திடீரென அந்நாட்டு தேர்தல் ஆணையம் ஒத்தி வைத்துள்ளது. 14ஆம் திகதி நடைபெற இருந்த தேர்தல் பாதுகாப்பு கார ணங்களுக்காக அடுத்த மாதம் 28ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நைஜீரியாவில் தொடர் வன்செயல்களில் ஈடுபட்டு வரும் போகோ ஹராம் தீவிரவாதிகளுக்கு பதிலடி கொடுக்கும் பணியில் பெரும்பாலான பாதுகாப்பு படையினர் ஈடுபட்டுள்ளதால், தேர்தல் நேரத் தில் பாதுகாப்பு அளிப்பதை உறுதி செய்ய முடியாது என்று இரா ணுவம், தேர்தல் ஆணையத் திற்கு கடந்த வாரம் கடிதம் எழுதி இருந்தது. இதனையடுத்து தற்போது தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டதற்கு ஆளும் மக்கள் ஜனநாயக கட்சி தான் காரணம் என்று எதிர்க்கட்சி குற்றம் சாட்டி உள்ளது. மேலும், அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன்கெரியும் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார். தேர்தல் ஆணையத்தின் இந்த அறிவிப்பு ஏமாற்றம் அளிப்பதாக அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# காற்பந்து போட்டியில் கலவரம்





## 22 பேர் பலி!

**காற்பந்துப் போட்டியை பார்த்து ரசிக்கச் சென்றவர்களுக்கு இடையில் திடீரென மூண்ட வன்முறையில் 22 பேர் சம்பவஇடத்தில்நெரிசலில் சிக்கி உயிரிழந்த அதேவேளை பலர் படுகாயமடைந்த நிலையில் உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக எகிப்து பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.**

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இந்த வன்முறைச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

எகிப்தின் வான் பாதுகாப்பு விளையாட்டு மைதானத்தில் எகிப்திய பிரீமியர் லீக் போட்டியில் உள்ளூர் அணிகளான ஜமா லேக் மற்றும் இ.என்.பி.பி.ஜ. மோதின.

காற்பந்து போட்டியினை காண்பதற்கு அதிகமான ரசிகர்கள் வந்தனர். ரசிகர்கள் சிலர் போட்டியை பார்ப்பதற்கான அனுமதி அட்டையை பெறாமலே மைதானத்திற்குள்ளே செல்ல முயற்சித்தனர். அனுமதி அட்டை பெறாமல் முயற்சி செய்தவர்கள் ஜமாலேக் அணியினர் ரசிகர்கள் என்றே தெரிவிக்கப்பட்டுள்ளது. அனுமதி அட்டை பெறாமல் மைதானத்திற்குள் நுழைய முய ன்றவர்களை பாதுகாப்பு பணியில் இருந்தவர்கள் தடுத்தி நிறுத்தினர்.

இதனையடுத்து காற்பந்து ரசிகர்கள் மற்றும் பாதுகாப்பு படையினர் இடையே மோதல் ஏற்பட்டது. மோதல் வன்முறையாக மாறியது. கார்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. இதனையடுத்து பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசி வன்முறையில் ஈடுபட்டவர்களை கலைக்க முயற்சி செய்தனர். இதனால் அங்கு நெரிசலும் ஏற்பட்டது.

வன்முறை சம்பவம் மற்றும் நெரிசலில் சிக்கி 22 காற்பந்து ரசிகர்கள் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. காயம் அடைந்த பலர் அங்குள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எகிப்தில் காற்பந்து போட்டியின் போது வன்முறைகள் வெடிப்பது இதுஒன்றும் புதியதுஅல்ல. கடந்த 2012 ஆம் ஆண்டும் காற்பந்து போட்டியின் போது ஏற்பட்ட வன்முறையில் 70 இற்கும் மேற்பட்டோர்கள் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




# போராட்டங்களை நிறுத்துமாறு வர்த்தக சமூகம் ஆர்ப்பாட்டம்

பங்களாதேஷில் அரசாங்கத்துக்கு எதிரான வேலைநிறுத்தம் மற்றும் போக்குவரத்தை முடக்கும் போராட்டங்களை முடிவுக்குக் கொண்டுவருமாறு கோரி தலைநகர் டாக்காவில் வர்த்தக சமூகத்தினர் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பங்களாதேஷில் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக நடந்து வரும் வன்முறைகள் மற்றும் குழப்பங்கள் காரணமாக நாட்டின் பொருளாதாரத்திற்கு சுமார் 10 பில்லியன் டொலர்கள் நட்டம் ஏற்பட்டுள்ளதாக வர்த்தகத் தலைவர்கள் கூறுகின்றனர்.

முன்னைய தேர்தலில் மோசடிகள் நடந்ததாகக் கூறுகின்ற பிரதான எதிர்க்கட்சித் தலைவி கலிதா ஜியா புதிதாக பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று கோருகின்றார்.

இதேவேளை கடந்த சனிக்கிழமை அரசியல் வன்முறைகளுடன் தொடர்புடைய இரண்டு குண்டுத் தாக்குதல் சம்பவங்களில் 9 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது (இ-5)

# பாராளுமன்ற உறுப்பினர் சுட்டுப் படுகொலை!

கென்யாவின் பாராளுமன்ற உறுப்பினர் கடந்த சனிக்கிழமை காலை சுட்டு கொல்லப்பட்டுள்ளார். இதை தொடர்ந்து ஜனாதிபதி உக்ரு கென்யட்டா அரசுக்கு பாதுகாப்பற்ற நிலை நிலவுவதாக அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது. தொடர்ச்சியான தாக்குதலினால் நாட்டின் சுற்றுலா வளர்ச்சி பாதிக்கப்பட்டு இருப்பதாக இஸ்லாமியவாதிகள் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை கென்யாவின் கபிடி பாராளுமன்ற எம்.பி. ஜார்ஜ் முஜை தனது பாதுகாவலர்களுடன் தலைநகர் நிரோபியில்காரில் சென்றபோது மர்மநபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தக்கொலை தொடர்பாக அரசு தீவிர விசாரணை நடத்தி வருகிறது. அவரது 2 பாதுகாவலர்கள் மற்றும் சாரதியை கைது செய்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு அமைச்சின் கீழிருந்த கணக்குகள் குறித்து விசாரணை

## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் கீழ் பேணப்பட்டு வந்த கணக்குகள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாக பாதுகாப்புச் செயலாளர் யூ.டி. பஸ்நாயக்க தெரிவித்துள்ளார். கண்டி அஸ்கிரி மற்றும் மல்வத்து பீடாதிபதிகளிடம் ஆசி பெற்றுக்கொள்வதற்காக நேற்று முன்தினம் சென்றிருந்த போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், பாதுகாப்பு அமைச்சினால் கடந்த காலங்களில் பேணப்பட்டு வந்த வங்கிக் கணக்குகள் தொடர்பில் விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரச்சினைகள் காணப்படும் சில வங்கி கணக்கு விபரங்கள் தொடர்பில், ஜனாதிபதி மற்றும் நிதி அமைச்சின் செயலாளரின் ஆலோசனைக்கு அமைய திறைசேரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வடக்கில் சொற்ப அளவிலானவர்களே இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும். வடக்கின் இராணுவ முகாம்கள் எந்த காரணத்திற்காகவும் அகற்றிக்கொள்ளப்படமாட்டாது.

அந்தப் பிரதேசங்களின் பாதுகாப்பு மேலும் மேலும் பலப்படுத்தப்படும். பெரும் எண்ணிக்கையிலான இராணுவ முகாம்கள் அரசாங்க காணிகளிலேயே அமைக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர்கள் சிவிலியன்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# கட்டுப்பாட்டு விலை அமுலில் இல்லையா?

## 1977 இற்கு முறையிடுங்கள்

(கொழும்பு)

கட்டுப்பாட்டு விலையில் பொருட்களை விற்பனை செய்ய மறுக்கும் வியாபாரிகளுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக்குமாறு கைத்தொழில், வணிகத்துறை அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இடைக்கால வரவு செலவுத்திட்டத்தினால் மக்களுக்கு கிடைக்கவேண்டிய சலுகைகளை வழங்க மறுக்கும் வியாபாரிகளுக்கு எதிராகவே நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமைச்சர், நுகர்வோர் அதிகார சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் கட்டுப்பாட்டு விலையில் பொருட்களை விற்பனை செய்யாத நிறுவனங்கள் குறித்து 1977 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக முறைப்பாடு செய்யுமாறும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# பொருட்களின் விலை அதிகரிப்பு குறித்து இதுவரை 1500 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக பொருட்கள் விற்கப்பட்டமை குறித்து ஆயிரத்து 500 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பு தெரிவித்துள்ளது.

நிர்ணய விலையை விட அதிக விலைக்கு மண்ணெண்ணெய் விற்கப்படுகின்றமை குறித்தே அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அந்த அமைப்பின் தேசிய அமைப்பாளர் அசேல சம்பத் தெரிவித்தார்.

அத்துடன் வட, கிழக்கு மாகாணங்களிலேயே அதிகளவு முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் கொழும்பு புறக்கோட்டையிலுள்ள உணவகங்களில் தேநீர், அப்பம் என்பன அதிக விலைக்கு விற்கப்படுவது குறித்தும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை புதிய அரசின் வரவு செலவுத்திட்ட சலுகைகளை உரிய முறையில் நுகர்வோருக்கு வழங்காத வர்த்தகர்களை கண்டறியும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் நாடு முழுவதிலும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் நுகர்வோர் விவகார அதிகார சபை பணிப்பாளர் நாயகம் ஜே.ஏ.எம்.டக்ளஸ் தெரிவித்துள்ளார். (இ-5)

# காணாமற் போன ஜீப் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

முன்னாள் பிரதியமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகமவினால் கடந்த அரசாங்கத்தின் போது பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் ப்ராடோ ரக ஜீப் வண்டியொன்று காலி, ஹெவ்லொக் வீதியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார தெரிவித்தனர்.

அரச சொத்தான இந்த வாகனம், நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தின் போது காணாமல் போயிருந்த நிலையிலேயே மேற்படி பிரதேசத்திலுள்ள வாகனம் திருத்தும் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என பொலிஸார் மேலும் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (இ-


அன்பு வாசகர்களே!

உங்கள் வலம்புரியில் வாசகர்களின் அபிமானத்திற்குரிய

வலம்புரி வாரமலர்

சங்குநாதம்

15.02.2015 (ஞாயிற்றுக்கிழமை)

முதல் ஒவ்வொரு ஞாயிறும்

கவிதை, சினிமா, விதுரனின்

அதிரடி அரசியல் கட்டுரைகள்,

ஆலடி மாநாடு,

வியாசர் பதில்கள், சிறுவர் பகுதி...

என இன்னும் இன்னும் பல

சுவாரஸ்யமான விடயங்களுடன்

வெளிவரும்.

வாசிக்கத் தவறாதீர்கள்.



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 22<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: software engineering (கனடா PR)<br>தொ.இ: B/228 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 40 செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSC/ கனிய அளவையாளர்<br>தொ.இ: G/461 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 13<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: அரச தொழில் (அவுஸ்திரேலியா PR)<br>தொ.இ: B/230 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 16 சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/463 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 110 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: BA, MA/ ஆசிரியர்<br>தொ.இ: B/233 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 46 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/466 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 36<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர் (USA)<br>தொ.இ: B/236 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 11 3/4 செவ் 12 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: பெண் விவாகரத்தானவர்<br>விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/468 |

கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சருக்காக பாராளுமன்றத்தை கலைக்க வேண்டிய அவசியமில்லை

**அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்டாலும் பாராளுமன்றம் கலைக்கப்படவேண்டிய தேவையில்லையென இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி பிரதிபா மகாநாமஹேவா தெரிவித்தார்.**



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.கட்சியின் ஸ்ரீகொத்தா காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையில்,

நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்டால் பாராளுமன்றம் உடன் கலைக்கப்பட வேண்டிவரும் எனத் தெரிவித்திருந்தார்.

இது குறித்து நேற்றுக்காலை சிங்கள வானொலி சேவையொன்று கலாநிதி பிரதிபா மகாநாமஹேவாவிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படுவது அரசாங்கத்திற்கு எதிராக அல்ல.

ஒரு அமைச்சரின் செயற்பாடு தொடர்பில். எனவே, நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்டால் அமைச்சரை மாற்ற வேண்டுமே அல்லாமல் பாராளுமன்றத்தைக் கலைப்பதல்ல எனவும் கலாநிதி பிரதிபா மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# பாடசாலையில் தமிழ்மொழித் தினப் போட்டிகள் 15ஆம் திகதிக்கு முன்பு நடத்தப்படல் வேண்டும்

(மானிப்பாய்)

அகில இலங்கை தமிழ்மொழித் தினப் போட்டிகளின் பாடசாலை மட்ட போட்டிகள் யாவும் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பு நடத்தி முடிக்கப்படல் வேண்டும் என்று கலவியமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

தமிழ்மொழித்தினப் போட்டிகளின் வலயமட்ட போட்டிகள் யாவும் மே 10 ஆம் திகதிக்கு முன்பு நடத்தி முடிக்கப்படல் வேண்டும். அதே போன்று தமிழ்மொழித் தினப் போட்டிகளின் மாகாண மட்ட போட்டிகள் யாவும் மே 30 ஆம் திகதிக்கு முன்பு நடத்தி முடிக்கப்படல் வேண்டும்.

தேசியமட்டப் போட்டிக்கான விண்ணப்பங்கள் யாவும் மே 31 ஆம் திகதிக்கு முன்பதாக கல்வியமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் எனவும் சுற்றுநிருபம் மூலம் கல்வியமைச்சு கேட்டுள்ளது.

அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டிகளும் விழாவும் ஜூன் மாதம் 13, 14 ஆம் திகதிகளிலும் செப்.19,20 ஆம் திகதிகளிலும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் சிரார்த்த தினம் 19.07.1947 ஆகும். அதனையொட்டியே தேசிய தமிழ்த்தின விழா ஜூலை 19 ஆம் திகதி நடைபெற வேண்டுமென கல்வியமைச்சு தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான சுற்று நிருபங்கள் கல்வி அதிகாரிகள் அனைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-23)

# காணாமற்போனோரைத் தேடித்தர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## பசீர் சேகுதாவூத் கடிதம்


வட, கிழக்கில் காணாமற்போன அனைவரையும் தேடித்தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் பசீர் சேகுதாவூத் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு நேற்றுமுன்தினம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து வெளிவந்த பல்வேறு தகவல்களுடன், வடக்கில் கைதான பலர் இரகசிய முகாம்களில் இருப்பதாக ஊடகங்களில் வெளிவந்த செய்திகளின் அடிப்படையில் இந்த விடயங்களை ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாக பசீர் சேகுதாவூத் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, 2009 ஆம் ஆண்டு படையினரால் கைதுசெய்யப்பட்டதாகக் கூறப்படும் ஈரோஸ் அமைப்பின் பொதுக் குழுத் தலைவரும், ஈழவர் ஜனநாயக முன்னணியின் தலைவருமான வே. பாலகுமார் மற்றும் அவரது மகன் சூரியதீபன் ஆகியோரைக் கண்டுபிடிப்பதில் நேரடியாக தலையிடுமாறு அவர் கோரியுள்ளார்.

வே. பாலகுமாரன் அமைப்புச் சார்ந்த செயற்பாட்டாளர் அல்ல எனவும், அவரது மகன் எந்தத் தருணத்திலும் ஆயுதமேந்தி போராடவில்லை எனவும், வன்னியில் தொலைத்தொடர்பு நிலையமொன்றில் பணியாற்றியவர் எனவும் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் நேரடி கண்காணிப்பு, கரிசனையூடாக குறித்த இருவரையும் கண்டுபிடித்துத் தருமாறும் பசீர் சேகுதாவூத் தமது கடிதத்தின் ஊடாக வலியுறுத்தியுள்ளார். (இ-5)






**ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களது 38ஆவது சிரார்த்த தின நிகழ்வு நேற்று முற்பகல் 9 மணியளவில் குருநகரில் நடைபெற்றது.**

# கிழக்கு மாகாண சபையில் சமத்துவம் பேணவேண்டும்

## பிள்ளையான் கூறுகிறார்

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபையை யார் ஆட்சி செய்தாலும், அங்கு சமத்துவம் பேணப்படவேண்டும் என்று தமிழ்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

சிவநேசதுரை சந்திரகாந்தனின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,"கிழக்கு மாகாணத்திலேயே தமிழ், முஸ்லிம் சிறுபான்மையின மக்கள் அதிகமாக வாழ்கின்றனர். இங்கு தமிழ் முதலமைச்சராக நான் முதற்தடவையாக இருந்தேன். அந்த அனுபவத்தை பார்க்கும்போது, இந்த மாகாணம் தமிழ், முஸ்லிம்கள் ஆட்சி செய்வதற்குரிய மாகாணமாகும். அந்த அடிப்படையில் தமிழரோ அல்லது முஸ்லிமோ ஆட்சி செய்யமுடியும். ஆனால், சமத்துவம் பேணப்பட வேண்டும்.

குறிப்பாக, முன்னாள் முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத்தின் காலப்பகுதியில் இந்த சமத்துவம் பேணப்படவில்லை. அபிவிருத்தி, வேலை வாய்ப்பு போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டன. இவ்வாறான விமர்சனங்களை, பிரச்சினைகளை நிறுத்திக்கொண்டு சமத்துவமாக புதிய முதலமைச்சர் ஆட்சிசெய்ய வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமது ஆட்சியை கிழக்கு மாகாண சபையில் உறுதிப்படுத்தியுள்ளது. 20க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் ஆதரவாக கைச்சாத்திட்டதன் காரணமாக முதலமைச்சராக ஹாபீஸ் நஸீர் அஹமட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது ஜனநாயக நாட்டின் ஜனநாயக மரபுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ள விடயமாகும். தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் தற்போதுள்ள கிழக்கு மாகாணசபையை எல்லோரும் சேர்ந்து வலுவுள்ள ஒரு மாகாணசபையாக மாற்றும்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருக்கலாம் அல்லது தமிழர்களை ஆளுகின்ற எந்த நிறுவனமாகவும் இருக்கலாம்.நியாயபூர்வமாக இயங்குகின்ற ஓர் ஆளுமை மிக்க சபையாக மாற்றவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் சேர்ந்து மாகாணசபையில் ஆட்சி அமையுங்கள் என்று ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் 12ஆம் திகதி மாகாணசபை கூடியபோது நாங்கள் கூறினோம். நாங்கள் எதிர்க் கட்சியில் இருக்கின்றோம் என்றும் கூறினோம். ஆனால், இரண்டு பிரதான கட்சிகளும் நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் இணைந்து செயலாற்றியிருந்தாலும், பின்னர் வந்த நாட்களில் அந்தக் கூட்டு மாகாணத்தில் ஏற்படுத்த முடியாமல்போனது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு



### செல்வராசா சுப்பையா

முல்லைத்தீவு மணலாறு கொக் குத்தொடுவாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா சுப்பையா ஞாயிற்றுக்கிழமை அன்று அகாலமரணமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மணலாறு கொக்குத் தொடுவாய் மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### வைத்திலிங்கம் கிருஸ்ணபிள்ளை

மீசாலை கிழக்கை பிறப்பிடமாக கொண்ட வைத்திலிங்கம் கிருஸ்ணபிள்ளை கடந்த 7ஆம் திகதியன்று காலமானார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் திருவுடல் கொற்புலவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.




### திருமதி சோமசுந்தரம் இராசமணி

யாழ். காரைநகர் எண்ணாங்குப்பிட்டி தங்கோடையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிட மாகவும் கொண்ட சோமசுந்தரம் இராசமணி கடந்த 7 ஆம் திகதி சனிக்கிழமையன்று காலமானார்.அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ணம் ஓர் பார்வையில்...




எட்டாவதுஉலககோப்பை போட்டித் தொடர் தென் ஆபிரிக்காவில் நடந்தது. கனடா. நெதர்லாந்து. நமீபியா. கென்யா உட்பட மொத்தம்14 அணிகள். 1999இல் கடும் குழப்பத்தை ஏற்படுத்திய சுப்பர் சிக்ஸ் சுற்று இந்த முறையும் தொடர்ந்தது. லீக் சுற்றில் எடுத்த புள்ளிகள் அடுத்த சுற்றுக்கு கணக்கில்




கொள்ளப்படாது என்று அறிவித்தது ஓரளவு ஆறுதல் அளித்தது. அரசியல் மற்றும் பாதுகாப்பு காரணங்களுக்காக கென்யா. சிம்பாவேயில் நடந்த லீக் ஆட்டங்களை சில அணிகள் புறக்கணித்தன. பங்களாதேஷ், கனடா, இலங்கை அணிகளுக்கு எதிராக வெற்றி பெற்ற கென்ய அணி. நியூசிலாந்து விளையாட முன்வராததால் கிடைத்த 4 புள்ளிகளும் சேர்ந்துகொள்ள அரை இறுதிக்கு முன்னேறியது கடுமையாக விமர்சிக்கப்பட்டது. லீக் சுற்று சீக்கிரம் முடியாமல் ஜவ்வு மாதிரி இழுத்துக்கொண்டு போனது (42. ஆட்டங்கள். 2 இரத்து). சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கு இந்தியா. அவுஸ்திரேலியா, கென்யா. இலங்கை. நியூசிலாந்து, சிம்பாவே அணிகள் தகுதி பெற்றன. சவுரவ் கங்குலி தலைமையிலான இந்திய அணி லீக் சுற்றில் நெதர்லாந்து, சிம்பாவே.நமீபியா. இங்கிலாந்து. பாகிஸ்தான் அணிகளுக்கு எதிராக வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியாவுடன் செஞ்சுரியன் சுப்பர்ஸ்போர்ட் பார்க் மைதானத்தில் நடந்த லீக் ஆட்டத்தில். 41.4 ஓவரில் 125 ஓட்டங்களுக்கு ஓல் அவுட் ஆனது. சச்சின் அதிகபட்சமாக 36 ஓட்டங்கள். ஹர்பஜன் 28. கும்ப்ளே 16 ஓட்டங்கள் எடுக்க. மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். அடுத்து களமிறங்கிய அவுஸ்திரேலியா 22.2 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 128 ஓட்டங்கள் எடுத்து எளிதாக வென்றது. இந்த உலக கோப்பையிலும் பாகிஸ்தானை பந்தாடியது இந்திய ரசிகர்களுக்கு கொண்டாட்டமாக அமைந்தது. நாணயச் சுழற்சியில் வென்று துடுப்பாடிய பாகிஸ்தான் 50 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 273 ஓட்டங்கள் குவித்தது. தொடக்க வீரர் சயீத் அன்வர் 101 ஓட்டங்கள் விளாசினார். கடினமான இலக்கை துரத்திய இந்திய அணிக்கு கட்டன் கங்குலி தவிர்த்து (டக் அவுட்) மற்ற வீரர்கள் கணிசமாக ஓட்டங்கள் குவித்து வெற்றிக்கு உதவினர். அமர்க்களமாக விளையாடிய சச்சின் 98 ஓட்டங்கள் விளாசி (75 பந்து, 12 பவுண்டரி. 1 சிக்சர்) ரசிகர்களை மகிழ்வித்தார். சேவாக் 21, கைப் 35, டிராவிட் 44*. யுவராஜ் 50* ஓட்டங்கள் விளாச இந்தியா 45.4 ஓவரிலேயே 4 விக்கெட் இழப்புக்கு 276 ஓட்டங்கள் எடுத்து அபாரமாக வென்றது.

சுப்பர் சிக்ஸ் சுற்றில் கென்யா. இலங்கை. நியூசிலாந்து அணிகளை வீழ்த்தி இந்திய அணி அரை இறுதிக்கு முன்னேறியது. போர்ட் எலிசபத்தில் நடந்த முதலாவது அரை இறுதியில் அவுஸ்திரேலியா 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் (டி/எல்விதி) இலங்கையை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. இரண்டாவது அரை இறுதியில் கென்யாவுடன் மோதிய இந்தியா. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடியது. சச்சின் 83. கப்டன் கங்குலி 111* ஓட்டங்கள் விளாச. 50 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 270 ஓட்டங்கள் குவித்தது இந்தியா. அடுத்து களமிறங்கிய கென்யா 46.2 ஓவரில் 179 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து ஓல் அவுட் ஆனது. இந்தியா 91 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. ஜோகன்னஸ்பர்கில் நடந்த பைனலில் இந்திய பந்து வீச்சு சுத்தமாக எடுபடவில்லை. தொடக்க வீரர்கள் கில்கிறிஸ்ட் 57. ஹேடன் 37 ஓட்டங்கள் எடுத்து ஹர்பஜன் சுழலில் ஆட்டமிழந்தனர்

மூன்றாவது விக்கெட்டுக்கு கப்டன் பொன்டிங் . டேமியன் மார்டின் ஜோடி ஆட்டமிழக்காமல் 234 ஓட்டங்கள் சேர்த்து அசத்தியது. பொன்டிங் 140 ஓட்டங்கள் (121 பந்து. 4 பவுண்டரி. 8 சிக்சர்), மார்டின் 88 ஓட்டங்கள் (84 பந்து. 7 பவுண்டரி. 1 சிக்சர்) விளாசினர். அவுஸ்திரேலியா 2 விக்கெட் இழப்புக்கு 359 ஓட்டங்கள் குவித்தது.

இந்திய அணி சேசிங்கில். சச்சின் 4 ஓட்டங்கள் எடுத்து கிளென் மெக்ராத் பந்துவீச்சில் அவரிடமே பிடிபட்டது அதிர்ச்சி தொடக்கமாக அமைந்தது. சேவாக் 82, டிராவிட் 47. கங்குலி, யுவராஜ் தலா 24 ஓட்டங்கள் எடுக்க. மற்ற வீரர்கள் ஏமாற்றமளித்தனர். இந்தியா 39.2 ஓவரிலேயே 234 ஓட்டத்திற்கு ஓல் அவுட் ஆகி கோப்பை வெல்லும் வாய்ப்பை வீணடி த்தது. அவுஸ்திரேலிய அணி 3ஆவது முறையாக உலக சம்பியனாகி ஆதிக்கத்தை நிலை நாட்டியது. இறுதிப் போட்டிக் கான ஆட்ட நாயகன் விருதை ஆஸி. கப்டன் பொன்டிங்கும் தொடர் நாயகன் விருதை இந் தியாவின் சச்சினும் தட்டிச் சென்றனர்.

* ஓட்டங்கள் குவிப்பில். இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் 11 போட்டியில் 673 ஓட்டங்கள் குவித்து (அதிகம் 152, சராசரி 61.18) முதலிடம் பிடித்தார். கங்குலி 465 ஓட்டங்கள் (அதிகம் 112*, சராசரி 58.12). பொன்டிங் 415 ஓட்டத்துடன் (அதிகம் 140*. சராசரி 51.87) அடுத்த இடங்களைப் பிடித்தனர்.

* டர்பன் மைதானத்தில் இங்கிலாந்து அணிக்கு எதிராக நடந்த லீக் ஆட்டத்தில். கணுக்கால் காயத்துடன் விளையாடிய இந்திய வேகம் ஆசிஷ் நெஹ்ரா தொடர்ச்சியாக 10 ஓவர் பந்துவீசி 23 ஓட்டங்களுக்கு 6 விக்கெட் கைப் பற்றி அசத்தினார்.

* இந்தியாவுக்கு எதிராக இறுதிப் போட்டிக்கு அவுஸ்திரேலியா 2 விக்கெட் இழப்புக்கு 359 ஓட்டங்கள் குவித்தது அணியின் அதிக பட்ச ஸ்கோராகும்.

* அவுஸ்திரேலிய அணி ஒரு போட்டியில் கூட தோற்கவில்லை (11 ஆட்டம்).

* விக்கெட் வேட்டையில் இலங்கை வேகம் சமிந்த வாஸ் 10 போட்டியில் 23 விக்கெட் கைப்பற்றி முதலிடம் பிடித்தார். அவுஸ்திரேலியாவின் பிரெட் லீ (22 விக்கெட்), மெக்ராத் (21). இந்தியாவின் ஜாகீர் (18 விக்கெட்) அடுத்த இடங்களைப் பிடித்தனர்.

* சிம்பாவே வீரர் கிரெய்க் விஷார்ட் ஹராரே மைதானத்தில் நமீபியாவுக்கு எதிராக நடந்த போட்டியில் ஆட்டமிழக்காமல் 172 ஓட்டங்கள் விளாசியது தனிநபர் அதிகபட்ச ஸ்கோராக அமைந்தது. மொத்தம் 21 சதங்கள் அடிக்கப்பட்டன. சச்சின் 152 ஓட்டங்கள் விளாசி 2 ஆவது இடம் பிடித்தார். கப்டன் கங்குலி 3 முறை ஆட்டமிழக்காமல் சதம் விளாசி அச த்தினார் (107*, 111*, 112*).




## டில்ஷானின் அதிரடி சதம் வீண்: தென்னாபிரிக்கா வெற்றி



இலங்கைக்கு எதிரான உலகக் கிண்ண பயிற்சி ஆட்டத்தில் டக்வோர்த் லூயிஸ் முறைப்படி தென் ஆபிரிக்க அணி 5 விக் கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இலங்கை மற்றும் தென் ஆபிரிக்க அணிகள் மோதிய உலகக்கிண்ண பயிற்சிபோட்டி கிறிஸ்ட் சர்ஜில் நேற்று நடைபெற் றது. இப்போட்டியில் நாண யச்சுழற்சியில் வெற்றி பெற்ற தென் ஆபிரிக்கா முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

அதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய இலங்கை அணி 44.4 ஓவர் நிறைவில் 7 விக்கெட் இழப்பிற்கு 279 ஓட்டங்களை எடுத்தது.

இலங்கை சார்பில் டில் ஷான் 100 ஓட்டங்களையும், மத்யூஸ் 58 ஓட்டங்களையும் எடுக்க, கருணாரத்ன 46. சங்கக்கார 31 மற்றும் மென்டிஸ் 15 ஓட்டங்களையும் குவித்தனர்.


பந்து வீச்சில் தென் ஆபிரிக்க அணியின் சார்பில் கைல் அபொட் 3 விக்கெட்களையும் வேய்ன் பார்னெல் 2 விக்கெட்களையும் பிலான்டர் மற்றும் இம்ரான் தாஹிர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் தொடர்ந்து துடுப் பெடுத்தாடிய தென் ஆபிரிக்க அணி 24.3 ஓவர் நிறைவில் 5 விக்கெட் இழப்பிற்கு 188 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் டக்வோர்த் லூயிஸ் முறைப்படி அந்த அணி வெற்றி அணியாக அறிவிக்கப்பட்டது.

துடுப்பாட்டத்தில் தென் ஆபிரிக்க அணியின் சார்பில் டி கொக் 66 ஓட்டங்களையும் அம்லா 46 ஓட்டங்களையும் பெற்றுக் கொள்ள, பிளெஸிஸ் 19. டுமினி 17, ரூஸோ 16 மற்றும் பிலாண்டர் 13 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்து வீச்சில் ஹேரத் 3 விக்கெட்களையும். மலிங்க மற்றும் குலசேகர ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (க)

## உலக கிண்ணத்திலிருந்து முகமது ஹபீஸ் விலகல்



உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான பாகிஸ்தான் அணியிலிருந்து சகலதுறை ஆட்டக்காரர் முகமது ஹபீஸ் விலகியுள்ளார். கடந்த வாரம் நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியின்போது கணுக்காலில் காயமடைந்தார். காயம் குணமடைய 3 வாரங்கள் ஓய்வு எடுக்கும்படி ஹபீஸ்க்கு வைத்தியர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இதையடுத்து உலகக்கிண்ண போட்டியில் இருந்து 34 வயதான முகமது ஹபீஸ் விலகினார். அவர் உடனடியாக தாயகம் திரும்புகிறார். அவரது விலகல் பாகிஸ்தானுக்கு பெருத்த பின்னடைவாக கருதப்படுகிறது. அவருக்கு பதிலாக நசிர் ஜாம்ஷெட் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டி நட்டம் ஊர் மேலே
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## உன்னிப்பாக கவனிக்க வேண்டிய விலை நிர்ணயங்கள்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசின் இடைக்கால வரவு செலவுத்திட்டம் முன்னைய வரவு செலவுத் திட்டங்களோடு ஒப்பிடுகையில் மக்கள் நலம் சார்ந்த விடயங்களை கொண்டிருப்பதை ஏற்றுத்தானாக வேண்டும். இதன் காரணமாகவே பாராளுமன்றத்தில் மைத்திரியின் இடைக்கால வரவு செலவுத் திட்டம் நிறைவேறியது எனலாம்.

வரவுசெலவுத்திட்டத்தில் மக்களுக்காக வழங்கப்பட்ட சலுகைகள், அத்தியாவசியப் பொருட்களின் விலைக் குறைப்புகள் பொது மக்களை சென்றடைய வேண்டும் என்பதில் காட்டப்படும் கரிசனை முக்கியமானதாகும்.

பொதுவில் ஏறிய விலைகள் இறங்குவதென்பது மிகவும் அரிதான விடயம். எனவே ஏறிய விலைகளை வர்த்தகர்கள் குறைக்கின்றார்களா? என்பது குறித்து விழிப்பாக இருப்பது பொருட்களின் விலை நிர்ணய தொடர்பில் செயற்படும் அமைப்புகளின் கடமையாகும்.

வட மாகாணத்தைப் பொறுத்தவரை பொருட்களின் விலை வித்தியாசம் கடைக்குக் கடை வேறுபட்டு இருப்பதை பல சந்தர்ப்பங்களில் அறிய முடிந்துள்ளது.

இத்தகைய வேறுபட்ட விலை காரணமாக சாதாரண பொது மக்கள் ஏமாந்து போகின்ற பரிதாபங்கள் நிகழ்ந்து வருகின்றன. அதிலும் குறிப்பாக விவசாயிகளின் நிலைமை மிகவும் மோசமானது எனலாம். இப்போது நெல் அறுவடை நடந்து கொண்டிருக்கின்றது. நெல் அறுவடைக்குப் பயன்படுத்தும் இயந்திரங்களுக்கு இடத்துக்கு இடம், ஆளுக்கு ஆள் வேறுபட்ட கட்டணங்களை அறவிடுவதைக் காணமுடிகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விவசாயத்தை ஊக்குவிப்பதற்கான திட்டங்களை தமது வரவு செலவுத்திட்டத்தில் முன்வைத்திருக்கும் போது, இங்கு நெல் அறுவடை இயந்திர உரிமையாளர்கள் தாம் நினைத்த பாட்டில் கட்டணம் அறவிடுவதென்பது விவசாயிகளுக்கு வெறுப்பை ஏற்படுத்துவதாகும். இத்தகைய சம்பவங்கள் விவசாயத்துறையைப் பாதிக்குமே அன்றி ஊக்குவிக்காது.

எனவே, இது விடயத்தில் கமத்தொழில் அமைப்புகள் கவனம் செலுத்த வேண்டும். இதுபோன்றே சகல பொருட்கள் சேவை விடயத்திலும் விலை நிர்ணயம் என்பது அவசியமாகின்றது.

வட மாகாணத்தைப் பொறுத்தவரை இப்போது பலரும் ஏங்கி இடிவிழுந்து போகின்ற விடயமாக தனியார் மருத்துவ நிலையங்களின் கட்டண அறவீடு அமைகின்றது. காலம், நேரம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு தனியார் வைத்தியசாலைகளை நாடினால் அவை எங்களை சூறையாடி விடுகின்றன என்ற பொது மக்களின் வேதனை பரிதாபத்திற்கு உரியது.

தனியார் வைத்தியசாலைகளின் சிகிச்சை பெற வருகின்றவர்களுக்கு அவர்களின் சிகிச்சைக்காக அறவிடப்படக் கூடிய கட்டணத்தை அண்ணளவாகவேனும் தெரியப்படுத்த வேண்டும்.

அந்தக் கட்டணம் ஏற்புடையதாக இருந்தால், அதற்கு அவர்கள் உடன்படுவார்கள். இதை விடுத்து சிகிச்சை முடிந்த பின் ஏகப்பட்ட கட்டணத்தை அறவிடும் போது நோய் கொடுத்த வேதனையை விட கட்டண அறவீடு பேரதிர்ச்சியை கொடுத்துவிடும்.

இதுபோல வடபுலத்து விவசாய உற்பத்தியாளர்கள் கொடுக்கின்ற விலைக்கும் அதனை வாங்கி விற்போர் பெற்றுக் கொள்கின்ற விலைக்கும் இடையே மிகப் பெரிய வித்தியாசம் காணப்படுகின்றது. எனவே இத்தகைய அதீதமான விலை வித்தியாசத்தை எல்லைப்படுத்தி; உற்பத்தியாளர், வர்த்தகர், நுகர்வோர் என்ற மூன்று தரப்பினரும் நன்மை அடையக் கூடியதான விலை நிர்ணயங்கள் செய்யப்பட வேண்டும்.

ஆக, ஒட்டு மொத்தத்தில் பொருட்கள் சேவைகளின் விலை நிர்ணயம் தொடர்பில் கவனம் செலுத்தும் போதே அதனால் நுகர்வோர் பயனடைவர். அதேவேளை விலை வித்தியாசங்கள் அல்லது பொருட்களின் தரக்குறைபாடுகள் தொடர்பில் நுகர்வோர் தங்களின் முறைப்பாட்டை எளிதாகச் செய்யக் கூடியதான ஏற்பாடுகளும் அவசியம்.

இதற்கு மேலாக நுகர்வோர் பாதுகாப்புச் சங்கங்கள் அனைத்து இடங்களிலும் இயங்கு நிலையில் இருப்பது கட்டாயமானதாகும்.

நுகர்வோர் பாதுகாப்புச் சங்கங்கள் ஆரோக்கியமாகச் செயற்படுமாக இருந்தால் நுகர்வோர் நலன் பாதுகாக்கப்படுவது உறுதி செய்யப்படும்.

ஆகையால் விலை நிர்ணயம், நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பில், அதீத கவனம் செலுத்துவது சம்பந்தப்பட்டவர்களின் தலையாய கடமையாகும்.

# வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கென விசேட இராணுவம் தேவையில்லை

## டக்ளஸ் எம்.பி. வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விசேட பாதுகாப்பிற்கோ முகாம்களுக்கோ இராணுவம் தற்போது அவசியமில்லை. நாட்டில் ஏனைய பகுதிகளில் இராணுவப் பிரசன்னம் எந்த அடிபபடையில் உள்ளதோ அதே நிலைப்பாடே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கும் தேவை என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

கடந்த கால யுத்தம் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொதுமக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகள் சில பாதுகாப்புத் தேவைகளுக்கென கைப்பற்றப்பட்டன.

2009ஆம் வருடம் மே மாதம் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் அப்போதைய அரசுடன் நான் தொடர்ந்து மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் பயனாக கணிச மானளவு விவசாய மற்றும் வதிவிடக் காணிகளும் பொது மற்றும் தனியார் கட்டடங்களும் படிப்படியாக விடுவிக் கப்பட்டு உரியவர்களிடம் கையளிக் கப்பட்டன.

இந் நிலையில் எமது மக்களின் தலைவர்கள் எனத் தம்மை இனங்காட்டிக் கொள்ளும் நபர்கள் சிலர் இவ் விடயத்தை தங்களது சுயலாப அரசியலுக்குப் பயன்படுத்தி ஆர்ப்பாட்டங்கள் ஊடக அறிக்கைகள் போன்ற கண்துடைப்பு காரியங்களில் மாத்திரம் ஈடுபட்டு முன்னெடுக்கப்பட்டு வந்திருந்த மேற்படி செயற்பாடுகளைத் தடுக்கும் வகையில் செயற்பட்டு வந்தனரே தவிர அம்முயற்சிகளை ஊக்குவிக்கக் கூடிய வகையிலான செயற்பாடுகளில் இறங்கியிருக்கவில்லை.

மக்களின் நிலங்கள் மக்களுக்கே சொந்தம் என்ற கொள்கை நிலையில் நின்று எமது செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது கூட எமது முக்கிய கோரிக்கைகளில் ஒன்றாக மேற்படி எஞ்சியுள்ள காணிகள் அதன் உரிமையாளர்களிடம் மீள ஒப்ப டைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்னாள் ஜனாதிபதியிடமும் முன்வைத்திருந்தோம். இது அவரது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இடம் பெற்றிருந்தது.

நாட்டில் தற்போது புதிய அரசு ஆட்சியில் உள்ள நிலையிலும் புதிய ஜனாதிபதி மற்றும் புதிய பிரதமரிடமும் இக் கோரிக்கையை முன்னுரிமைப் படுத்தி வலியுறுத்தியுள்ளோம்.

எனவே மக்களது நிலம் மக்களுக்கே சொந்தம் என்ற எமது கொள்கை அடிப்படையை தொடர்ந்து வலியுறுத்தி வரும் நாம் நாட்டில் ஏனைய மாகாணங்களில் தேசிய பாதுகாப்பு கருதி இராணுவப் பிரசன்னம் எந்த அடிப்படையில் உள்ளதோ அதே அடிப்படையிலேயே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் இருக்க வேண்டும்.

இதைவிடுத்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கென விசேட இராணுவத் தேவைகள் இப்போது இல்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# எல்லை மீறும் மீனவர் பிரச்சினை; மோடியிடம் மைத்திரி பேச்சு நடத்துவார்

(கொழும்பு)

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டும் பிரச்சினை தொடர்பில் அடுத்தவாரம இந்தியாவிற்குச் செல்லவுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் என யாழ் வந்த உள்நாட்டலுவல்கள் மற்றும் கடற்றொழில் நீரியல் வளத் துறை அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.

யாழ் பிரதேச செயலக கட்டடத் திறப்பு விழா நேற்று பிற்பகல் மேற்படி பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.

இதன் பின்னர் யாழ் மாவட்ட கடற்றொழிலாளர்களைச் சந்தித்து தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடியிருந்தார். இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலையே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்.

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டும் பிரச்சினை மிக நீண்ட காலமாக இருந்து வருகின்றது. இதனால் இங்குள்ள கடற்தொழிலாளர்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இத்தகைய பாதிப்புக்களினால் வடக்கு கடற்தொழிலாளர்கள் மட்டுமல்ல தென்பகுதி தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதனை எமது அரசாங்கமும் அவதானித்துக் கொண்டு தான் இருக்கின்றது. இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து கடற்தொழிலில் ஈடுபடுகின்ற இந்திய மீனவர்களையும் கைது செய்து கொண்டுதான் இருக்கின்றது. ஆனாலும் அவர்கள் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டு தான் இருக்கின்றனர.

இப்பிரச்சினையையானது நீண்ட காலமாக இருந்து வந்தாலும் கடந்த காலங்களில் இது தொடர்பில் பலரும் பேசியிருக்கின்றனர். ஆனால் அதற்குரிய நடவடிக்கைகள் எதனையும் இது வரையில் மேற்கொள்ளப்படாத நிலையே இருக்கின்றது.

இதனால் தொடர்ந்தும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களும் அட்டூழியங்களும் கடலில் நடைபெறுவதாக எமது கடற்தொழிலாளர்கள் தெரிவித்து வருகின்றனர். இதனை விரைவாகக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கையை நாமும் ஆரம்பித்துள்ளோம்.

இதனடிப்படையிலையே அடுத்த வாரம் இந்தியாவிற்கு செல்லவுள்ள ஜனாதிபதி, இந்தியப் பிரதமரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இச் சந்திப்பிலேயே இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். இந்தச் சந்திப்பினை அடுத்து இப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண முடியுமென அமைச்சர மேலும் தெரிவித்தார். (செ-4)

## த.தே.கூட்டமைப்பு புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணி பிரதேச செயலகத்தின் திறப்பு விழாவை வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் புறக்கணித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக கட்டடத் திறப்பு விழா மகளிர் விவகார அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோசப் மைக்கல். பெரேரா, வட மாகாண ஆளுநர் எச்.எம்.ஜீ.எஸ். பலிகக்கார, வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உட்பட நாடாளுமன்ற, மாகாண சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்துகொள்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் த.தே.கூட்டமைப்பினரும் வடக்கு மாகாண சபை முதலமைச்சரும் இந்நிகழ்வினை புறக்கணித்துள்ளனர். (செ-11)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### பொறுமையே பெருமை



❖ பூமியிடம் இருந்து பொறுமையைக் கற்று கொள்ளுங்கள். உங்கள் காலடியில் உலகமே பணிந்து நிற்கும்.

❖ எல்லா வகையிலும் விரிவடைய முயற்சி செய்யுங்கள். உயிர் இருப்பதன் ஒரே அறிகுறி வளர்ச்சியடைவது தான்.

❖ இடைவிடாமலும், பற்றில்லாமலும் பணியில் ஈடுபடுங்கள். நல்ல பணிகள் உங்களை அடையாளம் காட்டும்.

❖ வெறும் கே?ழையாகவும், கபடதாரியாகவும் இருக்க வேண்டாம். உண்மையின் பாதையில் கண்ணியத்துடன் சென்று கொண்டிருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோரை மீட்டுத்தரக்கோரி யாழ்ப்பாணத்தில் உறவினர்கள் பேரணி!



காணாமற் போன தமது உறவுகளினை மீட்டுத் தரக்கோரி அவர்களது உறவினர்கள் நேற்று காலை பாரிய பேரணியுடன் ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தனர். யாழ்.பேருந்து நிலையம் முன்பாக ஒன்று கூடிய உறவுகள் யாழ்.மாவட்டச் செயலகம் வரை பேரணியாக சென்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

(படங்கள்:-உ.சாளின்)








## மருதங்கேணி பிரதேச செயலகம் நேற்று உத்தியோகபூர்வமாக திறப்பு







(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகம் நேற்று முற்பகல் 10 மணியளவில் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா, அமைச்சின் செயலாளர், மகளிர் விவகாரப் பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் பருத்தித்துறைப் பிரதேசசபைத் தவிசாளர் பூ.சஞ்சீவன் உட்பட பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மருதங்கேணி பிரதேச செயலாளர் ந.திரிலிங்கநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா உரையாற்றுகையில்,

கடந்த அரசின் நடவடிக்கைகளைப் போல் அல்லாமல் எமது அரசாங்கம் மக்களுக்கு அதிகளவில் சேவை புரிவதற்குத் தயாராகவுள்ளது. இதற்காக கிராம சேவையாளர் உதவி அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், மாவட்ட அரச அதிபர் மற்றும் தொடர்புபட்ட அமைச்சுக்களிடையே தொடர்புகளை ஏற்படுத்தி கூடுதல் சேவைகளை வழங்க இந்த அரசாங்கம் தயாராகவுள்ளது.

மேலும் இப்பிரதேசத்தில் மக்களின் தொழிற்றுறைக்குச் சாதகமாக மண்ணெண்ணெய் விலை குறைப்பு அமைந்துள்ளது. கடற்றொழிலாளர்கள் விபரங்கள் திரட்டப்பட்டு இப்பிரதேச மக்களுக்கு சிறந்த முறையில் சேவையாற்ற மருதங்கேணி பிரதேச செயலகம் வழிவகுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

வடமராட்சி மருதங்கேணிப் பிரதேச செயலகம் 1989 ஆம் ஆண்டு தனியானதொரு பிரதேச செயலகமாக உருவாக்கப்பட்டதுடன் கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் தனியார் வீடுகளிலும் பொது மண்டபங்களிலும் இயங்கி வந்த பிரதேச செயலகத்திற்கான கட்டடம் கடந்த வருடம் அமைக்கப்பட்டு தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3-64)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ் வோக்ஸ் மிரட்டல் இங்கிலாந்து அணி வெற்றி

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான உலக கோப்பை பயிற்சி ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 'வேகத்தில்' மிரட்டிய இங்கிலாந்தின் கிறிஸ் வோக்ஸ் 5 விக்கெட் கைப்பற்றினார்.

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மண்ணில் 11-வது உலக கோப்பை தொடர் வரும் 14-ம் திகதி ஆரம்பமாகிறது. இதற்கு தயாராகும் விதமாக ஒவ்வொரு அணிகளும் பயிற்சி போட்டிகளில் விளையாடுகின்றன. சிட்னியில் நடந்த பயிற்சி ஆட்டத்தில் இங்கிலாந்து, மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் மேற்கிந்திய தீவின் கப்டன் ஜாசன் ஹோல்டர், முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.



மேற்கிந்திய தீவுகள் அணிக்கு கிறிஸ கெய்ல் (0), டேரன் பிராவோ (0) ஏமாற்றினர். டுவைன் ஸ்மித் (21), சாமுவேல்ஸ் (10), ராம்தின் (6), கார்டர் (7), டேரன்சமி (12) சொற்ப ரன்னில் அவுட்டானார்கள். பொறுப்பாக ஆடிய சிம்மன்ஸ் (45) ஆறுதல் தந்தார். கப்டன் ஜாசன் ஹோல்டர் (1), ரசல் (7) நிலைக்க வில்லை.

மேற்கிந்திய தீவுகளுக்கு அணி, 28.2 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 120 ரன்கள் எடுத்திருந்தது. நிகிதா மில்லர் (2) அவுட்டாகாமல் இருந்தனர். இங்கிலாந்து சார்பில் கிறிஸ் வோக்ஸ் 5, ஸ்டீவன் பின் 2, கிறிஸ் ஜோர்டான், ரவி போபரா, ஜேம்ஸ் டிரட்வெல் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

சுலப இலக்கை விரட்டிய இங்கிலாந்து அணிக்கு இயான் பெல், மொயீன் அலி ஜோடி நல்ல தொடக்கம் கொடுத்தது. முதல் விக்கெட்டுக்கு 70 ரன்கள் சேர்த்த போது, மொயீன் அலி (46) அரைசத வாய்ப்பை இழந்து வெளி யேறினார். பின் இணைந்த இயான் பெல் (35*), ஜேம்ஸ் டெய்லர் (25*) ஜோடி அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றது.



இங்கிலாந்து அணி 22.5 ஓவரில், ஒரு விக்கெட்டுக்கு 125 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. மேற்கிந்திய தீவுகள் சார்பில் கீமர் ரோச் ஒரு விக்கெட் வீழ்த்தினார். (க)

## சிறில் ராமபோசா...

கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ் தானிகர் ஜெப் டயஸ் தெரிவித்துள் ளார்.

அவரின் இலங்கை விஜயத்தின் போது இலங்கையின் நல்லிணக்கம் குறித்து தென்னாபிரிக்க அரசாங்கம் வழங்கவுள்ள பங்களிப்பு தொடர்பில் ஜனாதிபதியுடன கலந்துரையாடுவார் என உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தென்னாபிரிக்க ஜனாதபதியின் வருகை இலங்கை மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கலந்துரையாடு வதற்கான சந்தர்ப்பமாக அமையும் என உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தென்னாபிரிக்க சர்வதேச உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு பிரதி அமைச்சர் எதிர்வரும் 24-ம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவின் சுற்றுலாத்தளங்களை இலங்கையில் விளம்பரப்படுத்துவதே பிரதி அமைசசரின் விஜயத்தின் முக்கிய நோக்கம் எனவும் இலங்கைக்கான தெனனாபிரிக்க உயர்ஸ்தானிகர் ஜெப்டயஸ் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## வெளி.இலங்கை...

றுக்கொள்ளக் கூடிய வகையில் புதியதிட்டம் தயாரிக்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜி.எஸ்.வித் தானகே கூறியுள்ளார்.

உத்தேச திட்டம் தொடர்பிலான அமைச்சரவை பத்திரமொன்றை விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


இதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் ஏற்கெனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (செ-11)

## சவுதியில்...

ஜேர்மன் பொதுமகன் ஒருவரை கொலை செய்த குற்றச்சாட்டின் பேரி லேயே இந்த மூவருக்கும் மரணத் தண்டனை தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

குற்றம் சுமத்தப்பட்டிருந்த மூவரும் கடந்த 10 வருடங்களாக சிறை படுத்தப்பட்டிருந்தார்கள். இநதநிலையில் குறித்த மூவரையும் தற்போது தண்டனையில் இருந்து காப்பாற்று வதற்கான நடவடிக்கைகள் மேற் கொளளப்படுவதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. (செ-11)

## பயிற்சி ஆட்டத்தில் படுதோல்வி கப்டன் தோனி புலம்பல்



உலகக் கிண்ணப் போட்டிகள் நெருங்கும் நேரத்தில் இந்திய அணியின் மோசமான செயல்பாடு கவலையளிப்பதாக இந்திய அணித்தலைவர் தோனி கூறியுள்ளார்.

உலகக்கிண்ணப் பயிற்சிப் போட்டியில் நேற்றுமுன்தினம் இந்தியா, அவுஸ்திரேலிய அணியை எதிர்கொணடது. இதில் பந்து வீச்சு, துடுப்பாட் டம் என இரண்டிலும் சொதப்பிய இந்திய அணி 106 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது.

இந்நிலையில் ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் ஒரு தரப்பினர் சொதப்புவதால் ஏமாற்றமே எஞ்சியுள்ளதாக தோனி கவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், துடுப்பாட்டம் சரியாகும் போது, பந்து வீச்சாளர்கள் சொதப்புகிறார்கள், பந்துவீச்சாளர்கள் நன்றாக செயல்படும் போது, துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றி விடுகிறார்கள். இது எங்களுக்கு மிகவும் கடினமாக இருக்கிறது.

இப்பிரச்சினையை சரி செய்ய வேண்டியது அவசியம். இப்போது எது முக்கியம் என்றால், உலகக்கிண்ண கிரிக்கெட்டில் தொடக்க ஆட்டத்திற்கு முன்பாக எங்களுக்கு ஆப்கானிஸ்தானுடன் மட்டுமே பயிற்சி போட்டி இருக்கிறது. அதற்குள் நாங்கள் களம் காணும் சரியான லெவன் அணியை அடையாளம் காண வேண்டும். இந்த பயிற்சி ஆட்டத்தில் இருந்து சில நல்ல விடயங்களை எடுத்துக் கொண்டோம் என்று கூறியுள்ளார். (க)

## பொலிஸ்...

தெரிவித்துள்ளது.

சமிந்த டி சில்வா களுத்துறைக்கு இடமாற் றம் செய்யப்பட்டுள்ளதுடன், களுத்துறை பொலிஸ் நிலைய அதிகாரி யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸ திணைக்களம் தெரிவித்துள்ளது. (செ-11)

## போர்க்குற்ற...

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இராணுவத்தினருக்கு தலைமை தாங்கிய முப்படைகளின் முன்னாள் பிரதானி சரத் பொன்சேகா அரசுடன் இணைந்துள்ளமையினால் உள்நாடடில் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் அரசியல் மயப்படுத்தப்படலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

மேலும் இலங்கையில் எதிர் வரும் ஏப்ரல் மாதம் பாராளுமன்ற தேர்தல் நடத்தப்படவுள்ளமை யினால் யுத்த குற்ற விசாரணைகள் உள்நாட்டு அரசியல் சர்ச்சைகளில் சிக்கிக்கொள்ளலாம் எனவும், தற் போதைய நடைமுறையின் மைய மாக ஐ.நா சபையே செயற்பட வேணடும எனவும், இது குறித்து இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுடன் கலந்துரையாடு வதற்கு தாம் எதிர்பார்த்துள்ளதாக்வும் மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய பசுபிக்கிற்கான இயக்குநர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார். (செ-11)

## மதவாச்சி விபத்து 4 பேர் பலி

மதவாச்சியில் நேற்றிரவு இடம்பெற்ற வீதி விபத்தில் நான்கு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மதவாச்சி எஹலகஹா வங்குவ என்னும் இடத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பார ஊர்தியொன்று வீதியை விட்டு விலகி வீழ்ந்ததில் விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் மேலும் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (செ-11)

## ஊழல் சுறாக்களைப் பிடிக்க சிறப்பு ஜனாதிபதி ஆணைக்குழு

(கொழும்பு)

நாட்டில் பெரும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக்கொடுப்பதற்காக சிறப்பு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்கவுள்ளதாக புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வட மத்திய மாகாணத்தில் அரலகங்வில பிரதேச மக்கள் முன்னிலையில் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை கிடைக்கும் என்று நாட்டு மக்கள் காத்திருப்பதாகக் கூறினார்.

ஜனாதிபதிக்கு உள்ள சிறப்பு அதிகாரங்களைப் பயன்படுத்தி, இந்த வாரத்தில் ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்படும் என்று மைத்திரிபால சிறிசேன கூறினார்.

இந்த ஆணைக்குழுவின் மூலம் சின்னஞ்சிறிய நெத்தலி மீன்களை அல்ல, பெரிய சுறா மீன்களை பிடிப்பது தான் நோக்கம். இந்த ஊழல், மோசடி பேர்வழிகளுக்கு எப்போது தண்டனை அளிக்கப்படும் என்று நாட்டு மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள் என்றார் மைத்திரிபால சிறிசேன.

புதிய அரசாங்கம் பொறுப்பேற்று ஒரு மாதம் கடந்துள்ள நிலையில் ஊழல், மோசடி குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்கெனவே தாமதாகியுள்ளதாகவும் ஜனாதிபதி கூறினார்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் மீது பெரும் ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தே பொது எதிரணிக் கூட்டணி மைத்திரிபால சிறிசேனவை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக களமிறக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## இல்லமெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

இராமநாதன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் கே.கிருஸ்ணபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக வலிகாம வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா சிறப்பு விருந்தினராக வலிகாம வலய ஆசிரிய ஆலோசர் ஜி.சிறிகணேஷ் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் உறவுகளை...

காணாமல்போனவர்களின் உறவினர்கள் சங்கத்தின் ஒழுங்கமைப்பில் யாழ்.பேருந்து நிலையத்திலிருந்து யாழ்.மாவட்டச் செயலகம் வரையில் காணாமல் போனவர்களின் உறவுகள் நடந்து சென்று மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியிருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் 1996 தொடக்கம் 2009 வரையில் யாழ்.குடாநாட்டில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

பேருந்து நிலையத்தில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமான குறித்த ஆர்ப்பாட்டம் பிரதான வீதி வழியாக ஊர்வலமாக வந்து மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக நடைபெற்று இருந்தது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் 100 நாட்களில் மாற்றம் தென்னிலங்கை மக்களுக்கு மட்டுமல்ல, தமிழ் மக்களுக்கும் வேண்டும். நீதியான மனிதர் என நம்பியே நாங்கள் உங்களுக்கு வாக்களித்தோம் என காணாமல் போனவர்களின் உறவினர்கள் கண்ணீர்மல்க கூறியுள்ளதுடன், தமது பிள்ளைகளை விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

எங்கள் பிள்ளைகளை படையினரே விசாரணைக்கெனக் கூறி அழைத்துச் சென்றனர். எங்கள் பிள்ளைகளை அதன் பின்னர் நாங்கள் காணவில்லை. நாங்கள் நம்புகிறோம் எங்கள் பிள்ளைகள் உயிருடன் இருக்கின்றார்கள்.

புதிய ஜனாதிபதியே! எங்கள் பிள்ளைகளை திருப்பிக் கொடுங்கள் என காணாமல் போனவர்களின் உறவினர்கள் கண்ணீர்மல்க தமது கோரிக்கையினை முன்வைத்திருக்கின்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்த மக்கள் மைத்திரி-ரணில் அரசே காணாமல்போனவர்கள், அரசியல் கைதிகளை விடுதலை செய் ! அரசியல் கைதிகளை விடுதலை செய்! கண்ணீர் விடுவதற்கு எங்களிடம் கண்ணீர் இல்லை. எங்கள் உறவுகளை மீட்டுக்கொடு. தாய், தந்தையர், மனைவிமார், பிள்ளைகள் கண்ணீரை நிறுத்து. என்ற வாறான பதாகைகளை தாங்கியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும், ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மக்கள் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக நிலத்தில் விழுந்து ஒப்பாரி வைத்து அழுது தங்கள் பிள்ளைகளை மீட்டுக் கொடுங்கள் என கோரிக்கை விடுத்தனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைதியை விரும்பும் மனிதர், மனிதாபிமானம் உள்ளவர் என்றால் எங்கள் பிள்ளைகளை மீட்டுக் கொடுங்கள். 100 நாள் மாற்றம் தென்னிலங்கைக்கு மட்டுமா? எங்களுக்கும் மாற்றம் கொடுங்கள்.

எங்களுக்கு சர்வதேச விசாரணை வேண்டும். உள்ளக விசாரணைகள் வேண்டாம். உள்ளக விசாரணைகளில் நாங்கள் பலதடவை எங்கள் பிரச்சினைகளை கூறியும். எங்களுக்கு என்ன நியாயம் கிடைத்தது? என மக்கள் கண்ணீர்மல்க கேள்வி எழுப்பினார்கள்.

தமிழ்தேசிய மக்கள் முன்னணியினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் யாழ்.மாவட்டச் செயலர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மகஜரினை யாழ். மாவட்ட செயலக கணக்காளர் பெற்றுக் கொண்டார். (செ-4)


# கனடா EXPRESS ENTRY VISA
# முதல் கட்டமாக 779பேர் தெரிவு!

2015ம் ஆண்டு 3 இலட்சம் வரையானோருக்கு நிரந்தர குடியுரிமை வழங்கும் கனேடிய அரசாங்கத்தின் அதிரடி அறிவிப்பின் பிரகாரம், பொருளாதார குடியுரிமைக்கு விண்ணப்பித்தவர்களில் 779 பேர் கடந்த ஜனவரி 31ம் திகதி நிரந்தர குடியுரிமைக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளனர்.

ஒரு வருடத்துக்குக் குறையாத தொழில் அனுபவத்துடன் துறைசார் பட்டமொன்றையும் கொண்டிருக்கும் எவரும் கனடா Express Entry Visaவுக்கு விண்ணப்பிக்கலாம்

Express Entry Visa என்றால் என்ன?
விண்ணப்பிப்பதற்கான தகுதி என்ன?
என்னென்ன தொழில்வாய்ப்புக்கள் உண்டு?
விண்ணப்ப படிமுறைகள் எவை?

அனைத்து விபரங்களை அறிந்துகொள்ள பாருங்கள்

**www.sikaram.lk**

info@sikaram.lk என்ற மின்னஞ்சலுக்கு உங்கள் சுயவிபரக்கோவையை அனுப்பி விண்ணப்பிப்பதற்கான தகுதியை அறிந்துகொள்ளுங்கள்

(C-069)

கனேடிய குடிவரவுத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்ற முகவரின் அனுமதியுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்தச் சேவையை வழங்கும் ஒரே நிறுவனம்!

SIKARAM
Education Abroad
Work, Migration & Visa Solutions

Sikaram (Pvt) Ltd.,
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி.
யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0773616798 / 021 222 00 11



# 'இலிசியம்'

**நவீன முன்பள்ளி, பகல் பராமரிப்பு நிலையம்**

இல 83/2, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்.

அன்பார்ந்த பெற்றோர்களே!
தங்கள் குழந்தைகளின் முன்பள்ளிக் கனவினை நவீனத்துவத்துடன் நனவாக்கவும், அவர்களுக்கான பகல்நேர பராமரிப்பினை சுகாதார வசதிகளுடன் வழங்கவும் எமது நிலையம் காத்திருக்கின்றது. (9472)

தொடர்புகளுக்கு:- 0215689998, 0773462167



# தேவை WANTED

Job! Job! Job... 0774458134

நீங்கள் O/L பயின்றவரா?
இவ்விலக்கத்துக்கு அழைத்து உங்கள் பதிவுகளை உடன் பதிவு செய்க. நாடு முழுவதும் 40 பேருக்கு முன்னுரிமை

- நிர்வாக அதிகாரி
- செயற்றிட்ட அதிகாரி
- அலுவலக உதவியாளர்
- மேற்பார்வையாளர்

அனுபவம் இல்லையா? தங்குமிட வசதியுடன் பயிற்சி வழங்கப்படும்
பயிற்சிக் காலம் : Earn 12000/= - 15000/= பின் குறைந்தது 45000/=
இல.225, 3ம் குறுக்குத்தெரு, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (9473)


## நிலத்தடி...

களுக்காக நீர் மாதிரிகளை சேகரிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது.

நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலந்தமைக்கு காரணமாக உள்ளதாக கூறப்படும் சுன்னாகம் அனல் மின் நிலையத்தில் இருந்து 2 கிலோ மீற்றர் சுற்றுவட்டாரத்தில் 8 திசைகளிலும், 200 மீற்றர் இடைவழியில் ஆய்வுக்கான நீர் மாதிரிகள் சேகரிக்கப்படவுள்ளன.

குறிப்பாக மின்னுற்பத்தி நிலையத்தினை சுற்றியுள்ள கிணறுகளில ஆரம்பித்து ஒவ்வொரு திசைகளிலும் 2 கிலோமீற்றர் தூரத்திற்கு நீர் மாதிரிகள் சேகரிக்கப்படவுள்ளது. கிணறுகளில் நீர் மாதிரிகளை பெற்றுக் கொள்வதற்காக நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. நீர் மாதிரிகளை சேகரிக்கும் நடவடிக்கைகளில் பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள்.

மேலும் மின்னுற்பத்தி நிலைய பிரதேசத்தில் 50 மீற்றர் இடைவெளி யில் உள்ள வலையமைப்பில் 10 அடி ஆழத்தில் மண் மாதிரிகளும் ஆய்வுகளுக்காக சேகரிக்கப்படு கின்றன.

விஞ்ஞான முறைப்படி பாதுகாப்பான முறையில் நீர் மற்றும் மண் மாதிரிகள் சேகரிக்கப்படுகின்ற னவா என்பதை அவதானிப்பதற்காக தெல்லிப்பழை மற்றும் சுன்னாகம் பிரதேசத்தின் சுகாதார பணி மனையின் அதிகாரிகளும் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

3 குழுக்களாக பிரிந்து இவ் ஆய்வு நடவடிக்கை மிக துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.

இவ்வாறு மேற்கொள்ளப்படும் ஆய்வுகளைக் கொண்டுதான் எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், எண்ணெய் பரவுவதைக் கட்டுப்படுத்தவும் முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ் ஆய்வு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு வடமா காண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன, வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வருகைதந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)


# வேலையாட்கள் தேவை

மில்வேலை தெரிந்தவர்கள்
விற்பனையாளர்
தேவை (இரவு, பகல்) (9471)

தொடர்பு:- 0778473222



# வீடு வாடகைக்கு

இல.62, யாழ்.பல்கலைக்கழக வீதி,
திருநெல்வேலியில்
வீடு வாடகைக்கு உண்டு. (9471)

தொடர்பு:- 0778473222


## படையினர் தடுப்பில்...

மாவட்டச் செயலகத்திற் கு முன்பாக நேற்றயதினம் நடத்தியிருந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்த தந்தை ஒருவரே மேற்கண்டவாறு கண்ணீர் மல்க உருக்கமான கோரிக்கையினை புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவிற்கு விடுத்துள்ளார்.

மேற்படி தந்தை மேலும் குறிப்பிடுகையில், நாங்கள் கிளிநொச்சி - வலைப்பாடு பகுதியில் இருந்தபோது விடுதலைப் புலிகள் தங்கள் அமைப்பில் எனது பிள்ளையை இணைத்துக் கொண்டனர். பின்னர் பிள்ளையுடன் எவ்விதமான தொடர்புகளும் எனக்குகிடைக்கவில்லை.

அதற்குப் பின்னர் 2009-ம் ஆண்டு 5-ம் மாதம் என்னுடைய பிள்ளை படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வவுனியா- ஓமந்தை சோதனைச் சாவடியில் நின்றதை என்னுடைய உறவினர்கள் நேரடியாகவே பார்த்திருக்கின்றனர். அதன் பின்னர் எவ்விதமான தகவல்களும் எனக்கு கிடைக்கவில்லை.

அதற்கும் பின்னர் 2011-ம் ஆண்டு 12-ம் மாதம் 10-ம் திகதி பத்திரிகைகளில் வெளியான புனர்வாழ்வு அளிக்கப்படும் பிள்ளைகளின் புகைப்படத்தில் என்னுடைய பிள்ளை மகேந்திரம் நதியா காணப்படுகின்றார். அதற்குப் பின்னர் நான் இலங்கையில் உள்ள 34 முகாம்களிலும் தேடிப்பார்த்தேன் எனக்கு எவ்விதமான பதிலும் கிடைக்கவில்லை.

மேலும் என்னுடைய மகளுடன் இருந்ததாக கூறப்படும் பிள்ளை ஒன்றை நான் மன்னார் மடு பகுதியில் சென்று சந்தித்திருந்தேன். அவள் எனக்கு கூறியிருந்தாள். என்னுடைய மகளுடன் தான் வவுனியா - கதிர்காமர் முகாமில் தங்கிருந்ததாகவும் அதன் பின்னர் எனது மகளை இடமாற்றி விட்டார்கள் எனவும் கூறினார்.

எனக்கு நம்பிக்கையிருக்கின்றது. என்னுடைய மகள் உயிருடன் இருக்கின்றாள். அவளை மீட்டுக் கொடுங்கள். புதிய ஜனாதிபதி எங்கள் விடயத்தில் கருசனை காட்ட வேண்டும். எங்கள் பிள்ளைகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் எங்கே இருக்கின்றார்கள்? என்ற விடயம் எமக்கு தெரியவேண்டும்.

இதேவேளை புஸ்பராஜா புஸ்பானந்தன் மற்றும் இராசன் இரவீந்திரன் ஆகியோரின் உறவினர்கள் கூறுகையில், புஸ்பராஜா புஸ்பானந்தன் யாழ்.நெல்லியடி பகுதியில் வைத்து 2007-ம் ஆண்டு 8-ம் மாதம் 10-ம் திகதி காணாமல் போனார். இராசன் இரவீந்திரன் என்பர் சாவகச்சேரி மீசாலை பகுதியில் வைத்து காணாமல்போனார். இவர்கள் பற்றியும் எவ்விதமான தகவல்களும் இல்லை. பின்னர் 2009-ம் ஆண்டு 10-ம் மாதம் 11-ம திகதி வெளியான, பத்திரிகை ஒன்றில் பிரசுரமாகியிருந்த தகவல் ஒனறில் எங்களுடைய உறவினர்களின் பெயர்களும் இருக்கின்றன. ஆனால் பின்னர் தேடிப் பார்த்த போது அவர்களையும் காணவில்லை. அவர்கள் பதியப்பட்ட தகவலில் படையினரின் தடுப்பில் உள்ளவர்கள் என குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால் படையினரிடம் சென்று விசாரித்தபோது. தாங்கள் விசாரணைக்காக தடுத்துவைத்திருக்கிறோம். விசாரித்த பின்னர் விடுதலை செய்வோம் என கூறிவிட்டார்கள்.

அதன் பின்னர் அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? என்ன நடந்தது? என்பனபோன்ற தகவல்களை எவையுமில்லை. நாங்கள் தவித்த நிலையில் பரிதாபகரமாக இருக்கிறோம். எங்கள் உறவுகளையும் புதிய ஜனாதிபதி மீட்டுக்கொடுக்கவேண்டும் என உறவினர்கள் உருக்கமாக கோரிக்கை விடுத்தனர். (செ-4)

## அரசின் புதிய குற்றச்...

விமானத்தை விற்பனை செய்யும் நிறுவனம் இலவசமாக ஏறபடுத்திக் கொடுக்கத் திட்டமிட்டிருந்தது.

இந்த விசேட தொகுதிக்கான செலவு 15 மில்லியன் டொலர்கள் என்ற போதிலும் அதனை இலவசமாகவே குறித்த நிறுவனம் வழங்கவிருந்தது.

இந்த விடயத்தை அரசாங்கத் தரப்பினர் பிழையான வகையில் மக்கள் முன் எடுத்துச் சென்றுள்ளனர்.

ஜனாதிபதி செயலகம் பல மில்லியன் ரூபாய் இந்த ஆண்டு செலவிற்காக ஒதுக்கியிருந்தது என்ற குற்றச்சாட்டிலும் உண்மையில்லை.

2015-ம் ஆண்டுக்காக 9593 மில்லியன் ரூபாயே ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், இது ஜனாதிபதியின் பராமரிப்பு பணிகளுக்காக மட்டுமான நிதி அல்ல.

இதில் பல்வேறு கருமங்களை ஆற்ற வேண்டிய கடப்பாடு காணப்படுகின்றது.

ஜனாதிபதிக்கான செலவுகளுக்காக 2750 மில்லியன் ரூபாயே ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஜனாதிபதி மாளிகைகள் குறித்தும் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டுள்ளன.

சில மாளிகைகள் அந்நிய ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டவை. சில முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜெயவர்தன மற்றும் ரணசிங்க பிரேமதாச ஆகியோரினால் கட்டப்பட்டவை. நான் இந்த ஜனாதிபதி மாளிகையை நிர்மாணிக்கவில்லை.

வாகனங்கள் ஒப்படைக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டையும் நிராகரிக்கின்றேன்.

அனைத்து வாகனங்களையும் நாம் ஒப்படைத்துவிட்டே வெளியேறினோம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (செ-11)

## எனக்கு...

சென்று விட்டனர்.

திஸ்ஸவை பார்த்தேன். அவ்விடத்தில் கடற்படையைச்சேர்ந்த அமரவீர என்பவர் இருக்கின்றார். துப்பாக்கியை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டிலேயே அவரை கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். அவர் தன்னுடைய உத்தியோக பூர்வ துப்பாக்கியையே வைத்திருந்துள்ளார். அவ்விருவரையும் நான் பார்த்தேன்.

பொதுத்தேர்தலில் பிரதமர் வேடபாளராக போட்டியிடுமாறு எனக்கு அழைப்பு விடுக்கவில்லை. எனக்கு அதுதொடர்பில் எதுவுமே தெரியாது. எங்கே கூட்டம் நடைபெறுகின்றது என்று எனக்கு தெரியாது. கிராமத்திலிருந்து நான் இன்று (நேற்று) தான் வந்தேன்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுககு சவாலாக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக களமிறக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தேசிய சுதந்திர முன்னணி, பிவித்துரு ஹெல உறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி மறறும் இடதுசாரி முன்னணி ஆகியன இணைந்து கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போது கருத்து தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (செ-11)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org